தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 40 ரூபா • தீபம் 140 • 29.04.2018






## இளைஞர் அணி மாநாட்டின் பின்னணி

## குண்டு வைத்தவர்களை காட்டிக்கொடுக்காத புலிகள்

## சுமந்திரனின் ‘Strategy ஆனோல்ட்’

# விக்னேஸ்வரனின் ‘COUNTER ATTACK’ பிளான்கள்



# கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்

**வடக்கு மாகாணத்தின் பனை தென்னை வள உற்பத்திப் பொருட்களை அதிகம் பெற்று தரும் ஒரே நிறுவனம் கிளிநொச்சி பனை தென்னை வள கூட்டுறவு சங்கம்**

நீண்ட கால வாழ்வுக்கும் நீரிழிவு நோய்க்கும் சிறந்த அரு மருந்தான வெல்ல கட்டி தயாரிப்புக்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உறவுகளும் எமது உற்பத்திப் பொருட்களை விலை கழிவுடன் எமது தலைமைக் காரியாலமான A9 வீதி, கரடிபோக்கு, கிளிநொச்சி என்னும் முகவரியிலும் மற்றும் கண்டாவளை பகுதியில் அமைந்துள்ள வெளிக்கண்டல் வெல்ல உற்பத்தி தொழிற்சாலையிலும் பெற்றுக் கொள்ளலாம்.






எமது பொருட்களை முற்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளும் வாடிகையாளர்களுக்கு விசேட விலைகழிவு வழங்கப்படும்.

A9 வீதி, கரடிபோக்கு, கிளிநொச்சி
A9, Road, kardipoke juncation, kilinochchi
**T.P: 021 228 3635**
**021 492 4218**







TOPAZ Mall (Pvt) Ltd.

TOPAZ
No.01 Shop in Jaffna

ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



We are Specialist in
Wedding suits, Wedding Sarees , Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items

| TOPAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
|---|---|---|
| No 72, Grand Bazaar Jaffna Tel 021 222 4743 Fax 021 222 7645 | No 80/24, Kasthuriyar Road Jaffna Tel 021 222 4643 | No 195, Power House Road Jaffna Tel 021 222 4933 021 221 9933 |

Email : topazagn@gmail.com

coustomer is king

TILKO hotels

# TILKO
## JAFFNA CITY HOTEL






**Mob : 077 780 393, 0777 696 443**

Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 5969, Fax: 021 222 7291
e-mail: tilko.tilak@gmail.com Web: www.cityhoteljaffna.com

# முதலமைச்சரிற்கு கடிவாளம் போடவே இளைஞரணி மாநாடு!

தமிழ்மக்கள்பேரவைக்குள்சிக்கல்என தீபத்தில் சில வாரங்களின் முன்னர் ஒரு செய்தி வெளியிட்டிருந்தோம். வாசகர்களிற்கு நினைவிருக்கலாம். தவற விட்ட வாசகர்களிற்காக மிக சுருக்கமாக அந்த குறிப்பிடுகிறோம்.

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ் மக்கள் பேரவையாக தேர்தலில் களமிறங்க வேண்டுமென தமிழ் தேசிய மக்கள் முன்னணி விரும்பியது. முயன்றது. பேரவைக்குள் இருந்த பலரும் அதை விரும்பினர். ஆனால் முதலமைச்சர் அதற்கு இடம்கொடுக்கவில்லை. பல சுற்று பேச்சுக்கள் நடந்தும் முதலமைச்சர் விடாப்பிடியாக நின்றார். அதாவது, தமிழ் மக்கள் பேரவையென்ற பெயரை யாரும் பயன்படுத்துவதை அவர் விரும்பவில்லை.

இது போதாதென, தமிழ் மக்கள் பேரவையின் செயற்குழுவில் கட்சிகள் எதையும் அவர் இணைக்கவில்லை. இதனால் அதிருப்தியடைந்த தமிழ் மக்கள் பேரவையின் அண்மைய ஓரிரு கூட்டங்களில் கலந்துகொள்ளவில்லை. இப்போதைய நிலவரப்படி, தமிழ் மக்கள் பேரவைக்குள் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இல்லை.

தமிழ் மக்கள் பேரவைக்குள் இல்லையென்பதாலேயே, அதே போன்ற சாயலில் தமிழ் தேசிய பேரவையென்ற பெயரில் கடந்த தேர்தலில் களமிறங்கியிருந்தார்கள்.

அந்த முரண்பாடு தீராத நிலையில், அடுத்த சிக்கலை தமிழ் மக்கள் பேரவை எதிர்கொண்டுள்ளது. இம்முறை தமிழ் மக்கள் பேரவைக்குள் இருந்து வெளியேறலாமென கருதப்படுவது ஒரு கட்சியல்ல. ஒருவர் தான் வெளியேறலாமென கருதப்படுகிறது.



தமிழ் மக்கள் பேரவைக்குள் இருந்து முதலமைச்சர் வெளியேறு கிறாரோ இல்லையோ, அவர் வெளியேறலாமென பேரவையின் பிரமுகர்கள் அனைவரும் பயப்பிடு கிறார்கள். அதன் எதிரொலிதான் யூன் மாத தொடக்கத்தில் யாழ்ப் பாணத்தில் நடக்கவுள்ள இளைஞர் மாநாடு!

இந்தியா செல்வதற்கு முன்னர் முதலமைச்சர் அனுப்பியவாராந்த கேள்வி பதிலில், தனி அரசியல் கட்சியொன்றின் மூலம் அடுத்த அரசியல் பிரவேசத்திற்கான தெளிவான சமிக்ஞைகளை முதலமைச்சர் வெளியிட்டிருந்தார். இது பேரவைக்கு எதிர்பாராத அடியாக அமைந்துவிட்டது.

பேரவையை மக்கள் மயப்பட்ட இயக்கமாக வளர்த்து, இதன்மூலம் அடுத்த மாகாணசபை தேர்தலை எதிர்கொள்வதென்பதே அதிலுள்ள பிரமுகர்களின் நோக்கம். ஆனால் முதலமைச்சர் அவர்களின் எதிர் பார்ப்பின்படி செயற்படாமல், தனி அரசியல் கட்சி பற்றிய சமிக்ஞையை வெளியிட்டு விட்டார்.

வெளியேறிய முதலமைச்சரை மீளவும் பேரவைக்குள் இழுத்து வைத்து, பேரவையின் மூலம் அடுத்த மாகாணசபை தேர்தலை எதிர்கொள்வதே பேரவையிலுள்ள வர்களின் திட்டம். முதலமைச்சரை மீண்டும் பேரவைப்பக்கம் திருப்ப ஒரே வழி பேரவைக்கும் கணிசமான மக்கள் ஆதரவு உள்ளதென்பதை காண்பிப்பதே. அதற்காகவே இந்த இளைஞர் அணி மாநாடு.

# தீபம் சொன்னதையே ஈ.பி.ஆர்.எல்.எவ் சொன்னது!

வவுனியா நகரசபை தலைவர் தெரிவின் முன்னர் திரைமறைவில் நடந்தவை என்னவென்பதை கடந்தவாரம் தீபத்தில் விலாவாரியாக குறிப்பிட்டிருந்தோம். அந்த தகவல்கள் சரிதான் என ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளனர் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் தலைவர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர்.

வவுனியா நகரசபையில் ஆட்சியமைக்க தமிழர் விடுதலை கூட்டணியிடம் ஆதரவு கோரி தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரமுகர்கள் தொடர்பு கொண்டனர், இதன்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் எல்லோரும் வாருங்கள், ஒன்றாக இருந்து கதைத்து தமிழ் தேசிய கூட்டமைப்பபை பதிவு செய்வது, யாப்பு உருவாக்குவது பற்றி பேசுவோம் என ஈ.பி.ஆர்.எல்.எவ் தரப்பிலிருந்து பதிலளிக்கப்பட்டதை வெளியிட்டிருந்தோம்.

கடந்தவாரம் சுரேஷ் பிரேமச் சந்திரன், சிவசக்தி ஆனந்தன் வெளி யிட்ட அறிக்கைகள் அந்த தகவலை உறுதிசெய்துள்ளன. தமது நிபந்தனைகளை கேட்டதும், கூட்டமைப்பின் தலைவர்கள் அதன்பின்னர்தம்முடன் தொடர்புகொள்ளவில்லையென இருவரது அறிக்கையிலும் குறிப் பிடப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை தலைவர் தெரிவிற்கு ஓரிரு நாட்களே இருந்தபோது, யாப்பு உருவாக்க கூட்டமைப்பின் தலைவர்களை பேச்சுக்கு அழைத்தது ஒரு அரசியல் காய்நகர்த்தல் என்பதை ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம். கூட்டமைப்பை பதிவு செய்வ தென்றாலே தமிழரசுக்கட்சிக்கு அலர்ஜி. அப்படி அழைத்தால் அந்த பக்கமே அவர்கள் தலைவைத்தும் படுக்கமாட்டார்கள் என்பது ஈ.பி.ஆர். எல்.எவ் இற்கும் தெரிந்திருந்தது. வவுனியா நகரசபை தொடர்பான சர்ச்சை ஏற்படும்போது, "நாங்கள் பேச அழைத்தும் கூட்டமைப்பினர் வரவில்லை" என ஈ.பி.ஆர். எல்.எவ் காரணம் கூறும் என்பதை கடந்தவாரமே தீபம் குறிப்பிட்டிருந்தது. இப்பொழுது அதுதான் நடந்திருக் கிறது.




# மூன்றாவது வழியும் அடைபடுகிறதா தவராசாவிற்கு?

வடக்கு எதிர்க்கட்சி தலைவர் சி.தவ ராசா அண்மையில் அவுஸ்தி ரேலியாவிற்கு தனிப்பட்ட பயணம் செய்திருந்தார். இந்த பயணத்தின் போது, முகப்புத்தகத்தில் ஒரு தகவலும் எழுதியிருந்தார். அரசிய லிற்கு சிறிது ஓய்வு கொடுத்தி ருக்கிறேன், நிரந்தர ஓய்விற்கும் இது ஒத்திகையாக இருக்கலாம் என.

ஆனால் தற்போதைய நிலவரப்படி இந்த மாகாணசபை ஆட்சிக்காலத் தின் பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்கும் முடிவிற்கும் அவர் வரலா மென தெரிகிறது. பெரும்பாலும் அப்படியான எண்ணம் அவருக்குள் வந்துவிட்டதென்பதுதான் அவருக்கு நெருக்கமானவர்களின் தகவல்.

"இப்பொழுது அவர் சில தூண்டில்கள் வீசிப்பார்க்கிறார். அதில் இரை சிக்கினால் அரசியலில் தொடர்வார்" என்ற அபிப்பிராயமும் உள்ளது.

தவராசாவின் அரசியல் அடை யாளம் ஈ.பி.டி.பியின் மூலம் ஏற்பட் டது. ஆனாலும், ஈ.பி.டி.பிக்கும் அவருக்கும்தகராறு ஏற்பட்டு,மீண்டும் சேர்வதற்கே வாய்ப்பில்லையென்ற நிலைமை உருவாகிவிட்டது. ஈ.பி.டி.பி யின் மூலமே தவராசா மாகாணசபை உறுப்பினராகி, எதிர்க்கட்சி தலை வரானார்.

அடுத்த மாகாணசபை தேர்தலில் ஈ.பி.டி.பி அவருக்கு ஆசனம் வழங்கப்போவதில்லை. இப்பொழுது அவருக்கு மூன்று தெரிவுகள் இருந்தன. ஒன்று விக்னேஸ்வரன் கூட்டணியில் இணைவது, அல்லது, தமிழரசுக்கட்சியில் இணைவது. மூன்றாவது, தனித்து இயங்குவது.

இதில் மூன்றாவது தெரிவை செய்ய தவராசா தயாரில்லை. அவரால் இது முடியாது.

அண்மைய நடவடிக்கைகளை கவனித்தவர்கள், அவர் தமிழரசுக் கட்சிக்குள் இடம் பிடிக்கும் அரசியலை செய்வதாகவே தெரிகிறது. மாகாணசபைக்குள் முதலமைச் சருக்கு தொடர்ச்சியாக குடைச்சல் கொடுத்து, அவரை செயலற்றவராக்கி னால் தமிழரசுக்கட்சிக்குள் அவர் மீது சாதக அபிப்பிராயம் ஏற்படலா மென்ற அடிப்படையில் மாகாண சபைக்குள் தொடர்ந்து குடைச்சல் கொடுக்கிறார் போல தெரிகிறது.

முதலமைச்சரிற்கு எதிரான நம்பிக் கையில்லா பிரேரணை சமர்ப்பிக்க சமயத்தில், அது வாக்களிப்பிற்கு வந்தால் ஆதரவளிக்கிறேன் என்ற உறுதியை அவர் தமிழரசு தலைவர் களிற்கு கொடுத்ததாகவும் ஒரு தகவலுண்டு.

தமிழரசின் சில தலைவர்கள் தவராசா விசயத்தில் சாதகமான அபிப்பிராயத்தில்இருந்தாலும்,பெரும் பாலானவர்கள் தவராசாவை கட்சிக்குள் எடுக்க விரும்பவில்லை. இதை தவராசாவும் நாடி பிடித்து பார்த்து வைத்திருக்கிறார். தமிழரசுக் கட்சியின் சில எம்.பிக்களுடன் நெருக்கமாக இருந்தபோதும், தமிழரசுக்கட்சியென்ற எல்லைக்குள் அவரால் நுழைய முடியாமலிருக்கிறது. அடுத்த மாகாணசபை தேர்தல் காலம் வரையும்தான் அவகாசம் உள்ளது. அதற்குள் ஏதாவது கிரீன் சிக்னல் வீட்டு பக்கத்திலிருந்து வந்தாலே தவிர, மற்றும்படி அவர் அரசியலில் இருந்து ஒதுங்குவதே பெரும்பாலும் நடக்குமென்கிறார்கள்.

# தமிழ் மக்கள் பேரவையால் மே தினத்தை மறந்த அனந்தி!

வடமாகாண கூட்டுறவு அமைச்சு நடத்தும் மே தின நிகழ்வுகள் இந்த வருடம் நடக்காதென தெரி கிறது. கூட்டுறவு திணைக்கள அதிகாரிகள் மே தின நிகழ்வுகள் நடத்த வேண்டுமென, அமைச்சர் அனந்தி சசிதரனிடம் கூறிய போதும், அமைச்சர் அனந்தி அதில் கவனமெடுக்கவில்லையென தெரிகிறது.

வடக்கு கூட்டுறவு அமைப்புக்கள் ஒவ்வொரு வருடமும் மே தின நிகழ்வுகளை நடத்தி வந்தன. கிராமிய உழைப்பாளர்களின் நிறுவனமான கூட்டுறவு அமைப்புக்களின் மூலம் சர்வதேச உழைப்பாளர் தினத்தை வடக்கு மாகாண விவசாய, கூட்டுறவு அமைச்சு கடந்த மூன்று வருடங்களாக பெருமெடுப்பில் நடத்தியிருந்தது. இந்த மே தின நிகழ்வுகள் வடக்கு கூட்டுறவு அமைப்புக்களிற்குள் உறவுப் பாலத்தையும் ஏற்படுத்தியிருந்தது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மே தின நிகழ்வுகள் நடந்திருந்தன.

வடக்கு அமைச்சரவை மாற்றத்தின் பின் கூட்டுறவுத்துறை, அமைச்சர் அனந்தியின் கீழ் வந்தது. அவர் அமைச்சு பதவியேற்ற பின் நடக்கும் முதலாவது மேதின நிகழ்வு இது. வழக்கம்போல இம்முறையும் மே தின நிகழ்வுகளை நடத்துவதை பற்றி அதிகாரிகள், அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுசென்றுள்ளனர். எனினும், அமைச்சர் இதற்கு உரிய பதிலளிக்கவில்லையென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தமிழ் மக்கள் பேரவை யூன் மாத முற்பகுதியில் நடத்த திட்டமிட்டுள்ள இளைஞர் மாநாட்டின் ஒழுங்கமைப்பாளர்களில் ஒருவராக அமைச்சர் அனந்தி சசிதரனும் நியமிக்கப்பட்டுள்ளார். மாகாணசபை அமைச்சராக நிறை வேற்ற கடமையை நிறைவேற்றாமல், தமிழ் மக்கள் பேரவைக்குள் இன்னொரு பொறுப்பை ஏற்றது சரியானதா?

# இதை நம்பலாமா?




அரசியலமைப்பு உருவாக்க பணிகளில் இந்த வருடத்திற்குள் முன்னேற்றம் தென்படாவிட்டால், நிர்வாக முடக்கல் போராட்டம் நடத்தப்படும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கூறியிருக்கிறார். வடக்கு கிழக்கில் ஏற்கனவே நிர்வாக முடக்கல் போராட்டமொன்றை நடத்திய பட்டறிவு தமிழரசுக்கட்சிக்கு இருக்கிறது. இன்றுள்ள தலைவர்கள் யாருக்கும் அதில் நேரடி அனுபவம் இல்லாவிட்டாலும், வரலாற்றின்வழி அந்த பட்டறிவு தமிழரசுக்கட்சிக்கு கடத்தப்பட்டிருக்கும்.

நிஜமாகவே தமிழரசுக்கட்சி அப்படியொரு போராட்ட முறையை கையிலெடுக்குமா என்பது தெரியவில்லை. ஆனால், அந்த போராட்டமுறைமை சுலபமான ஒன்றல்ல. மகாத்மா காந்தி ஒரு முறை சொல்லியிருந்தார் அகிம்சை போராட்டமென்பது சாகப்பயந்தவர்களின் போராட்ட முறையல்ல என. அதாவது, ஆயுத போராட்டத்தை போலவே தமது உயிரையும் பணயம் வைத்து போராட தயாராக உள்ளவர்களாலேயே இப்படியான போராட்டங்களை நடத்த முடியும்.

இன்றைய தமிழரசுக்கட்சி அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர்களில் யார் இதற்கு தயாராக உள்ளனர்? மேல் மட்ட உறுப்பினர்கள் வயதானவர்கள் என காரணம் சொல்லி ஒதுக்கினாலும், இரண்டாம் நிலை இளம் உறுப்பினர்களில் எத்தனை பேர் இதற்கு தயாராக உள்ளனர்?

விடுதலை புலிகளின் வீழ்ச்சியின் பின்னான காலத்தில், ஓரளவிற்காகவது ரிஸ்க் . எடுக்க தயாராக இருந்த ஒருவரையாவது இந்த அணியிலிருந்து அடையாளம் காட்ட முடியுமா?

எல்லாவற்றிற்குமே இல்லையென்று தான் பதில் வரும்.

இப்படியான பலவீனமான அர்ப்பணிப்புள்ள செயற்பாட்டியக்கத்தை வைத்துக் கொண்டு நிர்வாக முடக்கல் நடக்குமென்றோ,அப்படி நடந்தாலும் அது வினைத்திறனானதாக இருக்குமென்றோ எப்படி எதிர்பார்க்கலாம்?

இன்னொரு விசயமும் உள்ளது. 2009 இன் பின்னர் இப்படியான அறிவித்தலை விட்ட கூட்டமைப்பின் முதலாவது பிரமுகர் சுமந்திரனுமல்ல. கடைசிக்கு முதல் பிரமுகர் அவர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் உள்ள அங்கத்துவக்கட்சிகளான ரெலோ, தமிழரசுக்கட்சிகளின் தலைவர்கள் இப்படியான போராட்ட அறிவிப்புக்களை ஏற்கனவே வெளியிட்டு விட்டனர். பங்காளி கட்சிகயான புளொட் தலைவர் சித்தார்த்தன் மட்டும்தான் இன்னும் இப்படியான அறிவிப்பொன்றை விடாமல் எஞ்சியிருக்கிறார். அதனால்தான், போராட்ட அறிவிப்பை வெளியிட்ட கூட்டமைப்பின் பிரமுகர்களில் கடைசிக்கு முதல் ஆள் என்று குறிப்பிட்டிருந்தோம்.

2013 இறுதிக்குள் இனப்பிரச்சனை தீர்கப்படாவிட்டால்ரெலோ அமைப்பின் தலைவர் சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தில் குதிக்கப்போகிறார் என, அவரது கட்சிக்காரர்களே சுவரொட்டிக்கள் அடித்து ஒட்டினார்கள்.

பின்னர் 2014 இறுதிப்பகுதியில் மாவை சேனாதிராசா அடுத்த வெடிகுண்டை வீசினார். "போராட்டம் வெடிக்கும்" என அவர் எச்சரித்தார். ஈ.பி.ஆர்.எல்.எவ் இப்பொழுது கூட்டமைப்பிற்குள் இல்லை. ஆக, புளொட் மட்டும்தான் மிச்சமிருக்கிறது. அவர்களும் இப்படி வாயால் ஏதாவது வடை சுடலாம்.

செல்வம் அடைக்கலநாதனின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது 2013 இல். அந்த வருடத்திற்குள் இனப்பிரச்சனை தீர்வில் ஒரு துரும்பளவு முன்னேற்றமும் இருக்கவில்லை. ஆனால், சாகும்வரையான உண்ணாவிரதத்தை பற்றி செல்வம் அடைக்கலநாதனும் கதைக்கவில்லை, மக்களும் கேட்கவில்லை.

இதேவிதமான காரணத்தை சொல்லியே, மாவையின் போராட்டம் வெடிக்கவிருந்தது. ஆனால் அதற்குள் ஆட்சி மாற்றம் நிகழ்ந்து விட்டது. மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்கும், மைத்திரியின் ஆட்சிக்குமிடையிலான வித்தியாசம் சிறிதளவு ஜனநாயக இடைவெளியும், மத்தியில் கூட்டமைப்பின் செல்வாக்கும் தான். இனப்பிரச்சனை தீர்வு முயற்சியில் குறிப்பிடும்படியான எந்த முன்னேற்றமும் கிடையாது. ஆனால் மாவையருக்கு இதுவே பரம திருப்தியாக்கும். மகனையும் அரசியலுக்கு கொண்டு வந்துவிட்டு, மாகாணசபையில் களமாட தயாராகிக் கொண்டிருக்கிறார்.

போராட்ட அறிவிப்பில் இப்படியான பெருமைமிகு வரலாற்றை கொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் முகாமிலிருந்து நிர்வாக முடக்கல் போராட்ட அறிவிப்பு வந்திருக்கிறது.

வடிவேலு பாணியில்தான் கேட்க தோன்றுகிறது இதை நம்பலாமா?

இது கொஞ்சம் வில்லங்கமான பக்கம்

## வாராவாரம் வறுப்போம்



# கேள்வியும் பதிலும் நாமே

நிருபர்: முள்ளிவாய்க்கால் நினைவுநாள் வருகிறது. இம்முறை அஞ்சலி நிகழ்வுகளை எப்படி திட்டமிடுகிறீர்கள்?

பொ.கஜேந்திரகுமார்: முள்ளிவாய்க்கால் நிகழ்வு எப்படி அனுட்டிக்கலாம் என்பதை தீர்மானிப்பதற்கு முன்னர், எப்படி அனுட்டிக்ககூடாது என்பதை தீர்மானித்துள்ளோம். அவர்கள் கலந்துகொள்ளக்கூடாது என்பதே எமது இப்போதைய நிலைப்பாடு. மற்றும்படி நிகழ்வை எப்படி நடத்துவதென இனித்தான் திட்டமிட வேண்டும்.

நிருபர்: தமிழர்களை ஒன்றுபடுத்த வேண்டியதுதானே இனி அரசியல் தலைமைகளின் வேலை. எல்லா விசயத்திலும் இப்படி பிரிவினையை வளர்ப்பது நல்லதில்லையே?

பொ.கஜேந்திரகுமார்: இல்லை. தமிழ் தேசியம் என்பது சமரசமில்லாதது. செய்வதையெல்லாம் செய்துவிட்டு, பின்னர் ஒற்றுமையென்று பேசிக்கொண்டு வர முடியாது. அதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம்.

நிருபர்: சரி, யாரெல்லாம் நினைவேந்தலிற்கு வரலாம்?

பொ.கஜேந்திரகுமார்: நான் வேறுவிதமாக பதிலளிக்கிறேன். யாரெல்லாம் தமிழின விரோதிகளோ, யாரெல்லாம் தமிழினத்தின் அழிவிற்கு துணை போனவர்களோ, யாரெல்லாம் தமிழினம் அழிக்கப்பட்டபோது கண்ணை மூடிக்கொண்டும், வெளிநாட்டில் போனை ஓஃவ் பண்ணி வைத்துக் கொண்டும் இருந்தார்களோ, யாரெல்லாம் சர்வதேச விசாரணையை நிராகரித்தார்களோ, யாரெல்லாம் போர்க்குற்ற பொறிமுறையை நீர்த்து போக செய்தார்களோ, யாரெல்லாம் தமிழர்களை கடத்தினார்களோ, யாரெல்லாம் 2009 இன் பின்னரும் ராஜபக்ச அரசுடன் ஒட்டியிருந்தார்களோ அவர்கள் யாரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிற்கு வரக்கூடாது. அவர்கள் வந்தால், முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான எமது உறவுகளின் ஆன்மா மன்னிக்காது.

நிருபர்: இது சிக்கலான பதிலாக இருக்கிறதே. நீங்கள் போட்ட பட்டியலை பார்த்தால், உங்கள் கட்சியை தவிர்ந்த யாருமே நிகழ்விற்கு வரக்கூடாதென கூறுகிறீர்கள் போலுள்ளதே.

பொ.கஜேந்திரகுமார்: பார்த்தீர்களா, நீங்களே ஒப்புக்கொள்கிறீர்கள், தமிழ் தேசியத்திலிருந்து ஒரு அணுவளவும் தளம்பாத ஒரே கட்சி தமிழ் தேசிய மக்கள் முன்னணிதான் என்று. நாம் எப்பொழுதும் கௌ்கைவழி நடப்பவர்கள். முள்ளிவாய்க்கால் இனவழிப்பிற்கு நீதி கேட்பதை கைவிட மாட்டோம். தமிழ் தேசிய கூட்டமைப்பு ஜெனீவாவிற்கு ஒருநாள்தான் போய் வந்தார்கள். நாம் ஒரு வாரம் தங்கியிருந்து, எல்லா நாட்டு பிரதிநிதிகளையும் சந்தித்தோம். முள்ளிவாய்க்கால் நினைவுநாளிலும் எமது மக்களிற்கு நீதி கேட்போம்.

நிருபர்: சரி, யாழில் இரண்டு உள்ளூராட்சிசபைகளில் அதிக ஆசனம் கைப்பற்றியும் ஏன் ஆட்சியமைக்க முயலவில்லை?

பொ.கஜேந்திரகுமார்: நாங்கள் பதவிக்கு ஆசைப்பட்டவர்கள் அல்ல. கொள்கை வழி நடப்பவர்கள். கூட்டமைப்பினர் பதவிக்கு ஆசைப்பட்டு ஈ.பி.டி.பி, தென்னிலங்கை கட்சிகளுடன் இரகசிய பேரம் நடத்தினார்கள். நாம் அதற்கு ஆசைப்பட்டவர்கள் அல்ல.

நிருபர்: உள்ளூராட்சிசபையொன்றை கைப்பற்றும் நோக்கமே உங்களிடம் தெரியவில்லையே... ஒரு சபையை திறம்பட நிர்வகித்தால்தானே வாக்களித்த மக்களிற்கும் நம்பிக்கை ஏற்படும்.

பொ.கஜேந்திரகுமார்: இல்லை. எமது அரசியல் கொள்கைவழி அரசியல். பதவிகளிற்காக சோரம் போகப்போவதில்லை. நாம் சபைகளை தனித்து நிர்வகிப்பதென்றால், மக்கள் அதற்கு அங்கீகாரம் தர வேண்டும். இனப்படுகொலை நடக்கவில்லையென சிறிலங்கா அரசுக்கு வெள்ளையடித்தவர்கள், இனப்படுகொலையின் பங்காளியாக இருந்தவர்கள், இனப்படுகொலையை நடத்தியவர்களுடன் ஒரே சபையில் எப்படி ஒன்றாக நாம் உட்கார்ந்திருப்பது? மக்கள் எம்மை தனித்த சக்தியாக அந்த சபைகளில் அமர்த்தும்போது, நாம் திறமையான நிர்வாகத்தை நடத்தி காட்டுவோம்.

நிருபர்: உங்கள் கட்சிக்கு ஏக பிரதிநிதித்துவம் கிடைக்கும்வரை சபைகளை பொறுப்பேற்க மாட்டீர்களா?

பொ.கஜேந்திரகுமார்: இல்லை தம்பி. அப்படி குதர்க்கமாக பேச கூடாது. இது முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்தும் சமயம். இனப்படுகொலையாளிகள், இனப்படுகொலையொன்று நடக்கவில்லையென அரசுக்கு வெள்ளையடித்தவர்கள், எமது மக்களை காட்டிக்கொடுத்தவர்கள் யாருமே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்விற்கு வரக்கூடாது. அவர்களை உள்ளீர்த்து நடக்கும் எதுவும் உண்மையான அஞ்சலியாக இருக்காது.




# குண்டு வைத்தவர்களை கடைசிவரை காட்டிக்கொடுக்காத புலிகள்!

கே.ராகோத்தமன்

சம்பவம் நடந்த மே 21ம் திகதி இரவு அந்த கமராவைக் கண்டெடுத்த காவல் துறை ஊழியர், முறைப்படி அதைத் தடய அறிவியல் துறையினர் வசம்தான் ஒப்படைத்திருக்கிறார்.

அந்த பிலீம் ரோல், தடய அறிவியல் துறை வல்லுநர் டாக்டர் சந்திரசேகரனிடம் தரப்பட்டிருக்கிறது. டாக்டர் சந்திரசேகரனுக்கும் ஹிந்து நாளிதழுக்கும் இடையில் உள்ள நெருக்கம் டிபார்ட்மெண்டில் அனைவருக்கும் தெரியும்.

ஸ்ரீபெரும்புதூருக்கு அவர் வந்து சேர்ந்ததே ஹிந்து நிருபரின் காரில்தான். பிலிம் ரோல் கிடைத்ததும் நேரே ஹிந்து அலுவலகம் சென்று ப்ரிண்ட் போட்டுக் கொடுத்துவிட்டு அதன் பிறகுதான் அதை சி.பி.சி.ஐ.டியிடம் கொண்டு வருகிறார்கள்!

இதனோடு சம்பந்தப்பட்ட இன்னொரு விஷயத்தையும் சொல்லி விடுகிறேன். அந்த ஹரி பாபு எடுத்த புகைப்படங்களை வைத்துக்கொண்டு நாங்கள், ராஜிவ் காந்திக்கு மாலையிட வந்தவர்களை அடையாளம் காண முயற்சி செய்துகொண்டிருந்த வேளை.

சம்பவத்தில் காயமுற்று சென்னை அப்போலோ மருத்துவமனையில் படுத்திருந்த மரகதம் சந்திரசேகரின் மகன் லலித் சந்திரசேகரைச் சந்திக்கப்


ஹரி பாபு


மரகதம் சந்திரசேகர்

போயிருந்தேன். (மரகதம் சந்திரசேகரும் அப்போது மருத்துவமனையில்தான் இருந்தார்.) அறையில் அவரும் அவரது மனைவியும் ஒரே மகளும் மட்டும் இருந்தார்கள்.

சி.பி.ஐக்குச் சில தகவல்கள் முன்னதாகக் கிடைத்திருந்தன. லலித் சந்திரசேகருக்கும் லதா கண்ணனுக்குமான தொடர்புகள் குறித்ததகவல்கள் அவை.லதாகண்ணன் அருகே இருந்த பெண்தான் குண்டு வெடிக்கச் செய்தவள் என்கிற வகையில் அவர்களுக்கும் இவர்களுக்கும் ஏதாவது தொடர்பிருக்குமா, என்ன மாதிரியான தொடர்பு என்று நாங்கள் யோசித்துக்கொண்டிருந்தோம்.

வெகு நிச்சயமாக, மரகதம் சந்திரசேகர் அல்லது அவரது மகன் அல்லது மகள் உதவியில்லாமல் அன்றைக்கு விடுதலைப் புலிகளுக்கு மட்டுமல்ல, வேறு யாருக்குமேகூட மாலையிட அனுமதி கிடைத்திருக்காது என்பதால், அந்தப் புகைப்படத்தைக் காட்டி அடையாளம் தெரியுமா என்று கேட்பதற்காக லலித் சந்திரசேகரிடம் எடுத்துச் சென்றேன்.

மருத்துவமனைக் கட்டிலில் படுத்திருந்த அவர், படத்தை வாங்கிப் பார்த்தார். சில வினாடிகள் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, 'யாருன்னு தெரியலியே' என்று வெகு இயல்பாகச் சொன்னார்.அந்த இடைவெளியில், இயல்பான ஆர்வம் உந்த, அருகே நின்றிருந்த அவரது பெண் குழந்தை நெருங்கி வந்து அந்த போட்டோவைப் பார்த்தது.

ஒரு கணத்துக்கும் குறைவான நேரம்தான்! அந்தக் குழந்தையின் முகத்தில் நபரை அடையாளம் கண்டுகொண்டுவிட்ட பாவம் தெரிந்து விட்டது எனக்கு! 'பே... பே...' என்று அது தன்னையறியாமல் கத்தத் தொடங்கிய போதுதான் எனக்கு விஷயமே தெரியும் லலித் சந்திரசேகரின் மகளுக்குப் பேச வராது என்பது!

அடுத்தக் கணம் என்ன ஆகப்போகிறது என்பது அனைவருக்குமே சஸ்பென்ஸாக இருந்தபோது, திடீரென்று ஆவேசம் வந்தவர் போல லலித் அங்கிருந்த தன் மனைவியைப் பார்த்துக் கத்தத் தொடங்கினார்:

'இவளை வெளிய கூட்டிட்டுப் போன்னு உன்கிட்ட சொன்னேனில்ல? இங்க என்ன பண்ணிக்கிட்டிருக்கா இவ?' அந்தச் சத்தம் அபூர்வமானது.

ஆக்ரோஷம் கலந்த பதற்றம் அதில் இருந்தது. அச்சத்தின் வாசனை கலந்த கோபம். நான் ஒரு போலீஸ் அதிகாரி. நூற்றுக்கணக்கான விசாரணைகளைச் செய்தவன். பல்வேறு விதமான மனிதர்களைச் சந்தித்தவன். ஒரு குற்றவாளியைப் பார்த்த மாத்திரத்தில் உடல் மொழியிலேயே அடையாளம் காணக் கூடியவன்.

நான் மட்டுமல்ல. எல்லா அனுபவம் மிக்க அதிகாரிகளும் இதனைச் செய்வார்கள். அந்த மருத்துவமனைச் சூழலில், திடீரென்று அவருக்கு ஏற்பட்ட பதற்றமும் கோபமும் எனக்கு மௌனமாகப் பல விஷயங்களை உணர்த்தின. இந்தப் படத்தில் இருக்கும் பெண்ணை இவருக்கு நிச்சயம் தெரியும். பார்த்திருக்கிறார். ஆனாலும் மறைக்க நினைக்கிறார்.

எதற்கு வம்பு என்று கருதியிருக்கலாம். தெரியாது என்று ஒரு சொல்லில் மறுத்துவிடுவதில் பல சௌகரியங்கள் உள்ளன.வழக்கு, விசாரணை என்ற இழுத் தடிப்புகளிலிருந்து எளிதில் தப்பிக்கலாம்.

எனக்கு லலித் சந்திரசேகரை விசாரிக்க வேண்டும் என்று தோன்றியது. அவரை மட்டுமல்லாமல், மரகதம் சந்திரசேகர், லதா பிரியகுமார் 'அனைவரையும் துப்புரவாக விசாரித்தால், மாலையிட்ட மங்கையை அடையாளம் காண்பது எளிதாக இருக்கும் என்று உறுதியாகத் தோன்றியது.

என் கருத்தை விளக்கிச் சொல்லி, நடந்த சம்பவத்தையும் விவரித்து, கார்த்திகேயனிடம் விசாரணைக்கு அனுமதி கேட்டேன். கிடைத்த பதில்: 'அதையெல்லாம் சீனியர் ஆபீசர்கள் பார்த்துக்கொள்வார்கள்.'

வழக்கின் தலைமைப் புலனாய்வு அதிகாரியாக இருந்தாலும் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் சொல்லிவிட்டபடியால் நான் நினைத்தபடி அவர்கள் யாரையும் என்னால் விசாரிக்க முடியாமலேயே போய்விட்டது.

சீனியர் ஆபீசர்கள் விசாரிக்காமல் இல்லை. ஆனால் அவர்கள் யாரும் உருப்படியாக எந்தத் தகவலையும் கொண்டுவரவில்லை அல்லது அவை பதிவாகவில்லை.

இப்போதும் சொல்கிறேன். மரகதம் சந்திரசேகர் ராஜிவுக்கு எதிராகக் கனவிலும் எதையும் நினைத்துப் பார்த்து அறியாதவர். ஆனால் தன்னையறியாமல் ஒரு குற்றத்துக்குத் துணை போயிருக்கிறார். அவரிடம் முதலிலேயே பேசியிருந்தால், அவர் வீட்டுக்கு வந்தவர்கள் யார் யார், என்ன பேசினார்கள், எப்படி நடந்துகொண்டார்கள் என்கிற அடிப்படை விவரங்களைச் சேகரித்திருக்கலாம்.

லலித் சந்திரசேகரும் அச்சத்தின் காரணத்தால் புகைப்படத்தில் இருந்தவர்களைத் தனக்குத் தெரியாது என்று சொல்லியிருக்கலாம். ஆனால் அவருக்கு அவர்களை அறிமுகம் செய்து வைத்த லலித்தின் நண்பர் டரியல் பீட்டர்ஸுக்குத் தெரியாமலிருக்க வர்ய்ப்பே இல்லை.

சம்பவ இடத்தில் இறந்து போனவர்களுள் அவரும் ஒருவர். மரகதம் சந்திரசேகரைப் பிடித்து மேடையில் ஏற்றிவிட்டுவிட்டுக் கீழே இறங்கிய அவரும் குண்டு வெடிப்பில் இறந்து போனார்.

ஆனால் அதற்கு முன்னால் அவர் மே 30ம் திகதி அமெரிக்காவுக்குச் செல்ல விமான டிக்கெட் வாங்கி வைத்திருக்கிறார்!

அவருடன் சிவராசனோ சின்ன சாந்தனோ பேரம் பேசியிருக்கலாம். காரியத்தை முடித்துக் கொடுத்துவிட்டு நீ அமெரிக்கா போய்விடு, அங்கே உனக்கு நல்ல வேலை ஏற்பாடு செய்து


கார்த்திகேயன்


சின்ன சாந்தன்

தருகிறோம் என்று சொல்லியிருக்கலாம்!

இதற்கு வாக்குமூல ஆதாரம் ஏதுமில்லை. இந்த விவரங்களில் பெரும்பாலானவற்றை எங்களுக்கு விவரித்த சின்ன சாந்தன் இது பற்றி ஏதும் கூறியிருக்கவில்லை. காரணம் மிக எளிமையானது. விடுதலைப் புலிகளின் குறிக்கோள் நிறைவேறுவதற்கு உதவியாக இருந்த யாரையும் அவர்கள் காட்டிக்கொடுக்க விரும்பவில்லை.

அப்படிச் செய்தால், பிறகு வேறொரு சமயத்தில் யாரிடமிருந்தும் எவ்வித உதவியும் கிடைக்காது போய்விடுமே!


இன்னொருவரைக் காட்டிக் கொடுப்பது இருக்கட்டும். சின்ன சாந்தன் ராஜிவ் படுகொலைச் சம்பவம் நடந்த இடத்தில் குற்றவாளிகளான சிவராசன், சுபா, தணு, ஹரி பாபு, நளினி ஆகிய ஐவருடன் ஆறாவதாகத் தானும் இருந்த விஷயத்தைக் கூட எங்களிடம் சொல்லவில்லை!


தொடரும்...

தீபம் லென்ஸ்

# தரப்படுத்தப்பட வேண்டியது வங்கிகளையா? சேவையா?

## தலை சுற்ற வைக்கும் ஊழல் தொடர் 05



மட்டக்களப்பு மாவட்டத்தில் தெளிவுபடுத்தப்படாத ஏழைகளுக்கான உதவித் திட்டங்களால்தான் அதிகமாக சர்ச்சைகளும், மாவட்டம் தொடர்பான எதிர்மறையான புள்ளி விபரங்களை காண்பிப்பதும் ஏற்பட்ட வண்ணமுள்ளன.

வறுமை ஒழிப்பு திட்டத்தை பற்றியும் முக்கியமாக குறிப்பிட வேண்டும். 1999 ஆம் ஆண்டிலிருந்த இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், இத்தனை ஆண்டுகால செயற்திட்டத்தில் போதுமான அடைவுமட்டம் எட்டப்பட்டதா என்ற நியாயமான கேள்வியும் உள்ளது. இந்த செயற்திட்டத்தின் குறைபாடுகள் பற்றிய விமர்சனங்கள் அண்மைக்காலத்தில் சடுதியாக மேலெழுந்துள்ளதையும் கவனிக்க வேண்டும்.

வறுமை ஒழிப்பு செயற்திட்டம் மீதான விமர்சனங்கள் இருந்தும், அதை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் கண்டுகொள்வதில்லை. இந்த விசயத்தில் அவர்கள் எவ்வளவு தெளிவை பெற்றிருக்கிறார்கள் என்ற கேள்வியும் உள்ளது.

சமுர்த்தி வறுமை ஒழிப்பு திட்டத்தில் ஏழை மக்களை வாழ்வாதார ரீதியாக வலுப்படுத்தும் நோக்கில் பல திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. எனினும், அவை பற்றி மக்களிற்கு தெரிவதில்லை. அதிகாரிகளில் சிலரும் அந்த தெளிவுபடுத்தல்களை செய்து, அதன் பலன்களை மக்கள் பெற்றுக்கொள்ள உதவுவதில்லை.

வறுமை ஒழிப்பு செயற்திட்டத்தில் அதிகம் தெளிவுபடுத்தப்படாத நடைமுறைகள் பற்றிய ஒரு அறிமுகத்தை தருகிறோம்.

01.சமுர்த்தி வங்கிகளில் பயனாளிகளை அங்கத்தவர்களாக இணைத்து சிறு குழுக்களை அமைத்து அதன் மூலம் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் எவ்வாறு என்பது இதுவரை உரிய மக்களுக்கு தெளிவுபடுத்தபடாத நிலையே காணப்படுகின்றது. இதன் மூலம் ஏழைகளிடம் சேமிக்கும் பணத்திற்கு உரிய முறையில் பற்றுச்சீட்டுகள் பணம் பெற்றதும் வழங்கப்படுவதில்லை. அதனை கேட்டாவது பெற வேண்டுமென்ற தெளிவும் அனேகமான ஏழைப் பயனாளிகளுக்கு இல்லை.

இப்படியான தெளிவின்மையை தமக்கு சாதகமாக பாவித்த சில அதிகாரிகள் மோசடி செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். தீபத்தில் தொடர்ந்து வெளியாகும் சமுர்த்தி முறைகேடுகள் பற்றிய தொடரை கவனித்தவர்களிற்கு இது புரியும். இந்த மோசடியில் ஈடுபடும் அலுவலர்களிற்கு உரிய தண்டனை கிடைத்ததா என்றால் அதுவும் கேள்விக்குறிதான்.

02. வாழ்வாதர திட்டங்களுக்கு பயனாளிகளை தெரிவு செய்யும் போது அவை மக்களின் தேவை கருதியதாக இருக்க வேண்டியது அவசியம். அந்த பொறுப்புணர்வு அலுவலகர்களிற்கு அவசியம். ஆனால் சில அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையால் திணிக்கப்பட்ட வாழ்வாதார உதவிகளாகவே அமைந்து விடுகின்றன. இதுவே மோசடிகள் இடம்பெற்றுவருவதற்கான காரணமாகவும் ஆகிவிடுகிறது.

பல இடங்களில் வாழ்வாதாரம் என்று வழங்கப்பட்ட பொருட்கள் பல வருடங்கள் கடந்தும் பயன்படுத்த முடியாமலும் அதற்கான உத்தரவாதகாலமும் முடிவடைந்த நிலையில் காணப்படுகின்றது. அத்துடன் ஏழை மக்களின் பெயரை பயன்படுத்தி அதிகாரிகளின் உறவினர்களுக்கும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதுடன் சில அதிகாரிகள் அதனை மக்களுக்கு வழங்காமல் விற்று காசாக மாற்றி கொண்ட சம்பவங்களும் உள்ளன.

03. சமுர்த்தி வங்கிகளில் பயனாளிகள் கடன் பெறும் வேளையில் பெறப்படும் கடன் அதன் நோக்கம் எந்த அளவினாலான கடன் தேவை என்பதனை பயனாளிகளுக்கு தெளிவுபடுத்தப்படாமல் வழங்கப்பட்ட சம்பவங்களும் உண்டு. பின்னர் உத்தியோகத்தர்கள் மோசடியான முறையில் ஏழை பயனாளிகளின் பெயரை பயன்படுத்தி மோசடியான முறையில் கடனைப்பெற்று மீண்டும் கடனை கட்டாது ஏழைகளை ஏமாற்றுதல்.

04. சமுர்த்தி மாதாந்த உதவிக் கொடுப்பனவான முத்திரைக் கொடுப்பனவுகளை அந்தந்த மாதமே உரிய பயனாளிகளுக்கு வழங்காமல் அதனை வைத்துக்கொண்டு ஏழைப் பயனாளிகளின் கடன் அறவீடு மாதாந்த சேமிப்பு தொகைகளை அறவிட்டு கொள்வதனால் பயனாளிகளுக்கு எவ்வளவு நிதி கிடைக்கின்றது எவ்வளவு நிதி தங்களது கணக்கில் உள்ளதென்பது பற்றிய தெளிவு இல்லாமை.

உரிய காலப்பகுதியில் பொது மக்களின் வங்கி கணக்கு புத்தகங்களை அவர்களின் கணக்கில் உள்ள பண மீதிகளை அறிந்து கொள்ளும் வகையில் வழங்குவதும் இல்லை. பலபேரின் கைகளில் புத்தகங்களும் இல்லை.

இப்படியான நிலையில்தான் மாவட்டத்தின் சமுர்த்தி செயற்பாடு உள்ளது. மாவட்டத்தில் தற்போது இரண்டு வகைப்பாட்டில் சமுர்த்தி பயனாளிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். மாதாந்த உதவிபெறும் பயனாளிகள் வாழ்வாதாரத்தில் மேம்படுத்தப்பட்ட பயனாளிகள் என்ற வகைப்படுத்தப்பட்டு சமுர்த்தி முத்திரை பெற்றுக்கொள்ளும் 77,800 குடும்பங்கள் தற்போதுள்ளன. இந்த எண்ணிக்கை 79,000 வரை அதிகரித்து தற்போது குறைந்துள்ளது.

இவர்கள் முறையே ரூபா 3500, ரூபா 2500, ரூபா 1500, ரூபா 420 என்ற ரீதியில் முத்திரைப் பணக் கொடுப்பனவினை பெற்றுவருகின்றனர்

இதில் ரூபா 420 பெறுமதியினைக் கொண்ட முத்திரையை உடையவர்களுக்கு பணம் வழங்கப்படுவதில்லை இப்பணம் கட்டாய சேமிப்பு என்ற ரீதியல் சமுர்த்தி வங்கிகளில் உள்ள தனிநபர் கணக்குகளில் மாதாந்தம் வரவு வைக்கப்பட வேண்டும்.

இந்த நடைமுறை ஒழுங்கு முறையில் பேணப்படுவதில்லை. அத்துடன், இந்த தொகையினை பெறும் பயனாளிகள் அனைவரும் வாழ்வாதாரத்தில் மேம்பட்டவார்களா என்ற கேள்வியும் உள்ளது.

மேம்படுத்தப்பட்ட குடும்பங்களிற்கு இந்த 420 ரூபா முத்திரை வழங்கப்படுகிறது. அரசாங்க உதவிகளை பெற்றுக்கொள்ள சமுர்த்தி முத்திரை அவசியம் என்ற ஒரே காரணத்திற்காக இதை வாங்கி வைத்திருக்கிறார்களே தவிர, மேற்கொண்டு இதில் அக்கறைப்படுவதில்லை. தமது வங்கிக்கணக்கில் உள்ள பணத்தை பற்றி அறிந்தும்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...







▶ யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத்தூதரகத்திற்கு புதியதாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி எஸ். பாலச்சந்திரன் யாழ்ப்பாணம் முஹம்மதியா ஜூம்மா பள்ளிவாசலிற்கு விஜயம் செய்துள்ளார். இதன் போது இவரை பள்ளிவாசலின் நிர்வாகத் தலைவர் மெக்ஸா முபீன் வரவேற்றதுடன் எம் எஸ் முஹம்மத் மௌலவியிடம் எஸ். பாலச்சந்திரன் ஆசியையும் பெற்றுக்கொண்டார். இந்த நிகழ்வில் யாழ் மாநகர சபை உறுப்பினர்களான கே.எம் நிலாம், எம்.எம் நிபாஹீர் முன்னாள் மாநகர உறுப்பினரான சரபுல் அனாம் சிரேஸ்ட ஊடகவியலாளர் கலாபூசணம் எம்.எல் லாபீர் சமாதான நீதவான் இக்பால் இணைந்து புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரிக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.





▶ புங்குடுதீவு அம்பலவாணர் கலை அரங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவுவிழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் தலைமையில் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கலந்து கொண்டார். புங்குடுதீவு வாழ் மக்களின் கலை கலாசார தொழில் பயிற்சிகளை மையமாக கொண்டு புலம்பெயர்து வாழும் புங்குடுதீவு மக்களினால் இந்த மண்டபம் கடந்த ஆண்டு திறந்து வைக்கப்பட்டிருந்தது. மேலும் இரண்டு புதிய கட்டிடங்களை உள்ளூர் மற்றும் கனடா வாழ் மக்களினால் அமைக்கப்பட்டு ஆளுநர் ரெஜினோல்ட் குரே அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.





▶ இருபத்து மூவாயிரம் (23,000.00) பெறுமதியான அம்செற், பொக்ஸ், ஒலிபெருக்கி சாதனங்கள் என்பன நெடுந்தீவு வடதாரகை படகிற்கு அன்பளிப்பு செய்யப்பட்டது. வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணத்தினத்துடன் இணைந்து நெடுந்தீவு பிரதேசசபைத் தவிசாளர் பிலிப் பற்றிக் றொசான், உப தவிசாளர் லோகேஸ்வரன், பிரதேசசபை உறுப்பினர் சிந்தைகுலநாயகி மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் கணேஸ், அருள்ஜீவன், யேசுதாசன் ஆகியோர் வடதாரகைப் படகின் அதிகாரிகளிடம் கையளித்தனர்.



▶ பொருத்து வீட்டுக்கு பதிலாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வழிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கல்வீட்டு திட்டத்தின் மாதிரி வீட்டை ஈ.பி.டி.பி பிரதிநிதிகள் பார்வையிட்டுள்ளனர். பதுளையில் இந்த மாதிரி வீடு அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு அறைகள், சமையலறை, இணைந்த குளியலறையுடன் மலசல கூடம், விறாந்தை அடங்கலாக 650 சதுர அடியில் இந்த வீடு அமையப்பெறும். ஒரு வீடு இரண்டு வாரத்தில் கட்டி முடிக்கப்படும் என மீள்குடியேற்ற அமைச்சு குறிப்பிட்டுள்ளது.





▶ வடமாகாண சபையின் கிராமிய பாலங்கள் செயற்றிட்டத்தின் கீழ் சுமார் 30 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மட்டுவில் தெற்கு - கைதடி இணைப்புச் சாலை பாலம் வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் , சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.





▶ கோண்டாவில் ஸ்ரீ நாராயணா சனசமூகநிலையத்தின் 66 ஆவது ஆண்டுவிழா அண்மையில் நடைபெற்றது. வடமாகாணசபை உறுப்பினர் பொ. ஐங்கரநேசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார். மாகாணசபை குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து 30 மாணவர்களிற்கு துவச்சக்கர வண்டிகளையும் வழங்கி வைத்தார்.

வைப்பதில்லை.

கட்டாயச் சேமிப்புகள் ரூபா 3500 இற்கு ரூபா 300 உம், ரூபா 2500 இற்கு ரூபா 200 உம், ரூபா 1500 இற்கு ரூபா 100 உம், ரூபா 420 இற்கு ரூபா 270 உம் கட்டாயமாக சமுர்த்தி முத்திரை பெறும் அனைத்து பயனாளிகளிடமிருந்தும் சேமிப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்கு வருடாந்தம் 7 வீத வட்டி வழங்கப்படுகிறது.மட்டக்களப்பு மாவட்டத்தின் 29 சமுர்த்தி வங்கிக்ளிலும் இந்த கட்டாயச் சேமிப்பு கணக்குகளின் மொத்த வைப்பு தொகையாக 60 மில்லியன் ரூபாய் உள்ளது. எனினும், தங்களது கணக்குகளில் எவ்வளவு பணம் உள்ளதென்பதை கணிசமான பிரதேச செயலகப்பிரிவுகளில் உள்ள சமுர்த்தி பயனாளிகள் அறியாமல் உள்ளமை கவலையளிக்கும் விசயமே.

70 வயதை தாண்டியவர்களும், திடீர் சுகயீனமடைபவர்கள், பிள்ளைகளின் கல்வி தேவைக்காக, மேலும் அவசர நிலைமைகளை கருத்தில் கொண்டு இக் கட்டாயச் சேமிப்பு கொடுப்பனவில் இருந்து ரூபா 25000 வரையான பெறுமதியினை அவர்களினால் வங்கிகளிலிருந்து விடுவித்து கொள்ளமுடியும். எனினும், இந்த நடைமுறை தெரியாமலும், தெரிந்தும் விடுவிக்க முடியாமல் தடுமாறிக்கொண்டும்பல ஏழைக்குடும்பங்கள் இப்பொழுதும் இருக்கிறார்கள்.

ஏனெனில் குறித்த கணக்கு மீதிகளை அறியும் வகையில் வைப்பு புத்தகம் ஒழுங்காக வழங்கப்படவில்லை. அவர்களுக்கான கணக்குமீதிகளுக்கான வட்டி கொடுப்பனவுகள் ஒழுங்கு முறையில் உரியவர்களின் கணக்குகளில் சேர்க்கப்படுவதில்லை. இப்படி பல விடயங்கள் கவனிப்பாரற்ற நிலையில் உள்ள போது, சமுர்த்தி வங்கிகளை தரப்படுத்திக் கொள்வதால் மட்டுமே, மாவட்டத்தின் சமுர்த்தி சேவையை தரமுயர்த்திக் கொள்ள முடியுமா? ●




# Exclusive Report

## சுமந்திரனின் 'Strategy ஆனோல்ட்'

# விக்னேஸ்வரனின் 'COUNTER ATTACK' பிளான்கள்

# முதலமைச்சரின் கூட்டணி



நம்மாழ்வார்

வடக்கு முதலமைச்சர் வேட்பாளர் விசயத்தில் தமிழரசுக்கட்சியிடம் கைவசம் உள்ள திட்டங்கள் தொடர்பாக கடந்த வாரத்திற்கு முதல்வாரம் தீபத்தில் ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தோம். தமிழரசுக்கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் பட்டியலில் விக்னேஸ்வரன் இல்லையென சுமந்திரன் அவசர அறிவித்தல் விடுத்தது ஏன் என்பது பற்றியும் விபரமாக அதில் குறிப்பிட்டிருந்தோம். அதாவது யாழ் மேயர் ஆனோல்ட்டை கதிரையில் உட்கார வைத்த அதே Strategyயைத்தான் முதலமைச்சர் விவகாரத்திலும் சுமந்திரன் பாவித்தார் என குறிப்பிட்டிருந்தோம்.

அந்த கட்டுரையின் இறுதிப்பகுதி இப்படி முடிந்தது

இதை பற்றி தீபத்திடம் நிறைய தகவல்கள் உள்ளன. தனிக்கட்சி தொடங்குவதாக விக்னேஸ்வரனே சூசகமாக அறிவித்து விட்டார், இதைவிட வெளியில் வராத எவ்வளவு தகவல்கள் உள்ளதென யாராவது கேட்டால் விக்னேஸ்வரனிடம் உள்ள பிளான் A-C, அவற்றின் உள்ளடக்கம் பற்றியெல்லாம் நிறைய தகவல் வைத்துள்ளோம். அதை பற்றி அடுத்த வாரம் குறிப்பிடுகிறோம்.

இப்படி குறிப்பிட்டிருந்தபோதும், தவிர்க்க முடியாத காரணத்தால் கடந்தவாரம் அதை வெளியிட முடியவில்லை. வாசகர்கள் பொறுத்தருள்க. இந்தவாரம் அதை வெளியிடுகிறோம்.

முதல்மைச்சர் விசயத்தில் இப்பொழுதே திட்டமிட்டு தமிழரசுக் கட்சி காய்களை நகர்த்த ஆரம்பித்து விட்டது, முதலமைச்சர் என்ன செய்கிறார்? அவர் எப்படியான முடிவுகளை எடுக்கப்போகிறார்? எந்த கட்சியில் களமிறங்க போகிறார்? இப்படி நிறைய கேள்விகள் உள்ளன.

முதலில் ஒரு விசயத்தை சொல்லி விட வேண்டும். புது கட்சி தொடங்குவது என சுலபமாக சொல்லலாம். ஆனால் சட்டம் அவ்வளவு இலகுவான வாய்ப்புக்களை கொடுக்கவில்லை. இலங்கை சனத்தொகைக்கு இப்பொழுதுள்ள கட்சிகளே மிக அதிகம். அதனால் புதிய கட்சிகள் பதிவுசெய்யப்படுவதை குறைப்பதற்காக, கடுமையான சட்டவிதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அந்த விதிகளின்படி, அடுத்த மாகாணசபை தேர்தலின் முன்னர் விக்னேஸ்வரன் புதிய கட்சியொன்றை தொடங்க முடியாது.

இது விக்னேஸ்வரனிற்கு முன்பாக உள்ள முதலாவது தடைக்கல்.

சுயேட்சையாக களமிறங்கலாம் தான். ஆனால், அதில் நிறைய சிக்கல்கள் வரும். முதலாவது விரும்பிய சின்னத்தை தேர்ந்தெடுக்க முடியாது. சாதாரண சிறிய கட்சி, சிறிய வட்டத்திற்குள் போட்டியிடுவதென்றால் இதைப்பற்றி கவலைப் படாமல் களமிறங்கலாம். ஆனால் மாகாணசபையை குறிவைத்து களமிறங்கும் பெரிய அரசியல் நகர்வுகளை செய்யும்போது, தனிக்கட்சி, திட்டமிட்ட சின்னங்கள் அவசியம். ஆகவே, தனிக்கட்சியொன்று அவசியம்.

இதற்கு ஒரு தீர்வு உள்ளது. ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட கட்சியொன்றின் மூலம் தேர்தலில் போட்டியிடலாம். இம்முறை உள்ளூராட்சி தேர்தலில் மஹிந்த ராஜபக்ச இந்த உத்தியைத்தான் கையாண்டார். பொதுஜன பெரமுன என்பது ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு, இயங்காமல் இருந்த கட்சி. அதை தூசி தட்டி எடுத்தார்கள்.

தீபத்திற்கு கிடைத்த தகவல்படி விக்னேஸ்வரனும் இந்த உத்தியைத்தான் கையாள போகிறார்!

விக்னேஸ்வரன் இப்பொழுது தூசி தட்டி எடுக்க முயலும் முயற்சி வெற்றியளித்தால், நிச்சயம் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கும் என்றளவில் மட்டும் இப்பொழுது நிறுத்திக் கொள்கிறோம். அது முயற்சியளவில் நடந்து கொண்டிருப்பதால் மேலதிக தகவலெதையும் இப்பொழுது வெளியிடவில்லை. அடுத்தடுத்த வாரமளவில் மேலும் சில விசயங்களை கூறலாம்.



தமிழர் விடுதலைக்கூட்டணிக்குள் ஈ.பி.ஆர்.எல்.எவ் நுழைந்தபோது, அடுத்த மாகாணசபை தேர்தலில் முதலமைச்சர் போட்டியிடுவதற்கு வசதியாக இப்பொழுது கட்சியை தயார் செய்கிறோம் என்ற சாரப்பட பேசினார்கள். ஆனால் முதலமைச்சரிடம் அந்த எண்ணமில்லையென்பதை மட்டும் உறுதியாக கூறலாம். உதயசூரியன் சின்னத்திலோ அல்லது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சின்னத்திலோ போட்டியிடும் திட்டம் முதலமைச்சரிடம் தற்போது வரை கிடையாது.

ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட கட்சி, அது தமிழ் தேசிய அடையாளத்துடன் இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறார். முதலமைச்சரின் கட்சியுடன் வேறு தரப்புக்கள் கூட்டணி வைத்துக் கொள்ளலாம் என்பதே இப்போதைய திட்டம்.

முதலமைச்சரின் கூட்டணி எப்படியிருக்கும் என்பது அடுத்த கேள்வி.

இதற்கும் இப்போதுவரை உறுதியான பதில் சொல்ல முடியாது. காரணம், அதுவும் இப்போது பேச்சளவில் மட்டுமே இருக்கிறது. கடந்த உள்ளூராட்சிசபை தேர்தலின் முன்பாக பரந்தளவிலான கூட்டணியொன்று உருவாகுமென எதிர்பார்க்கப்பட்டபோதும் அது உருவாகவில்லை. குறைந்தபட்சம் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ் என்பனகூட ஒன்றிணைய முடியவில்லை. அப்போதைய குழப்பங்களால் ஈ.பி.ஆர்.எல்.எவ் மீது முன்னணி அதிருப்தியுடன் இருக்கிறது.

முன்னணி எப்பொழுதும் விடாக்கண்டன்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ் வவுனியாவில் தென்னிலங்கை கட்சிகளுடன் கூட்டு வேறு வைத்துவிட்டது. இனி ஈ.பி.ஆர்.எல்.எவ் ஐ கூட்டுக்குள் வர சம்மதிப்பார்களா என்பது தெரியவில்லை. அதைவிட, இப்பொழுது ஆரம்ப சுற்று பேச்சுக்களிலேயே புதிய கூட்டுக்குள் யாரெல்லாம் வரக்கூடாதென்ற ஒரு லிஸ்றையே கொடுத்துள்ளார்களாம். அதில் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் உள்ள ஒரு கட்சியும் அடக்கம்! (இவர்களே தமிழ் தேசிய கூட்டமைப்பு உடையாமல் பார்த்துக் கொள்வார்கள் போலிருக்கிறதே என விக்னேஸ்வரன் தரப்பு ஆலோசகர் ஒருவர் தலை

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

# தீபம்

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

**தொடர்புகளிற்கு**

ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563

அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com





# சுமந்திரன் சொன்னவை

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், யாழிலுள்ள தனது அலுவலகத்தில் கடந்த 26ம் திகதி ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினார். இதன்போது தெரிவிக்கப்பட்ட முக்கிய விசயங்களை சுருக்கமாக குறிப்பிடுகிறோம்.

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும். அந்த நிலைப்பாட்டில் ஒரு மாற்றமும் எமக்கில்லை. என தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு கூறியிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா, அதற்கு தடையாக உள்ள சில காரணங்களை கூறுகிறார். அந்த காரணங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை அல்ல.

சில தினங்களுக்கு முன்னர் நான் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் உரையாடியிருந்தேன். அப்போது சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டில் எந்தவிதமான மற்றமும் இல்லை. ஆனால் அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் தடையாக உள்ள சில காரணங்களை கூறியிருந்தார். அந்த காரணங்கள் ஏற்றுக் · கொள்ளகூடியவையாக இல்லை.

ஆனாலும் இந்த அரசாங்கத்தை கொண்டே அரசியல் கைதிகளை விடுதலைசெய்யவேண்டும்.வெறுமனே ஆனந்த சுதாகரனை மட்டுமல்லாமல் சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும். குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை படுகொலை செய்ய முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கணவனும் மனைவியும் தடுத்துவைக்கப்பட்ட மனைவி 17 வருடங்களுக்கு பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

கணவன்தொடர்ந்தும்சிறையிலேயே இருக்கின்றார். இவர்களுடைய பிள்ளைகள் 17 வருடங்களாக பெற்றோருடன் வாழவில்லை. இப்படி ஒவ்வொரு அரசியல் கைதிக்கு பின்னாலும் ஒவ்வொரு துயரம் நிறைந்த கதை உள்ளது. இதேபோல் அரசாங்கம் தமிழ்தேசிய கூட்டமைப்புடன் சில விடயங்களை விரைவில் பேசவுள்ளதாக அறிந்து கொண்டோம். அதில் அரசியல் கைதிகளின் விடுதலையும் உள்ளடக்கம். ஆகவே தொடர்ச்சியாக அழுத்தம் கொடுப்பதன் ஊடாக அரசியல் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்போம்.

வடகிழக்கு மாகாணங்களின் நிலமைகள் தொடர்பாக 2011ம் ஆண்டு 2 அறிக்கைகளை நாங்கள் சமர்பித்துள்ளோம். அதில் இந்த பௌத்த விகாரை அமைப்பு விடயமும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. அதன் பயனாக பல விகாரைகள் அகற்றப் பட்டுள்ளன. ஆனாலும் புதிதாக அமைக்கப்படுவது நிறுத்தப்பட வில்லை.

இந்நிலையில் பௌத்தர்கள் வாழாத பகுதியில் பௌத்த விகாரைகளை அமைப்பதை நிறுத்தவில்லை. எனவே அது தொடர்பாக நடவடிக்கை எடுப்போம். மேலும் மகாவலி அதிகாரசபை வடக்கு மக்களுக்கு தண்ணீர் தரட்டும். சிங்கள மக்களை தரவேண்டாம் என நான் நாடாளுமன்றில் கூறியிருக்கின்றேன்.

அண்மையில் வடமாகாணசபை உறுப்பினர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லை கிராமங்களுக்கு சென்றிருக்கின்றனர். மேலும் மாகாணசபை உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்தித்து பேசுவதாக தீர்மானிக்கப் பட்டிருந்தது.

அது பின்னர் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே இந்த விடயங்களை மிக முக்கிய த்துவம் வாய்ந்தவையாக கருதி தமிழ்தேசிய கூட்டமைப்பு நடவடிக்கைகளை எடுக்கும். கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட நிலமைகளை போல் வடக்கில் ஏற்பட இடமளிக் கப்படாது என்றார். ●

---

யிலடித்துக் கொண்டார் என்பது கூடுதல் தகவல்!)

வடக்கில் விக்னேஸ்வரன் அலையென்பது ஒப்பீட்டளவில் யாழில்தான் அதிகம். ஏனைய நான்கு மாவட்டங்களிலும் அந்த அலையை வைத்தே கரையேற முடியாது. ஆகவே, அந்த நான்கு மாவட்டங்களையும் கவர் செய்யும் விதமான கூட்டணி அமைய வேண்டும். அதையும் கவனமெடுத்தே கூட்டணி பேச்சுக்கள் நடந்து வருகின்றன.

இதில் உள்ள இன்னொரு கேள்வி தமிழ் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகள் ஏதாவது முதலமைச்சரின் கூட்டணிக்குள் செல்ல வாய்ப்புள்ளதா?

ஆரம்பத்திலேயே ஒரு விசயத்தை குறிப்பிட்டிருந்தோம் இப்பொழுது தான் அந்த விவகாரம் பேச்சளவில் உள்ளது. உறுதியான முடிவுகள் வரும்வரை எதையும் அறுதியிடவில்லை. ஏனெனில், அடுத்த மாகாண சபை தேர்தல் எப்படியும் அடுத்த வருடம் ஏப்ரலின் பின்னர்தான் நடக்க வாய்ப்பிருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு வருட அவகாசம் உள்ள நிலையில், புத்திசாலி கட்சிகள் எதுவும் இப்போதைய கூட்டமைப்பை உடைக்க மாட்டார்கள். அதனால் தமிழ் தேசிய கூட்டமைப்பு இப்போதைக்கு உடைய வாய்ப்பில்லை. ஆனால் மாகாணசபை தேர்தல் நெருங்கும் சமயத்தில் உடையாமலிருக்கும் என்பதற்கும் எந்த உத்தரவாதமும் கிடையாது!

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சிகள், தமிழரசுக்கட்சியின் பிரபலங்கள் பலருடன் பேசி நாடி பிடித்து பார்த்துள்ளது விக்னேஸ்வரன் தரப்பு. அதற்கு கணிசமானளவு பலனும் கிடைத்துள்ளது என்பதை மட்டும் இப்போதைக்கு சொல்லி வைக்கிறோம்.


ஏனெனில், மாவை சேனாதிராசா முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவது என்பதோ, விக்னேஸ்வரன் அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் இல்லையென்பதோ தமிழ் தேசிய கூட்டமைப்பாக எடுக்கப்பட்ட முடிவல்ல. அது தமிழரசுக்கட்சிக்குள் எடுக்கப்பட்ட முடிவு. அந்த முடிவில் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளிற்கு உவப்பில்லை. மாவை சேனாதிராசாவை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தி விக்னேஸ்வரனுடன் போட்டியிடுவது, தோல்வியடையும் முயற்சியென அவர்கள் நம்புகிறார்கள். தவிரவும், தம்மை ஆலோசிக்காமல் எடுக்கப்பட்ட இந்த முடிவை ஆதரிப்பதில்லையென்ற முடிவிற்கு கிட்டவாக அவர்கள் வந்துள்ளார்கள் என்பதையும் தீபம் அறிந்துள்ளது.

அதைதவிர, வடக்கில் வேறும் சில கட்சிகள், பிரமுகர்கள் இணைந்து பணியாற்ற பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதெல்லாம் எவ்வளவு தூரம் வெற்றியளிக்குமென தெரியவில்லை. ஆனால் வெற்றியளித்தால், அது மெகா கூட்டணியாகும் என்பது மட்டும் நிச்சயம். அதே சமயம், இந்த கூட்டில் இணைய முற்படுபவர்களின் பலவீனங்களையும் கவனிக்க வேண்டும். ஒருவருடன் ஒருவர் இணைய தயாரில்லாதவர்கள்தான் பலர். இவர்களை ஒன்றிணைப்பது மிகப்பெரிய சிக்கல். அந்த வல்லமை முதலமைச்சரிடம் உள்ளதா என்பதேஇப்போதைய கேள்வி. அடுத்த முதலமைச்சர் பந்தயத்தில் விக்னேஸ்வரன் கடக்க வேண்டிய முதலாவது தடை இது. இதை வெற்றிகரமாக கடந்தால், முதலமைச்சர் பந்தயத்திலும் வெற்றியடைவார் என நம்பலாம். ●







# மகளை தேடும் தாய்!

மத்தியகிழக்கு நாடான சவூதி அரேபியாவின் பிரேதசமான தம்மாம் பகுதிக்கு வீட்டுப் பணிப் பெண்ணாக தரகர் ஒருவரின் உதவியோடு சென்ற அட்டன் குடகம பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரை உடனடியாக இலங்கைக்கு வரவழைக்க அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்கத்தின் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பெண்ணின் தாயான விஜயலட்சுமி தெரிவித்துள்ளார்.

தனது மகளின் அரவணைப்பில் மாத்திரமே எனது கடைசி காலத்தில் நிறைவேற்ற முடியும் என்ற எண்ணத்தோடு குடும்ப வறுமை காரணமாக பணிப்பெண்ணாக சென்றுள்ள சுப்பையா விக்னேஷ்வரி வயது 36 என்பவரை கடந்த 13 வருட காலமாக பிரிந்துள்ள நிலையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சட்ட விதிகளை மீறி எனது மகளை நாட்டுக்கு திருப்பி அனுப்பாமல் வைத்துள்ளமையை அரசாங்கம் ஆராய்ந்து உரிய தீர்வினை பெற்றுத் தரும்படி இந்த தாய் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அறிந்த எமது ஊடகவியலாளர் குறித்த தாயின் வீட்டுக்கு சென்று விடயத்தை கேட்டறிந்த பொழுது சில விடயங்கள் வெளிவந்தது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

2005ம் ஆண்டு அட்டன் குடகம பகுதயில்இருந்து சாதாரண குடும்பத்தை சேர்ந்த சுப்பையாக விக்னேஷ்வரி என்பவர் வறுமை காரணமாக உழைப்பதற்கு மத்தியகிழக்கு நாடான சவூதி தம்மாம் பிரதேசத்திற்கு பணிப்பெண்ணாக சென்றுள்ளார்.

இதன்போது குறித்த பெண்ணுக்கு வயது 23 ஆகும். இவரை கம்பளையில் உள்ள வெளிநாட்டு முகவர் நிலையத்தின் தரகர் ஒருவர் கூட்டிச்சென்று கொழும்பில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையமொன்றின் ஊடாக குறித்த நாட்டுக்கு 2005ம் ஆண்டு 8ம் மாதம் 12ம் திகதி வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து வெளிநாட்டுக்கு சென்றுவிட்டதாக தொலைபேசி ஒன்று உறவினர்களுக்கு கிடைத்துள்ளது. அதற்கு அப்பால் கடந்த 13 வருட காலமாக மூன்று முறை மாத்திரமே தொலைபேசி அழைப்புகள் உறவினர்களுக்கு கிடைத்துள்ளது என மேற்படி தாய் தெரிவித்தார்.

குறித்த பெண் சவூதி நாட்டுக்கு சென்றதையடுத்து ஒரு வருட காலப்பகுதியில் இவரின் தந்தை சுகயீனமுற்ற நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்த பெண்ணின் வீட்டில் மூன்று பெண் பிள்ளைகள் மற்றும் ஒரு ஆண் பிள்ளை என தாய் தந்தையினருடன் வறுமை கோட்டின் கீழ் வசித்து வந்துள்ளனர். குடும்பத்தை பாதுகாக்க தகுதியுடைய ஆண் மகன் திருமணம் முடித்து அதே வீட்டில் ஓர் அறையில் வசித்து வருகின்றார்.

இந்த நிலையில் தாய் மகனின் அரவணைப்பில் இருந்தாலும் கூட வெளிநாட்டுக்கு மூத்த பெண் பிள்ளையே என்னுடைய நல்லது கேட்டதுகளை கவனிக்க கூடியவர் என்ற ஆதங்கத்துடன் வாழ்ந்து வருகின்றார்.

ஆனால் வெளிநாட்டுக்கு சென்ற பெண் இன்று வரை தமக்கு பணங்கள் அனுப்பாமல் தொலைத் தொடர்புகளும் சீராக இல்லாமல் இன்று வருவார் நாளை வருவார் என்ற ஏக்கத்துடன் வாழும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளதாக தாய் கண்ணீர் மல்க தெரிவித்தார்.

எனது கணவர் உயிரிழக்கும் பொழுது கையில் நூறு ரூபாய் மட்டுமே வைத்துக்கொண்டு இறுதி கிரியைகளை உறவினர்களின் உதவிகளோடு செய்து முடித்ததாகவும், தந்தை உயிரிழந்த விடயம் கூட இதுவரை காலமும் மகளுக்கு தெரியாது என்றும் தெரிவித்தார்.


அதேவேளையில் தொலைபேசி மூலமாக தன்னுடைய மகளுக்கு தொடர்பை ஏற்படுத்தும் பொழுது ஸ்ரீலங்கா என்ற வசனத்தை கேட்டவுடனேயே என் மகள் வசிக்கின்ற வீட்டிலிருந்து பதில் ஏதும் கிடைக்காமல் தொலைபேசியை துண்டித்து விடுகின்றனர்.

இருந்தபோதிலும் கடைசியாக கிடைத்த தொலைபேசி ஊடாக கடந்த வருட இறுதிக்குள் தான் இலங்கைக்கு வந்துவிடுவதாக மகள் ஊடாக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்று வரையும் மகள் நாடு திரும்பவில்லை. இதனால் அச்சம் அடைந்துள்ள நிலையில் பலரிடமும் இது தொடர்பாக தெரிவித் போதிலும் எவரும் எமக்கு உதவுவதாக தெரியவில்லை.

இந்த நிலையிலேயே கொழும்பில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் மகளை இந்த வெளிநாட்டிற்கு அனுப்பிய முகவர் நிலையத்தோடும் தொடர்பு ஒன்றும் பிரயோசனம் அற்ற நிலையில் வாழ்வதாக அவர் தெரிவித்தார்.

எனினும் 13 வருட காலமாக மகள் உழைத்த பணம் கூட எமக்கு தேவையில்லை. மகளை மாத்திரம் நாட்டுக்கு கொண்டு வந்தால் போதும் என்ற நிலைமைக்கு தான் ஆளாகியுள்ள நிலையில் அரசாங்க அதிகாரிகள் மற்றும் எமது பகுதி அரசியல்வாதிகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஊடாக உரிய நடவடிக்கை ஒன்று மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஊடகங்களின் கவனத்திற்கு கொண்டு வந்திருப்பதாக குறித்த தாய் மேலும் தெரிவித்தார்.





▶ பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இரவு தபால் புகையிரதம் ஒன்று 27ம் திகதி தடம் புரண்டதால் மலையக ரயில் சேவை பாதிக்கப்பட்டன. நாவலப்பிட்டி மற்றும் உலப்பனை ஆகிய புகையிரத நிலையங்களுக்கு இடையில் பல்லேகம எனும் பகுதியில் வைத்து அதிகாலை 1.30 மணியளவில் தடம் புரண்டுள்ளது. பின்னர் அது சீர்செய்யப்பட்டு, போக்குவரத்து வழமைக்கு திரும்பியது.




# ஏற்றுமதிக்கு உதவும் தனியார் துறைகள்!

ஏற்றுமதித் தொழிலில் மொத்தம் ஒன்பது தனியார் துறைகள் பங்கு வகிக்கின்றன. அவை ஒவ்வொன்றைப் பற்றியும் பார்க்கலாம்.

**1. ஷிப்பிங்/ஃப்ரைட் ஃபோர்வேடர்ஸ்**
(Shipping/Freight Forwarders)

ஏற்றுமதியாளர்கள் / உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து பொருள்களைப் பெற்று, அவர்கள் அனுப்ப விரும்பும் இடத்துக்கு, கப்பல் அல்லது விமானம் வழியாக அனுப்பிவைக்கும் பணி இவர்களுடையது. பொருளின் வகை, அளவு ஆகியவற்றைப் பொறுத்து, அவற்றுக்கேற்ப கன்டெய்னர்களைத் தேர்வு செய்து தருவதும் இவர்களுடைய வேலைதான். இவர்களிடம் பொருள்களைப் பேக்கிங் செய்து ஒப்படைத்து விட்டால், அவர்கள் பாதுகாப்பாக அனுப்பி வைக்கும் வேலையைப் பார்த்துக்கொள்வார்கள்.

**2. கஸ்டம்ஸ் ஹவுஸ் ஏஜென்ட்**
(CHA-Customs House Agent)

கஸ்டம்ஸ் ஹவுஸ் ஏஜென்ட் என்பவர்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்டு உரிமம் தரப்பட்டவர்கள். இவர்கள் கஸ்டம்ஸ் நடைமுறைகளைச் செயல்படுத்துவார்கள். நம்முடைய பொருள்களைத் துறைமுகத்துக்குக் கொண்டுசெல்வதிலிருந்து பொருள்களை ஏற்றியனுப்பும் வரையிலான அனைத்து நடைமுறைகளையும் பார்த்துக்கொள்வார்கள். அதற்குத் தேவையான ஆவணங்களைத் தயார் செய்வதும் இவர்களுடைய பணியே.

**3. டிரான்ஸ்போர்ட் அண்ட் லொஜிஸ்டிக்ஸ் நிறுவனம்** (Transport And Logistics)

துறைமுகம் அல்லது விமானத்துக்குள் நம்முடைய பொருள்களைக் கொண்டு செல்வதற்கானப் போக்குவரத்து மற்றும் சரக்குஏற்றுதல்,இறக்குதல் வேலைகளை இவர்கள் கவனித்துக்கொள்கிறார்கள். பாதுகாப்பாகப் பொருள்களைக் கொண்டு செல்வதில் இவர்களுடைய பங்கு முக்கியமானது.

**4. இன்ஷூரன்ஸ் ஏஜென்ட்**
(Insurance Agent)

இவர்கள் மெரைன் கார்கோ ஏஜென்ட் என்றும் அழைக்கப்படுவார்கள். நம்முடைய பொருள்கள் துறைமுகத்திலும், உள்நாட்டு மற்றும் சர்வதேச போக்குவரத்தின்போதும், ஏதேனும் சேதத்துக்குள்ளானால், அதற்கான காப்பீட்டுக்கு உதவி செய்வது இவர்களின் பணி ஆகும். இசிஜிசி (ணிசிநிசி) வேறு, இந்த மெரின் கார்கோ இன்ஷூரன்ஸ் என்பது வேறு.

**5. குவாலிட்டி டெஸ்டிட்டிங் ஏஜென்சி**
(Quality Testing Agency)

நம்முடைய பொருள்களுக்கான தரச் சான்றிதழை வழங்கும் ஏஜென்சிதான் இந்த குவாலிட்டி டெஸ்ட்டிங் ஏஜென்சி. சில நாடுகளில் நம்முடைய பொருள்களுக்கானத் தரச் சான்றிதழ் கேட்கப்படும். அந்தச் சமயங்களில் இவர்களுடைய சான்றிதழ், ஏற்றுமதியாளருக்கு அவசியம்.

**6. பேக்கிங் கம்பெனி**
(Packing Companies)

பேக்கிங் கம்பெனிகள், நம்முடைய பொருள்களைக் கன்டெய்னரில் பாதுகாப்பாக ஏற்றிக்கொண்டு செல்வதற்கேற்ப தரமாகவும், முறையாகவும் பேக்கிங் செய்து உதவுகின்றன. எந்தப் பொருளுக்கு எந்த மாதிரியான பேக்கிங் சரியானது மற்றும் பாதுகாப்பானது என்பதில் இவற்றின் பங்கு முக்கியமானது. அப்போதுதான் சேதம் எதுவுமில்லாமல் பொருள்கள் பாதுகாப்பாக சென்றடைய வேண்டிய இடத்துக்குச் சென்று சேரும்.

**7. சேர்ட்டிஃபிகேட் ஒஃப் ஒரிஜின் வழங்கும் அமைப்புகள்** (Certificate Of Origin)


நம்முடைய பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு சேர்ட்டிஃபிகேட் ஒஃப் ஒரிஜின் என்ற சான்றிதழ் மிகவும் அவசியம். இதுதான் பொருளுக்கான பிறப்புச் சான்றிதழ் மாதிரி.

**8.வாங்குபவரும் விற்பவரும்**
(Buyer and Supplier)

ஏற்றுமதியில் முக்கியமாக நமக்குத் தேவையான இரண்டு பேர் இவர்கள்தான். ஒருவர் நம்மிடமிருந்து பொருள்களை வாங்குபவர். இன்னொருவர், நமக்குப் பொருள்களைக் கொடுப்பவர். இந்த இருவரையும் கண்ணும் கருத்துமாகநாம்கையாள்வது அவசியம். அதேசமயம், அவர்களுடைய நம்பகத் தன்மையையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

**9. வங்கிகள்** (Banks)

இறுதியாக இருந்தாலும் மிக முக்கியமானது வங்கிகள்தான். வங்கியுடனான தொடர்பு என்பது தொழில் செய்பவர்களுக்கு மிக அவசியமானது. ஏனெனில் வங்கிகளுடன் இணக்கமான உறவு வைத்திருப்பது, தொழிலுக்கு பல வகைகளிலும் பலனுள்ளதாக இருக்கும். முக்கியமாக, ஏற்றுமதித் தொழிலுக்கு வங்கிகளின் பங்கு அதிகம் இருக்கிறது. பாதுகாப்பாக ஏற்றுமதித் தொழிலைச் செய்ய வங்கி நடைமுறைகளை முறையாகப் பயன்படுத்திக்கொள்வது அவசியம்.




இந்த ஒன்பது தனியார் துறைகளும் ஏற்றுமதித் தொழிலுக்கு மிக அவசியமானவை. ஆனால், இவற்றில் ஏற்றுமதியாளர்கள் நேரடியாகத் தொடர்பில் இருக்கவேண்டியது நான்கு துறைகளுடன்தான். அவை,

1. வாங்குபவர், விற்பவர் : எந்தக் காரணத்தைக் கொண்டும்பொருளை வாங்குபவர்,கொடுப்பவரிடம் இடைத்தரகர்களை வைத்து அணுகக்கூடாது.
2. பேக்கிங் கம்பெனிகள்: பேக்கிங் கம்பெனிகளுடனும் நேரடியாக டீலிங் வைத்துக் கொள்ள வேண்டும்.
3. வங்கிகள்: வங்கி களுடனான நடைமுறைகளை நேரடியாக நாமே செயல்படுத்துவது அவசியம்.
4. கஸ்டம்ஸ் ஹவுஸ் ஏஜென்ட் : ஒன்பது துறை களில் மேற்சொன்ன மூன்றை தவிர, பிற துறைகள் சார்ந்த அனைத்து வேலைகளையும் கஸ்டம்ஸ் ஹவுஸ் ஏஜென்ட் ஒருவரே பார்த்துக்கொள்வார்.

ஏற்றுமதியாளர்கள் அரசுத் துறைகளையும், தனியார் துறைகளையும் தெரிந்து வைத்திருப்பதோடு, அவற்றின் பங்களிப்புகளையும் உதவிகளையும் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

*(ஜெயிப்போம்)*

சவுதி, மக்காவில் பிறந்த கஷோகியின் தந்தை மொஹமெட் கஷோகி, சவுதி மன்னர் அப்துல் அசீஸ் அல் சவுத்தின் பிரத்தியேக வைத்தியர். சவுதி மன்னரின் பிரத்தியேக வைத்தியராக தந்தை இருந்ததால், பல உயர்மட்ட தொடர்புகளை கொண்ட குடும்பமாக அந்த குடும்பமிருந்தது. கஷோகிக்கு பின்னாளில் பல தொடர்புகள் ஏற்பட இந்த குடும்ப பின்னணிதான் கைகொடுத்தது. .

இதைவிட, அவரை இன்னொரு விதமாகவும் அவரை அறிமுகப்படுத்தலாம். அது உங்களிற்கும் தெரிந்த தொடர்பு. அட்னான் கஷோகியின் சகோதரியின் பெயர், சமீரா கஷோகி. இவர்தான், மொஹமெட் அல் பாயத்தின் மனைவி. டோடி அல் பாயத்தின் தாய்.

டோடி அல்பாயத்தை பெரும் பாலானவர்கள் அறிந்திருப்பீர்கள். பிரிட்டிஷ் இளவரசி டயானாவுடன் கார் விபத்தில் மரணமடைந்த டோடி அல்பாயத்தேதான். அதாவது, டோடி

காரியங்களை சாதித்துக் கொடுத்தவர்.

அந்த வகையில்தான் இவருக்கு டேவிட் கிம்சீயுடன் பரிச்சயம்.

கஷோகியுடன் டேவிட் கிம்சீ இத்தாலியின் மிலான் நகரின் பெப் ஒன்றில் சந்தித்து பேசினார். இந்த ரகசிய ஒப்ரேஷனில் ஒரு குழு இயங்க வேண்டிய அவசியம் பற்றி டேவிட் சொன்னார். இஸ்ரேலிய அரசுக்கும், கஷோகிக்கும் இணக்கமான நபர்கள் அந்த குழுவில் இடம்பெற வேண்டும்



வெட்டி விட்டார்கள்.

(3) அல்ஷ்விம்மர். இஸ்ரேலியர். Israel Aircraft Industries நிறுவனத்தின் ஸ்தாபகர். இஸ்ரேலிய அரசு நிறுவனம் இது. ராணுவ வான் சாதனங்களை தயாரிக்கும் நிறுவனம்.

அடுத்த வாரத்தில் சுவீடனின் ஒதுக்குப்புற விடுதியொன்றில் இரகசியமாகச் சந்தித்தார்கள். அதன் பின்னர் மனாச்சர் தொர்பானிபர் தனது லிங்கில் இருந்த ஈரானிய

நிபந்தனையுடன்.

என்ன நிபந்தனை அது?

“அமெரிக்காவின் ஆயுதம் கிடைத்தால், என்னவழியிலாவது பணயக் கைதிகளை விடுவிப்பது நமது பொறுப்பு. ஆனால் ஒரு விசயம். நீங்கள் இப்படி பகுதிபகுதியாக ஆயுதங்களை வழங்குவது நல்லதல்ல. அது விசயத்தை வெளியில் லீக் ஆக்கவும் செய்துவிடும். எமக்கும் இந்த விசயத்தை கவனமாக ஹாண்டில் செய்வது சிக்கல். ஒரே தரத்தில் அனைத்தையும் தந்து விடுங்கள்” இதுதான் ஈரானின் நிபந்தனை!

ஈரானின் நிபந்தனையை மனாச்சர் தொர்பானிபர் உடனடியாகவே கஷோகிக்கு தெரியப்படுத்தப்பட்டு, அப்படியே டேவிட் கிம்சீயின் காதிற்கு சென்றது. அங்கிருந்து அமெரிக்காவிற்கு பறந்தது.

நிபந்தனையை கேட்டதும், அடுத்து எதையும் யோசிக்காமல் நிராகரித்து விட்டது அமெரிக்கா. ஆனால், அமெரிக்காவின் நிராகரிப்பை

# அமெரிக்கா கொடுத்த ஆயுத லிஸ்ற்: இஸ்ரேல் செய்த தில்லுமுல்லு!



## 6 புலனாய்வு அதிகாரியின் ராஜதந்திர விளையாட்டு!

அல் பாயத்தின் தாய் மாமன்தான், அட்னான் கஷோகி. (இவரது மற்றொரு சகோதரி மிக பிரபல அரபு எழுத்தாளரான சோஹிர் கஷோகி)

அமெரிக்கா, ஈரானுக்கு ரகசிய ஆயுத சப்ளை செய்வதற்கு பொருத்தமான நபராக இருப்பார் என டேவிட் கிம்சீ தேர்ந்தெடுத்தது, இப்படியான பின்னணி கொண்ட அட்னான் கஷோகியைதான்!

இவர் நேரடியாக எந்த அரசு பதவியிலும் இல்லாதவர். ஆனால், எந்த அரசு தலைவருடனும் நேரில் பேசக்கூடியவர். வெளியுலகத்தின் கண்களுக்கு அரபு நாட்டவரும், இஸ்ரேலியர்களும் விரோதிகள். ஆனால், அரபுக்காரரான இந்த அட்னான் கஷோகி இஸ்ரேலிய உளவுத்துறை மொசாட்டுக்கு தனது அரபு செல்வாக்குகள் மூலமாக சில

என முடிவாகி, அன்றே அந்த குழுவை உருவாக்கினர்.

அந்த குழுவில் இருந்தவர்கள்

(1) மனாச்சர் தொர்பானிபர். ஈரான் ஷா மன்னரின் ஆட்சியில் இருந்த காலத்தில் மன்னர் ஷாவின் நேரடிக் கட்டுப்பாட்டில் ஒரு உளவுத்துறை இயங்கியது. அதன் பெயர் SAVAK. இவர் அதில் ஒரு பெரிய புள்ளியாக இருந்தவர்.

(2) கொவ் நிம்ரோடி. இவர் தனியார் உளவு நிறுவனம் ஒன்றை நடத்தி, ஜோர்தான் நாட்டுக்காக உளவு வேலைபார்த்தவர். வேறு நாட்டு உளவுத்துறைகளுடனும் தொடர்பில் உள்ளவர். ஈரானில் மன்னர் ஷா ஆட்சியில் இருந்தபோது, இஸ்ரேலின் உளவாளியாக தலைநகர் தெஹ்ரானில் இருந்தவர் இவர்தான். பின்னாளில் கேஜிபி லிங் இவருக்கு இருப்பதாக மொசட் நம்பியதால், ஆளை காய்

வெளியுறவுத்துறை அதிகாரிகள் மூலம், பேச்சை ஆரம்பித்தார். ஒரு கட்டத்தின் மேற் பேச்சை தொடர ஈரான் விரும்பவில்லை. “தெஹ்ரானுக்கு வாருங்கள். நேரில் பேசலாம்” என்றுவிட்டார்கள். இந்த விசயத்தில் ஈரான் அதிக எச்சரிக்கையாக இருந்ததே இதற்கு காரணம்.

இந்த தொடரின் ஆரம்பத்திலேயே ஒரு விசயத்தை குறிப்பிட்டோம். ஈரானை சம்மதிக்க வைக்கும் நோக்கத்துடன்தான், தாராளமாக ஆயுதம் வழங்கும் லிஸ்ற் தயாரித்திருந்தார்கள். இவ்வளவு தொகை ஆயுதங்கள் கிடைக்குமென ஈரானியர்கள் கற்பனைகூட செய்திருக்க முடியாது.


மக்பார்லேனின் திட்டம் கச்சிதமாக வேலை, செய்தது. ஆரம்பத்தில் கொஞ்சம் பிகு பண்ணுவதை போல ஈரான் அதிகாரிகள் காட்டிக் கொண்டாலும், பின்னர் டீலுக்கு சம்மதித்தனர் ஆனால் ஒரு

உடனடியாக ஈரானுக்கு தெரிவிக்காமல் வேறுவிதமாக இதை கையாளலாமென முடிவெடுத்தார் கிம்சீ.

பல வருடங்களின்பின் இந்த விவகாரத்தை பற்றி உளவுத்துறை சஞ்சிகையொன்றிற்கு கிம்சீ பேட்டியளித்திருந்தார். 'அமெரிக்காவின் நிராகரிப்பை எப்படி கையாண்டேன் என்பதை அவர் இப்படி சொன்னார் “வாஷிங்டன் நிராகரித்த விஷயத்தை சொன்னால், முல்லாக்களுக்கு (ஈரானியர்கள்) கடும் கோபம் ஏற்படும் என்பது எனக்கு தெரியும். அந்த கோபத்தில், “பணயக் கைதிகளில் நாலு பேரை கொன்றுவிடுங்கள்” என்று தீவிரவாத இயக்கத்துக்கு சிக்னல் கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவே இதை வேறு விதமாக கையாளலாம் என ஆலோசித்தோம்”

வேறு விதமாக என்றால் எப்படி?

தொடர்ச்சி அடுத்தபக்கம்...



# சொல்லித் தெரிவதே மன்மதக் கலை!

டி.நாராயண ரெட்டி,
செக்ஸாலஜிஸ்ட்

ஓர் இசை நிகழ்ச்சியில் பாடகர், இசைக்கருவிகளை இசைப்பவர்கள் அனைவரும் ஒரு புள்ளியில் சங்கமமானால்தான் நிகழ்ச்சி சிறப்பாக இருக்கும். அதேபோலத்தான் செக்ஸூம். ஆண், பெண் இருவரும் விருப்பத்தோடு இணைந்து ஈடுபட்டால்தான் பரஸ்பர இன்பம் சாத்தியமாகும். என் மருத்துவமனைக்கு ஒருவர் வந்திருந்தார். வயது 40. 'டாக்டர், என் மனைவி செக்ஸூக்கு கூப்பிட்டா வர மாட்டேங்கிறா. ரொம்ப விரக்தியாகப் பேசுறா' என்று முறையிட்டார். 'அதுக்கு உங்க மனைவி என்ன காரணம் சொல்றாங்க?' என்று கேட்டேன். அவர் ஒரு நிமிடம் மௌனம் காத்தார். பிறகு, 'செக்ஸூல எனக்கு எந்த சுகமும் கிடைக்கறதில்லை. என்னைத் தூண்டிவிட்டுட்டு, நீங்க சீக்கிரமாக முடிச்சுக்கிறீங்க' என்கிறாள்.'

'நீங்க எவ்வளவு நேரம் செக்ஸில் ஈடுபடுவீங்க?' என்று கேட்டேன். 'எனக்குக் கொஞ்ச நேரத்துலேயே விந்து வெளியேறிடுது. அதனால...' என்று தலையைச் சொரிந்துகொண்டே இழுத்தார்.

செக்ஸின்போது விந்து சீக்கிரம் வெளியேறும் (Premature Ejaculation) பிரச்னை ஆண்களுக்குப் பரவலாக இருக்கத்தான் செய்கிறது. பொதுவாகவே, விந்து வெளியேறிய பிறகு பல ஆண்களுக்கு செக்ஸில் நாட்டம் இல்லாமல் போய்விடும். ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குப் பிறகே மீண்டும் அந்த உணர்வு தலைதூக்கும். இதன் காரணமாகப் பெண்களுக்கு இன்பம் கிடைக்காமலேயே போய்விடும். இப்படிப் பெண்களுக்குத் தொடர்ந்து செக்ஸில் ஏமாற்றம் ஏற்படும்போது, 'எனக்கு எதற்கு செக்ஸ்?' என்று கணவன் அழைத்தாலும் ஈடுபட மாட்டார்கள்.

விந்து சீக்கிரத்தில் வெளியேறுவதற்கு உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் காரணங்கள் இருக்கின்றன. பைமோசிஸ் (Phimosis) என்ற ஆணுறுப்பின் முன்புறத் தோலைப் பின்னோக்கித் தள்ள முடியாமல் இருப்பது; ஆணுறுப்பின் முன்புறத்தின் அடியில் இருக்கும் இணைப்புத்தோல் கூர்மையாக இருப்பது; சிறுநீர்ப்பாதையில் தொற்றுகள் இருப்பது; புராஸ்டேட் தொற்று; நரம்பு மண்டலங்களில் கோளாறு; சர்க்கரைநோய்; அதிக நாள்கள் இடைவெளிவிட்டு செக்ஸில் ஈடுபடுவது... இவையெல்லாம் முக்கியமான காரணங்கள்.

கணவன் மனைவி இடையே சண்டை; மனக் கசப்பு; பெண்கள் மீதிருக்கும் வெறுப்பு மனநோய்; பதற்றம்; விந்து சீக்கிரமாக வந்துவிடுமோ என்ற பதற்ற மனநிலை போன்றவை மன ரீதியான காரணங்கள். செக்ஸ் வைத்துக்கொள்வதற்கு முன்னர், உணர்ச்சிகளைத் தூண்டும்விதமான விளையாட்டுகளில் ஈடுபடுவதை (Sex Foreplay) ஆண்கள் செய்வதில்லை, பலருக்குத் தெரிவதுமில்லை. ஃபோர்ப்ளேயில் ஈடுபட்டால் பெண்களின் உணர்ச்சிகள் தூண்டப்பட்டு, அவர்களுக்கு இன்பம் கிடைக்க வழி கிடைக்கும். ஆண்களுக்கு விந்து சீக்கிரத்தில் வெளியேறும் பிரச்னையும் குறைய வாய்ப்பிருக்கிறது.

உடல்பிரச்னைகளுக்கான சோதனைகளைச் செய்து, அதற்கான மாத்திரைகளை உட்கொள்ளலாம். மனரீதியான பிரச்னைகளுக்கு செக்ஸ் தெரபி (Sex Therapy), நடத்தை தெரபி (Behavioural Therapy) போன்ற சிகிச்சைகள் உதவுகின்றன. இந்தப் பிரச்னைக்காக மருந்துக்கடைகளில் கிடைக்கும் மாத்திரைகளை வாங்கி உட்கொண்டால் பக்கவிளைவுகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. மருத்துவரின் பரிந்துரைப்படிதான் மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும்.

(இன்னும் கற்றுத் தருகிறேன்...)

---

'இம்முறை கஷோகியே ஈரான் சென்றார். அவர் கொண்டு சென்ற புதிய திட்டம் அமெரிக்காவின் லிஸ்றில் உள்ள அத்தனை ஆயுதங்களும் உங்களிற்கு கிடைக்கும் என்ற உத்தரவாதத்தை இஸ்ரேல் தரும். அதை பொறுப்பான ஆட்கள் உங்களிற்கு தருவார்கள். அதில் சந்தேகப்பட தேவையில்லை. ஆனால் பகுதிபகுதியாகவே ஆயுதங்கள் வரும். முதலாவது செற் ஆயுதங்கள் வந்ததும், ஒரு தொகுதி பயணக்கைதிகளையாவது விடுவிக்க வேண்டும். இதுதான் புதிய பிளான்.

இந்த டீல் ஈரானுக்கும் பிடித்துப் போக, முதலாவது செற் ஆயுதங்கள் எமது கையில் கிடைத்ததும், ஒரு பயணக்கைதியை விடுவிக்க செய்வோம் என்ற உத்தரவாதத்தை வழங்கினார்கள்.

ஆயுதங்கள் இஸ்ரேலில் இருந்து தெஹ்ரானுக்கு விமானம் மூலம் அனுப்பப்படும் என்று முடிவாகியது.


அமெரிக்கா கொடுத்த லிஸ்ட்டில் இருந்த ஆயுதங்கள் அனைத்தையும் இஸ்ரேல் தயார் செய்தது. அதற்கான பில் வாஷிங்டனுக்கு கொடுக்கப்பட்டு, பணமும் இஸ்ரேலுக்கு வந்து சேர்ந்தது.

1985ம் ஆண்டு, செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் முதலாவது செற் ஆயுதங்கள் ஈரானுக்கு போய் சேர்ந்தன. இஸ்ரேலின் நெகெவ் பாலைவன, ஹெட்செய்ம் விமானத் தளத்தில் இருந்து வந்த தனியார் கார்கோ விமானங்களில் வந்து இறங்கின அந்த ஆயுதங்கள்.

பணயக்கைதிகள், அதுவும் அமெரிக்க பணயக் கைதிகள் தொடர்புடைய விவகாரம் என்பதால், அமெரிக்கா இந்த ஆயுத சப்ளையில் தில்லுமுல்லு எதுவும் செய்யாமல், சொன்னது போலவே ஜென்டில்மேனாக நடந்து கொண்டது. ஈரானுக்கு கொடுக்கப்பட்ட லிஸ்டில் ஆயுதங்களின் லிஸ்ட்டை பாருங்கள்: 154 டாங்கிகள், இரண்டரை லட்சம் கட்ய்ஷா ரொக்கெட்டுகள், 10,000 தொன் ஆட்லறி ஷெல்கள், 3,000 ஆயிரம் வானிலிருந்து வானுக்கு ஏவப்படக்கூடிய ஏவுகணைகள் (AAM - Air-to-Air Missile), 4,000 ரைபிள்கள் மற்றும் கிட்டத்தட்ட 50 மில்லியன் தோட்டாக்கள்.

ஈரான் கற்பனை செய்ய முடியாதளவு ஆயுதங்கள் கொடுத்தால்தான், விசயத்தை சாதிக்கலாமென அமெரிக்கா கருதியதால்தான் இந்தளவு பெரிய தொகை ஆயுதங்கள் வழங்கப்பட்டன. இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், அமெரிக்காவால் இந்த லிஸ்ற் தயார்செய்யப்பட்டபோது, இவ்வளவு ஆயுதங்களும் தம்மிடம் விற்பனைக்கு உள்ளதென்றுதான் இஸ்ரேல் சொன்னது. ஆனால், உண்மையில் இவ்வளவு ஆயுதங்கள் உடனடியாக விற்பனைக்கு தயாராக இஸ்ரேலிடம் இருக்கவில்லை. அப்படியானால், எப்படி அந்தளவு ஆயுதங்களையும் இஸ்ரேல் வழங்கியது?

அடுத்த வாரம் இதற்கு பதில் சொல்கிறோம். (தொடரும்)



## சினி விமர்சனம்
## THE MERCURY

ஸ்டோன் பெஞ்ச் பிலிம்ஸ் தயாரிப்பில் கார்த்திக் சுப்புராஜ் இயக்கம் மற்றும் எழுத்தில் , பிரபுதேவா, ரம்யா நம்பீசன், சனந்த் ரெட்டி, 'மேயாத மான்' இந்துஜா மற்றும் பலர் நடித்திருக்கும் ஹாரர் படம் 'மெர்குரி'.ஒரு இரவில் நடக்கும் கதை. இந்துஜா, மற்றும் சனந்த் ரெட்டி உட்பட நான்கு நண்பர்கள் சகிதமாக மலைப்பிரதேசத்தில் உள்ள தனி பங்களாவிற்கு சுற்றுலா வந்திருக்கிறார்கள். ஐவருக்கும் காது கேட்காது மற்றும் வாய் பேச முடியாது. ஆட்டம், பாட்டம், பீர், பிறந்தநாள் கொண்டாட்டம் என சந்தோஷமாக இருக்கும் இளசுகள் இரவில் காரை எடுத்துக்கொண்டு வெளியில் செல்கிறார்கள். இடையில் குறுக்கே மறித்த நாயால் காரை திடீரென பிரேக் அடித்து மீண்டும் ஓட்டி செல்கிறார்கள். ஆனால் கார் மீண்டும் பிரச்னை செய்ய இறங்கி பார்த்தால் ஒரு இறந்த உடல் இவர்கள் காருடன் சிக்கியுள்ளது. யார், எப்படி நடந்தது, நண்பர்கள் குழு என்ன ஆனார்கள் என்பது மீதிக் கதை.

படம் முழுக்க வசனமே இல்லாததால் நடிகர்கள் நிச்சயம் நடித்தே ஆக வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். எனினும் பிரபுதேவா, இந்துஜா, சனந்த் ரெட்டி நால்வரின் முகங்களிலும் உணர்வுகள் காட்டி, நடிப்பில் அசத்துகிறார்கள். அதிலும் க்ளைமாக்ஸில் என்ன நடந்தது என விளக்கும் போது நம்மையும் மீறி மனம் கனப்பதை உணரலாம். படத்திற்கு பெரிய பலம். ஒளிப்பதிவு மற்றும் ஆர்ட் டைரக்ஷன், பழைய ஃபேக்டரி செட்டிங் வசனமே இல்லாத அமைதியான சூழலுக்கு மேலும் த்ரில் தருணங்களை சேர்த்திருக்கிறது. கார் பயணம், பில்டிங் எஸ்கேப் என திருவின் ஒளிப்பதிவு தரம். எனினும் படம் வெறும் ஒன்றரை மணிநேரம் என்பதால் நம்மை சீட்டு நுனிக்கு இழுத்து வந்து திக் திக் நிமிடங்களை கொடுப்பார்கள் என நினைத்தால் கொஞ்சம் ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது. இதில் முதல்பாதி முடிவில் தான் கதையே ஆரம்பிக்கிறார்கள். மேலும் படம் முழுக்க இது பேய்ப் படம்தானா என நமக்கு நாமே அவ்வப்போது கேட்டுக்கொள்ளும்படியான குழப்பமான திரைக்கதை.

ஒருகட்டத்தில் சில மாதங்களுக்கு முன்பு வெளியான ஹாலிவுட் த்ரில்லர் படம் 'டோன்ட் ப்ரீத் படக் காட்சிகளை மனதில் கொண்டு வந்துவிடுகிறது. எதையோ சொல்ல நினைத்து என்னென்னவோ காட்டி கடைசியில் அப்பாடா இது பேய் படம்தானா என்னும் தெளிவு பெறுவதற்குள் க்ளைமாக்ஸ் வந்துவிடுகிறது. எனினும் வசனமே இல்லாமல் முக்கியமாக பாடல்கள் ஏதுமின்றி ஒரு ஹாரர் மிழ்ப்படம் கொடுத்திருக்கும் கார்த்திக் – கோ குழுவிற்கு பாராட்டுகள். மொத்தத்தில் 'மெர்குரி' கதையளவில் குழப்பி தொழில்நுட்ப ரீதியில் நிறைவு தருகிறது.



## இலியானா கர்ப்பமா?

'நண்பன்'பட ஹீரோயின் இலியானா தற்போது இந்தி படங்களில் நடித்து வருகிறார். இவரது பாய்பிரண்ட் ஆண்ட்ரு நியுபோன். இருவரும் கடந்த சில ஆண்டுகளாக நெருக்கமாக பழகி வருகின்றனர். இலியானாவின் டாப்லெஸ், நிர்வாண போஸ் படங்களை ஆண்ட்ருதான் படமாக்கித் தருகிறார். காதல் ஜோடியாகி அடிக்கடி டேட்டிங்கில் ஈடுபடுகின்றனர். எப்போதும் இறுக்கமான உடை அணிந்து உடலை ஸ்லிம் தோற்றத்தில் எடுப்பாக காட்டி போஸ் தரும் இலியானா சமீபகாலமாக மிகவும் லூசான, தொள தொள ஆடைகளை மட்டுமே அணிகிறார். சில தினங்களுக்குமுன் ஆண்ட்ருவை கட்டிப்பிடித்தபடி நிற்கும் புகைப்படத்திலும் தொள தொள ஆடை அணிந்திருந்தார் இலியானா. அவர் கர்ப்பமாக இருப்பதால்தான் தொள தொள உடைகளை அணிவதாக சிலர் சந்தேகம் கிளப்பினர். இலியானாவும், ஆண்ட்ருவும் ஏற்கனவே ரகசிய திருமணம் செய்துகொண்டனர் என்று கடந்த ஆண்டு தகவல் வெளியானது. இதுகுறித்து இலியானாவிடம் கேட்டபோது கடுப்படித்தார். 'என் சொந்த வாழ்க்கை பற்றி வெளிப்படையாக பேசவேண்டிய அவசியமில்லை. எல்லோரும் எல்லாவற்றையும் வெளிப்படையாக பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். எனது சொந்த வாழ்க்கை பற்றி அதிகம் கேள்வி கேட்காதீர்கள். என்ன சொல்ல வேண்டுமோ அதை நானே சொல்வேன். இதெல்லாம் எனக்கு பயத்தைத்தான் ஏற்படுத்துகிறது. கிசுகிசு பகுதிக்கு தகவல் அளிப்பதை நான் விரும்பவில்லை. அதில் இடம்பெறுவதும் எனக்கு பிடிக்கவில்லை'என்றார்.

## வசூலை பொறுத்தே நடிகர்களின் சம்பளம்!

சினிமா ஸ்டிரைக்கிற்கு பிறகு பல அதிரடியான நடவடிக்கைகள் தமிழ் சினிமாவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் முக்கியமான ஒரு விஷயம் நடிகர்களின் சம்பளம் குறைப்பு தொடர்பானது. இதுதொடர்பாக, நடிகர் சங்கத்தினர் சென்னை அண்ணாசாலையில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் ஆலோசனை செய்தனர். தலைவர் நாசர், பொதுச் செயலாளர் விஷால், பொருளாளர் கார்த்தி உள்ளிட்ட நிர்வாகிகளுடன் நடிகர்கள் சிம்பு, அரவிந்த்சாமி, விஜய் சேதுபதி, ஆர்யா, கலையரசன், சுஹாசினி, கஸ்தூரி, நகுல், ஜிவி பிரகாஷ், பரத், கவுதம் கார்த்திக், கணேஷ் வெங்கட்ராம், கிருஷ்ணா உள்ளிட்ட பல நடிகர்கள் பங்கேற்றனர். இந்தக்கூட்டத்தில், படத்தயாரிப்பில் தயாரிப்பாளர்களுக்கு ஏற்படும் கூடுதல் செலவினங்களை குறைப்பது மற்றும் நடிகர்கள் சம்பளம் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. கூட்டத்திற்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய கார்த்தி, "திரைப்படத்தின் வருமானம், லாபத்தை வைத்து நடிகர்களின் சம்பளம் நிர்ணயிக்கப்படும்; ஊதிய நிர்ணயம் விரைவில் தயாரிப்பாளர்கள் சங்கத்தில் அமல்படுத்தப்படும்" என்றார். நடிகர் சங்க தலைவர் நாசர் பேசும்போது, தயாரிப்பாளர்கள் சங்கம் எடுக்கும் விஷயங்களுக்கு நடிகர் சங்கம் முழு ஒத்துழைப்பு கொடுக்கும் என்றார்.

## அபிஷேக்- ஐஸ்வர்யா குடும்ப தகராறா?

பாலிவுட்டின் நட்சத்திர தம்பதியர் அபிஷேக் பச்சன் ஐஸ்வர்யா ராய். கடந்த 2007ம் ஆண்டு திருமணம் செய்து கொண்ட இவர்களுக்கு ஆராத்யா என்ற பெண் குழந்தை உள்ளது. இருவரும் சினிமாவில் நடித்து வருகின்றனர். சமீபகாலமாக ஐஸ்வர்யாவுக்கும், அபிஷேக்கிற்கும் இடையே சரியான புரிதல் இல்லை என்றும், ஒரே வீட்டில் வாழ்ந்தாலும் இருவரும் தனித்தனியாக இருப்பதாக கூறப்படுகிறது. மேலும் அபிஷேக்கின் செல்போனை எடுத்து, அவர் யார் உடன் எல்லாம் பேசுகிறார் என்பதை ஐஸ்வர்யா ராய் கண்காணித்ததாவும், இதனால் ஐஸ்வர்யா மீது அபிஷேக் கோபப்பட்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. இது ஹிந்தி திரையுலகில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஆனால் இதை ஐஸ்வர்யா ராய் மறுத்துள்ளார். இதனிடையே அபிஷேக் ஐஸ்வர்யா தம்பதியருக்கு ஏப். 20 அவர்களின் திருமண நாள். 10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளனர். இதை வெளிப்படுத்தும் விதமாக அபிஷேக் தன் இன்ஸ்டிராகிராமில் ஒரு போட்டோவை வெளியிட்டு ஐஸ்வர்யா ராய் உடனான தன் அன்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.

## காஜலின் 71 இலட்ச முத்தம்!

இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தன்னை பின் தொடரும் 71 லட்சம் ரசிகர்களுக்கும் நடிகை காஜல் அகர்வால் முத்த பரிசை அளித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள முத்தமிடும் புகைப்படமும் காட்டுத்தீயாய் பரவி வருகிறது. இவரை ட்விட்டரில் பின் தொடரும் ரசிகர்களின் எண்ணிக்கை 16 லட்சம் மட்டுமே. இதனிடையே ஆந்திர முதல்வர் என்.டி.ராமராவ் வாழ்க்கை வரலாறு தெலுங்கில் படமாகிறது. தந்தை ராமராவ் வேடத்தில் அவரது மகன் என்.டி.பாலகிருஷ்ணா நடித்து வருகிறார். என்.டி.பாலகிருஷ்ணா ஜோடியாக காஜல் அகர்வால் ஜோடியாக நடிப்பதாக தகவல்கள் வெளியாகியது. இதுகுறித்து காஜல் அகர்வாலுக்கு தகவல் தெரியவந்ததும் அவர் பதில் அளித்திருக்கிறார். எனக்கு அதுபோன்ற (ஜெயலலிதா கதாபாத்திரம்) வாய்ப்பு எதுவும் வரவில்லை. அவர் வேடத்தில் நான் நடிக்க உள்ளதாக வரும் தகவல் உண்மை கிடையாது' என்றார்.

## கீர்த்தி சுரேஷின் அப்பாவாகும் லிவிங்ஸ்டன்

சினிமாவில் வில்லனாக அறிமுகமானவர் லிவிங்ஸ்டன். சொல்லாமலே உள்பட சில படங்களில் கதாநாயகனாகவும் நடித்தார். பின்னர் கேரக்டர் நடிகராக மாறினார். பல படங்களில் காமெடி கலந்த வேடங்களிலேயே நடித்து வரும் லிவிங்ஸ்டன், தற்போது ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்து வரும் 62வது படத்தில் கீர்த்தி சுரேஷின் அப்பாவாக நடிக்கிறார். இந்த படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு சென்னையில் நடந்து வந்த நிலையில், இரண்டாம்கட்ட படப்பிடிப்பு ஏப்ரல் 25ந் திகதி முதல் சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து என சில வெளிநாடுகளில் நடைபெற உள்ளதாம். அங்கு தான் இப்படத்தின் முக்கிய பாடல்கள் மட்டுமின்றி சண்டை காட்சிகள் படமாக்கப்படுகிறதாம்.

சமூக வலைத்தளங்களில் /deepamlive



# வண்ணத் திரை



## மீண்டும் வருகிறார் பூனம்!

பிரபல பஞ்சாபி நடிகை சோனம் பாஜ்வா. தமிழில் கப்பல் படத்தில் நடித்தார். அந்த படம் சரியாக போகாததால் தொடர்ந்து அவருக்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லை. இதனால் மீண்டும் பஞ்சாபி படங்களுக்கே திரும்பி விட்டார். தற்போது பஞ்சாபி படங்களுடன் ஹிந்திப் படத்திலும் நடித்து வருகிறார். 4 ஆண்டுகளுக்கு பிறகு அவரை மீண்டும் அழைத்து வந்திருக்கிறார் இயக்குனர் டி.கே. யாமிருக்க பயமே, கவலை வேண்டாம் படங்களுக்கு பிறகு அவர் இயக்கும் காட்டேரி படத்தில் சோனம் பாஜ்வா தான் நாயகி. இதில் முதலில் நடிப்பதாக இருந்த ஓவியா கால்ஷீட் விஷயத்தில் சொதப்பியதால் சோனம் பாஜ்வாவுக்கு அதிர்ஷ்டம் அடித்தது. அவருடன் வரலட்சுமியும் நடிக்கிறார். வைபவ் ஹீரோ. ஸ்டுடியோ கிரீன் சார்பில் ஞானவேல்ராஜா தயாரிக்கிறார். பல மாதங்களுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்ட படம். தயாரிப்பாளருக்கு வந்த சில பிரச்னைகள், சினிமா வேலை நிறுத்தம் இவற்றால் தாமதமாகி இப்போது முழுவீச்சில் படப்பிடிப்பை தொடங்கி விட்டார்கள்.

## ராஜமௌலியின் அடுத்த பட பட்ஜெட் 300 கோடி?

ராஜமௌலி இயக்கத்தில் வெளிவந்த பாகுபலி படத்தின் இரண்டு பாகங்களுக்குமான மொத்த செலவே 300 கோடி தான் என்று பேச்சு உண்டு. படத்தை பெரும்பாலும் அரங்கில், கிரின் மேட்டில் எடுத்ததால் அவ்வளவு பெரிய பிரம்மாண்டமான படத்தை எடுக்க முடிந்து என்ற தகவல் உண்டு. ஆனால், படத்தின் பட்ஜெட் என்ன என்பதை இதுவரை அவர்கள் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை. இந்தியாவில் அதிக பட்ஜெட் படமாக 400 கோடி ரூபாய் தற்போது ரஜினிகாந்த் நடிக்கும் ; படம்தான் எடுக்கப்பட்டு வருகிறது. ராஜமௌலி அடுத்து ஜூனியர் என்டிஆர், ராம்சரண் ஆகியோரை வைத்து எடுக்க உள்ளார். இப்படத்திற்கான கதை எழுதும் வேலைகள் அனைத்தும் முடிந்துவிட்டதாம். படத்திற்கான பட்ஜெட்டாக சுமார் 300 கோடி ரூபாய் நிர்ணயித்துள்ளார்களாம். சரித்திரப் படத்தை எடுக்கவும், சயின்ஸ் பிக்ஷன் படத்தை எடுக்கவும் 300 முதல் 400 கோடி ஆகும். அப்படியென்றால் ராஜமௌலி அடுத்து எடுக்கப் போகும் படம் என்ன மாதிரியான படம், அதற்கு ஏன் 300 கோடி ரூபாய் பட்ஜெட் என்று பலரும் யோசித்து வருகிறார்களாம்.

## மனைவிக்கும் கொடுக்காத சூர்யா!

11 ஆண்டுகளுக்கு முன் பிரகாஷ்ராஜ் தயாரிப்பில் ராதாமோகன் இயக்கத்தில் ஜோதிகாவும் நடித்த படம் மொழி. இத்தனை வருடங்களுக்குப் பிறகு தற்போது இவர்கள் இருவரும் மீண்டும் ஒரு படத்தில் இணைந்துள்ளனர். ஹிந்தியில் வித்யா பாலன் நடிப்பில் வெளியாகி வெற்றிபெற்ற துமாரி சுலு என்ற படத்தின் ரீமேக்கான இந்த படத்தில் ஜோதிகாவுக்கு ஜோடியாக விதார்த் நடிக்கிறார். தெலுங்கு நடிகையான லட்சுமி மஞ்சு முக்கிய வேடம் ஒன்றில் நடிக்கிறார். இந்தப் படத்துக்கு ஜோதிகாவை குஷிப்படுத்துவதற்காக முதலில் உங்கள் ஜோ என்று தலைப்பு வைக்க திட்டமிட்டிருந்தனர். இந்த டைட்டிலை ஜோதிகா மிகவும் விரும்பிய நிலையில், அவரது கணவரான நடிகர் சூர்யா அந்த தலைப்பை வைக்க எதிர்ப்பு தெரிவித்ததோடு அனுமதி கொடுக்கவும் மறுத்துள்ளார். அதன் பிறகே இப்போது படத்திற்கு காற்றின் மொழி என்று பெயர் சூட்டப்பட்டு அதனை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்கள். ராதாமோகன் இயக்கத்தில் ஜோதிகா நடித்த மொழி படத்தில் இடம் பெற்ற பாடல் வரியை படத்திற்கு தலைப்பாக்கிவிட்டனர்.

## சமுத்திரக்கனிக்கு ஜோடியே கிடையாது!

சமுத்திரக்கனி படம் இயக்குவதை குறைத்துக்கொண்டு நடிப்பில் கவனம் செலுத்தி வருகிறார். ஹீரோ, குணசித்ரம், வில்லன் என எல்லா வேடங்களையும் ஏற்கிறார். ரஜினியின், 'காலா' படத்திலும் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். இந்நிலையில் சீனு ராமசாமி இயக்கும் புதியபடத்தில் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார் சமுத்திரக்கனி. சமீபத்தில் தாங்கள் இணைவதுபற்றி சீனுவும், சமுத்திரக்கனியும் தகவல் வெளியிட்டனர். விரைவில் படப்பிடிப்பு தொடங்க இருப்பதாக தெரிவித்திருந்தனர். இதுகுறித்து இயக்குனர் சீனு ராமசாமி கூறும்போது, 'கடந்த 6 மாதங்களாக இருவரும் இணைந்து பணியாற்றுவதுபற்றி பேசி வந்தோம். தற்போது முடிவாகி இருக்கிறது. ஆனால் படப்பிடிப்பு தொடங்கும் தேதி இன்னும் முடிவு செய்யப் படவில்லை. முன்னதாக விஜய்சேதுபதி நடிக்கும் மாமனிதன் படம் இயக்க உள்ளேன். அவர் வேறு படங்களில் நடித்து வருகிறார். அவரது கால்ஷீட் கிடைத்ததும் இப்படத்தை முதலில் தொடங்குவேன். இளையராஜா, கார்த்திக் ராஜா, யுவன் சங்கர்ராஜா மூவரும் இணைந்து இப்படத்துக்கு இசை அமைக்க உள்ளனர். தற்போது திரையுலகில் வேலை நிறுத்தம் நடப்பதால் அது முடிந்தபிறகு பணிகள் தொடங்கும். சமுத்திரக்கனி நடிக்கும் படம் கிராமத்து பின்னணியில் உருவாகிறது. கிராமத்தில் நேர்மை மாறாத குணம் படைத்தவராக அவர் வேடம் ஏற்கிறார். அவருக்கு வசனங்கள் குறைவாகவே இருக்கும். ஜோடியும் கிடையாது' என்றார்.

## கவர்ச்சி நல்லதாம்!

முகமூடி படத்தில் நடித்தவர் பூஜா ஹெக்டே. குடும்பபாங்கான பாத்திரங்களில் தோன்றியவர் திடீரென்று புதியபட மொன்றில் கவர்ச்சி வேடத்தில் நடித்தார். அவரது கவர்ச்சி தோற்றத்தை சிலர் கிண்டல், கேலி செய்து மெசேஜ் போட்டதுடன் விமர்சனமும் செய்தனர். அதைக்கண்டு டென்ஷன் ஆனார் பூஜா. அந்த கோபத்தில் டூ பீஸ் நீச்சல் உடையில் படுகவர்ச்சியாக நீச்சல் குளம் அருகில் நிற்பதுபோல் போட்டோ வெளியிட்டார். பிறகு இதுபற்றி பூஜா ஹெக்டே கூறியது: எல்லா பெண்களும் தங்களது உடற்தோற்றத்தை ரசிக்க கற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் சில சின்னபுத்திக்காரர்கள் உங்களை கேலி பேசி நம்பிக்கை இழக்க வைப்பார்கள். அதைபொருட்படுத்த வேண்டாம். அவர்களை கண்டுகொள்ள வேண்டாம். நீச்சல் உடை அணிவதன் மூலம் உங்களது தோற்றத்தை கண்டு பெருமை கொள்ளுங்கள். இதை புரட்சியாக எண்ணுங்கள்.

# முதல்நாளே நறுக்கி வைக்கப்படும் காய்கறி... வாரமொருமுறை ஆடை துவைப்பு

## வேலைக்கு செல்லும் பெண்கள் செய்யும் 8 தவறுகள்



காலையில் அலாரம் அடித்து எழுப்பும்போது ஆரம்பிக்கும் வேகம் சமையல், குழந்தைகள், கணவர், தன் வேலை அலுவக வேலையில் ஆரம்பித்து இரவு வீட்டு வேலை வரை பூமியைப் போல் நிற்காமல் சுழன்று கொண்டிருக்க வேண்டிய பணி, வேலைக்குச் செல்லும் பெண்களுடையது. தொடர்ந்து பயணிக்கும் வாழ்க்கையில் அவர்கள் செய்யும் தவறுகள் சில... அது இயல்புதானே என்பவர்களுக்கு... அதனால் உடல்நலமும், குடும்ப நலனும் அல்லவா பாதித்துவிடும். இதோ வேலைக்குச் செல்லும் பெண்கள் செய்யும் சில தவறுகள்..

**1. காய்கறிகளை முதல் நாள் இரவே நறுக்கிவைப்பது.**

வேலைக்குச்செல்லும்சிலபெண்கள், காலை நேரத்துப் பரபரப்பை குறைக்க, முதல் நாள் இரவே காய்கறிகளை நறுக்கி வைத்துவிடுகிறார்கள். இது மிகவும் தவறு. பழங்கள் மற்றும் காய்கறிகளில் அதிக அளவு விற்றமின் சி மற்றும் பி கொம்ப்ளக்ஸ், நார்ச்சத்துக்கள் உள்ளன. சமைப்பதற்கு வேகு நேரத்துக்கு முன்பே காய்களை நறுக்கி, ஃப்ரீட்ஜில் வைப்பதால், இந்த விற்றமின், நார்ச்சத்துகள் பெரும்பாலும் காற்றில் கலந்துவிடும். மேலும், குளிர்சாதனப் பெட்டியில் ஏற்கனவே வைத்திருக்கும் சில பொருள்கள், எளிதில் பக்டீரியாவை பரப்பும். எனவே, நறுக்கிய காய்களிலும் பக்டீரியா பரவலாம். அதனால், காய்களை இரவே நறுக்கிவைக்கும் பழக்கத்தை தவிர்க்கவும்.

**2. காலை உணவைத் தவிர்ப்பது!**

அதிக வேலை, நேரம் இல்லை, டயட் என எந்தப் பெயரில் சொன்னாலும், காலை உணவை ஸ்கிப் செய்வது, பல நோய்களுக்கு இன்விடேஷன் கொடுத்து வரவைப்பதற்குச் சமம். இரவு உணவுக்குப் பிறகு, நீண்ட இடைவெளி காரணமாக இரைப்பையில் அதிக அமிலம் சுரந்திருக்கும். இந்தச் சமயத்தில் உணவைத் தவிர்த்தால், அமிலத்தால் இரைப்பை சிதையத் தொடங்கும். முதல் நாள் இரவில் இயல்பாக ஏறிய பித்தம், மெதுவாகத் தலைக்கு ஏறும். அது வயிற்றுப்புண், வயிற்று உப்புசம், தீவிரமான வயிற்று வலி, வாந்தி, பசியின்மை, உயர் ரத்த அழுத்தம், மன அழுத்தம் எனப் பல நோய்களைக் கொண்டுவந்து சேர்க்கும். காலை உணவைத் தாமதமாக எடுத்துக்கொண்டாலும், உடலில் ட்ரான்ஸ்பேட் கொழுப்பும் கலோரியும் அதிகரித்து, அடிவயிற்றில் படியும். ஆகவே, காலை உணவைக் தவிர்க்க வேண்டாம் தோழிகளே!

**3. குழந்தைகளை அக்கம்பக்கம் வீட்டாரிடம் விடுவது!**

கூட்டுக் குடும்பம் அரிதாகி விட்டதால், அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களில் பலர், குழந்தையைப் பக்கத்தில் உள்ள வீட்டார்களிடம் ஒப்படைக்கிறார்கள். இது, குழந்தைகளுக்கும் பெற்றோருக்கும் உள்ள நெருக்கத்தை உடைக்கும். தவிர, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் சீண்டல் அதிகரித்துவரும் சூழலையும் மனதில்கொள்ள வேண்டும். எனவே, தனது அல்லது கணவனின் தாய் போன்ற நெருங்கிய உறவினரிடம் ஒப்படையுங்கள். முடியாதபட்சத்தில், தரமான குழந்தைகள் காப்பகத்தில் ஒப்புடைப்பது நல்லது.

**4. அழகு சாதனப் பொருள்கள் பயன்பாடு!**

அலுவலகத்தில் அழகாகத் தெரிய வேண்டும் என்பதற்காக, சில பெண்கள் எப்போதுமே மேக்கப்பில் இருப்பார்கள். அந்த அழகு சாதனப் பொருள்களை எவ்வளவு பயன் படுத்த வேண்டும், எப்படிப் பயன் படுத்த வேண்டும் என்ற முறையான வழிகாட்டல் இல்லாமல், இஷ்டத்துக்குப் பயன்படுத்துவார்கள். இது, சரும பாதிப்புகளை ஏற்படுத்தும். எனவே, தோல் மருத்துவரை அணுகி, உங்களின் ஸ்கினுக்கு ஏற்றதைத் தேர்வுசெய்து, சரியான அளவில் பயன்படுத்துங்கள். அழகுடன் ஆரோக்கியமும் இருக்கும்.

**5. அலுவலக வேலையை வீட்டில் பார்ப்பது!**


பல பெண்கள் அலுவலக வேலையையும் வீட்டு வேலையையும் சமன் செய்வதில்தான் பல இடையூறுகளைச் சந்திக்கின்றனர். சரியான திட்டமிடலுடன் செயல்படுவதன் மூலம் இந்தப் பிரச்னையைத் தவிர்க்கலாம். அலுவலகப் பணியை வீட்டில் பார்க்கும்போது, உங்கள் குழந்தை மற்றும் கணவருக்குச் செலவிடும் நேரத்தையும் அன்பையும் இழக்கிறீர்கள் என்பதை மனதில்கொண்டு, திட்டமிட்டுச் செயல்படுங்கள்.

**6. மாதவிடாய் காலம்!**

அலுவலகம் செல்லும் பெண்கள் சந்திக்கும் மிகப்பெரிய சவால், மாதவிடாய் நாள்கள். அதிக வேலை, ஆண்களுக்கு மத்தியில் பணிபுரியும் சூழல் போன்றவற்றால், நாப்கின்களை கழிப்பறைக்கு எடுத்துச்செல்லத் தயங்கி, மணிக்கணக்கில் மாற்றாமல் இருப்பார்கள். இது, தொற்றுநோய், சரும அலர்ஜி போன்றவற்றுக்கு வழிவகுக்கும். மேலும், மாதவிடாய் காலத்தில் அதிக அளவு உதிரப்போக்கினால் சில பெண்கள் சோர்ந்து இருப்பர். இது, அலுவகத்தில் உங்களின் திறமை குறித்த மதிப்பைக் கெடுக்கும். எனவே, இரும்புச்சத்து நிறைந்த உணவை அதிகம் சாப்பிட்டு, ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்புடனும் செயல்படுங்கள்.

**7. சேர்த்துவைத்து துணிகளைத் துவைத்தல்!**

அலுவலகம் செல்லும் பெண்களில் 90% பேர், அலுவலகத்துக்கு போடும் துணிகளைத்தவிர மற்ற நாள்களில் பயன்படுத்திய துணிகளை ஒரு கூடையிலோ, வீட்டின் ஓரத்திலோ போட்டு வைத்திருப்பார்கள். நாம் பயன்படுத்திய ஆடைகளில் வியர்வையின் காரணமாக பக்டீரியா, கிருமிகள் இருக்கும். பயன்படுத்திய ஆடைகளை மொத்தமாகப் போட்டு வைக்கும்போது, வீட்டில் உள்ள குழந்தைகள் மற்றும் நோய் எதிர்ப்புசக்தி குறைபாடு உடையவர்களுக்குக் கெடுதல் ஏற்படும். எனவே, சிரமம் பார்க்காமல், பயன்படுத்திய துணிகளை அன்றாடம் துவைத்துவிடுவது நல்லது.



**8. பாலியல் சீண்டல்கள்!**

சில பெண்கள் அலுவலகத்தில் பாலியல் சீண்டல்கள், கேலிகளுக்கு ஆளாகலாம். இதுபோன்ற சூழலில் பயம் மற்றும் தயக்கத்தால் பிரச்னையைத் தள்ளிப்போடுவார்கள். இது, தவறு செய்பவர்களுக்கு நம் மீதான பார்வையை, கரக்டரை வேறு மாதிரியாக மாற்றிவிடும். எனவே, ஆரம்பத்திலே சரியான பதிலடி கொடுக்க வேண்டும். உயர் அதிகாரிகளுக்கு அல்லது பாதுகாப்பு சம்பந்தப்பட்ட நபருக்குத் தெரிவித்து விஷயத்தை முடிக்க வேண்டும்.








குறைந்த விலையில் அதிக ஊட்டச்சத்துள்ள ஓர் உணவு முட்டை. அனைவரின் உணவுப் பட்டியலிலும் தவறாது இடம்பெற வேண்டிய முக்கிய உணவு. வளரும் குழந்தைகளுக்குத் தினசரி ஒரு முட்டை கொடுக்க வேண்டும் என மருத்துவர்கள் கூறுகிறார்கள். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த முட்டை பற்றி ஏராளமான சர்ச்சைகள். முட்டை சைவமா, அசைவமா என்பதில் தொடங்கி, பிளாஸ்டிக் முட்டை வரை.

இந்தச் சர்ச்சைகளைக் கடந்து முட்டையைப் பற்றி ஏகப்பட்ட சந்தேகங்கள். அவிக்காத முட்டையைச் சாப்பிடலாமா? இரவு நேரத்தில் முட்டை சாப்பிடலாமா? சமைத்தபிறகு எவ்வளவு நேரத்துக்குள் முட்டையைச் சாப்பிட வேண்டும்?

இப்படியான எல்லாக் கேள்விகளுக்கும் விரிவாகப் பதில் அளிக்கிறார் ஊட்டச்சத்து நிபுணர் மீனாட்சி.

நாம் சாப்பிடும் சாதாரண கோழி முட்டையில் நமக்குத் தேவையான அனைத்து விற்றமின் சத்துகளும் நிறைந்திருக்கின்றன. அதனால்தான் 'உலகின் மிகச் சிறந்த உணவு வகைகளில் ஒன்று' என்கிற முக்கியமான இடத்தை முட்டைக்குக் கொடுத்துவைத்திருக்கிறார்கள்.

40 முதல் 50 கிராம் எடை கொண்ட ஒரு முட்டையில், 187 மில்லிகிராம் கொழுப்புச்சத்து உள்ளது. சாதாரணமாக ஒரு மனிதருக்கு ஒரு நாளைக்குத் தேவையான கொழுப்புச்சத்தின் அளவு 300 மில்லிகிராம்தான். இரண்டு முட்டைகள் அந்தக் கொழுப்புச்சத்தின் தேவையைப் பூர்த்தி செய்துவிடும். 78 கலோரிகள் கொண்ட ஒரு முட்டையில் 6.6 கிராம் புரதச்சத்து இருக்கிறது. குறிப்பாக, ஊர்க்கோழி முட்டையில் ரிபோஃப்ளேவின், பயோடின் விற்றமின்கள் பி2, பி6, பி12, ஏ, டி ஆகியவையும் செலினியம், துத்தநாகம், இரும்பு, காப்பர், அயோடின் போன்ற கனிமச்சத்துகளும் இருக்கின்றன.

முட்டையில் உள்ள லூட்டீன் (Lutein) மற்றும் சியார்க்ஸாந்தின் (Zeaxanthin), கோலின் (Choline) போன்ற சத்துகள் நமக்குப் பலவழிகளில் உதவுபவை. இவை கண்புரை, விழித்திரையில் ஏற்படும் மாகுலர் டீஜெனரேஷன் (Macular degeneration) பாதிப்பு மற்றும் மூளை வளர்ச்சிப் பாதிப்புகளிலிருந்து நம்மைப் பாதுகாக்க உதவுபவை. கல்சியம், பொஸ்பரஸ், விற்றமின் டி போன்ற சத்துகள் முட்டையில் நிறைவாக இருக்கின்றன. இவை உடலில் நோய் எதிர்ப்புசக்தி அதிகரிக்க உதவும். முட்டையில் உள்ள லியூசின் (Leucine) என்ற அமினோ அமிலம், தசைகளுக்கிடையே உள்ள புரதச்சத்தை (Muscle Protein Synthesis) மேம்படுத்தி, அவை வலுப்பெற உதவும்.

### யாரெல்லாம் சாப்பிட வேண்டும்?

முட்டையிலிருக்கும் கோலின் (Choline) சத்து, குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு உதவக்கூடியது. கருவுற்ற தாய்மார்கள் முட்டை சாப்பிட்டால், வயிற்றிலுள்ள குழந்தையின் மூளை வளர்ச்சி சீராக இருக்கும். குழந்தை, மூளை தொடர்பான எந்தக் குறைபாடும் இல்லாமல் பிறக்கும். முட்டையிலிருக்கும் ஃபோலிக் அமிலம், வயிற்றில் வளரும் குழந்தையின் நரம்புகளில் எந்தப் பாதிப்பும் ஏற்படாமல் இருக்க உதவும். பொதுவாகவே வளரும் குழந்தைகள், தினமும் ஒரு முட்டையைப் பாலுடன் சாப்பிடுவது அவர்கள் ஆரோக்கியத்துக்கு நல்லது.

அதிக எடையோடு இருப்பவர்கள், உடலில் கொழுப்புச்சத்து அதிகம் உள்ளவர்கள் வாரத்துக்கு இரண்டு முறை முட்டை சாப்பிட்டால் போதுமானது. ஆனால், அவர்களும் முட்டையில் உள்ள மஞ்சள் கருவைத் தவிர்த்துவிட்டு, வெள்ளைக்கருவை மட்டும் சாப்பிடுவது நல்லது. அதிலும் புரொய்லர் கோழி முட்டைகளைவிட ஊர்க்கோழி முட்டைகளே சிறந்தவை.

### எப்படி உட்கொள்வது?

முட்டையைச் சப்பாத்தி ரோலாகவோ பொரியலாகச் செய்து உணவுடன் கலந்தோ சாப்பிடலாம். முட்டை கிரேவியாக அல்லது காய்கறிகளுடன் கலந்தும் சாப்பிடலாம். ஒம்லெட்டாகச் செய்து உட்கொள்ளலாம். ஆனால், முட்டையைப் பச்சையாகவோ, அரை வேக்காடாகவோ, வேகாத மஞ்சள் கருவாகவோ உட்கொள்ளக் கூடாது.

சிலருக்கு மாலை வேளையில் முட்டை பப்ஸ் சாப்பிடும் பழக்கம் இருக்கும். இந்த முட்டை பப்ஸ் விஷயத்தில் அதிகக் கவனத்துடன் இருக்க வேண்டும். சில கடைகளில் காலையில் செய்த பப்ஸையே மாலை வரை வைத்திருந்து விற்பார்கள். அந்த பப்ஸில்இருக்கும்முட்டை மாலைக்குள் நிச்சயம் கெட்டுப்போய், சாப்பிடத் தகாததாக ஆகியிருக்கும். எனவே, ஆரோக்கியம் காக்க விரும்புகிறவர்கள் கடைகளில் விற்கப்படும் முட்டை பப்ஸைத் தவிர்ப்பது நல்லது.

அதேபோலக் கடைகளில் விற்கப்படும் பிரியாணியுடன் அவித்த முட்டைகள் பரிமாறப்படும். அந்த முட்டைகள் எப்போது சமைக்கப்பட்டவை என்பதைத் தெரிந்துகொண்டு சாப்பிட வேண்டும். காலையில் சமைக்கப்பட்டு, மதியம் / இரவு என நேரம் கடந்து பரிமாறப்படும் முட்டைகள் நம் உடலுக்குக் கெடுதலைத்தான் கொண்டுவந்து சேர்க்கும்.


சிலர், கிரேவியாகவோ குழம்பாகவோ முட்டையைச் சாப்பிடுவார்கள். முட்டை சமைக்கப்பட்ட நேரத்துக்கும் சாப்பிடப்போகும் நேரத்துக்கும் நடுவே அதிக இடைவெளி இருக்கக் கூடாது. இதை மஞ்சள் கருவோடு சேர்த்துச் சாப்பிடுபவர்கள் வாரத்துக்கு இரண்டு முறைக்கு மேல் சாப்பிட வேண்டாம்.

கருவுற்றிருக்கும் பெண்கள், முட்டை சூப், அவித்த முட்டை, முட்டைத் துருவல் என உட்கொள்ளலாம். அரை அவியலுக்குகண்டிப்பாக 'நோ' சொல்லி விட வேண்டும். அரை அவியல் சாப்பிடும் பெண்களின் குழந்தைகளுக்கு சால்மோனெல்லா (Salmonella) போன்ற பக்டீரியா பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு உண்டு... கவனம்!

வயதானவர்கள் வேகவைத்த முட்டையின் வெள்ளைக்கருவை தினமும் ஒருமுறை சாப்பிடலாம். மஞ்சள் கரு சாப்பிடும் முதியவர்கள் வாரத்துக்கு இரண்டு அல்லது மூன்றுமுறை சாப்பிட்டால் போதும். கிரேவி, ஒம்லெட், பொரியல் எனச் செய்து சாப்பிடும் முதியோர் அதில் எண்ணெயைக் குறைவாகச் சேர்க்க வேண்டும். அதிலும் இதயம் தொடர்பான பாதிப்பு உள்ளவர்கள், நீரிழிவு நோயாளிகள், வேறு ஏதும் உடல் பிரச்னைகள் உள்ளவர்கள் மருத்துவர்களின் ஆலோசனையின்படி முட்டையைச் சாப்பிடுவது நல்லது.

### எதனோடு, எப்போதெல்லாம் சாப்பிடக் கூடாது?

பரோட்டா, பீட்சா, பப்ஸ் போன்ற மைதாவில் செய்த உணவுகளைச்



சாப்பிடும்போது முட்டை சாப்பிடக் கூடாது. கடினமான உடற்பயிற்சி செய்பவர்களைத் தவிர மற்றவர்கள் பச்சையாக முட்டையைச் சாப்பிடக் கூடாது. தொடர்ந்து பச்சை முட்டை சாப்பிடுபவர்களுக்கு பயோட்டின் (விற்றமின்பி) குறைபாடு வருவதற்கான வாய்ப்பு அதிகம். சிலர் வளரும் குழந்தைகளுக்குப் பாலுடன் பச்சை முட்டையைச் சேர்த்துக் கொடுப்பார்கள். அதுவும் தவறே.

பெண்களில் சிலர் மெனோபஸ் காலத்துக்குப் பிறகு கல்சியம் தேவைக்காகத் தினமும் ஒரு முட்டை சாப்பிடுவார்கள். அது சரியல்ல. இத்தகைய சூழலில் அவித்தோ, கிரேவியாகவோ, குழம்பாகவோ முட்டையைச் சாப்பிட்டாலும் அது எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும். அதாவது, இதன்மூலமாக உடலில் கொழுப்பு அதிகமாகி, இதயம் தொடர்பான பிரச்னைகள் ஏற்பட

தொடர்ச்சி 18-ம் பக்கம்...

## சுவையான ஆரோக்கியமான முட்டை ரெசிப்பிகள்!

## டிரஸ்ட் எக்ஸ்




**தேவையானவை:** முட்டை 15, எலுமிச்சைச் சாறு சிறிதளவு, கொத்தமல்லித்தழை சிறிதளவு, மஸ்டர்ட் சோஸ் ஒரு டீஸ்பூன், சூரியகாந்தி எண்ணெய் தேவையான அளவு

**செய்முறை:** இரண்டு முட்டைகளைத் தனியாக எடுத்துவைக்கவும். மீதமுள்ள முட்டைகளை வேகவைத்து எடுக்கவும். ஆறிய பிறகு, முட்டைகளின் ஓட்டை நீக்கிவிட்டு இரண்டாக வெட்டவும். ஒரு முட்டையின் மஞ்சள் பகுதியைத் தனியாக எடுத்துவைக்கவும். ஒரு மஞ்சள் கருவுடன் தனியாக எடுத்துவைத்த முட்டைகளை உடைத்து ஊற்றவும். இதனுடன் சிறிது சிறிதாக எண்ணெய்விட்டுக் கலவை இருமடங்காகும் வரை நன்கு அடிக்கவும். (எண்ணெய் அதிகமாகிக் கலவை நீர்த்துப்போனால், சிறிதளவு எலுமிச்சைச் சாறு சேர்த்துக் கலக்கவும்). பிறகு, இந்தக் கலவையுடன் மஸ்டர்ட் சோஸ் சேர்த்துக் கலக்கவும். இதுவே மயோனைஸ். வேகவைத்த முட்டையில் மஞ்சள் கரு இருந்த இடத்தில், மயோனைஸ் கலவை வைத்து, கொத்தமல்லித்தழை தூவிப் பரிமாறவும்.



## புதிய தொடர்

# சி(ரி)த்ராலயா




டி.ஏ.நரசிம்மன்

அறுபது, எழுபதுகளில் பிரபலமான திரைப்பட நிறுவனங்களில் ஒன்று சித்ராலயா. அதை யாரும் அத்தனை சீக்கிரம் மறந்திருக்க மாட்டார்கள். மறந்தவர்களும் கூட, அதன் தயாரிப்புகளைப் பட்டியலிட்டால் "அட ஆமாம்..சித்ராலயா..!" என்று பரவச நினைவுகளில் ஆழ்ந்து போவார்கள். 'தேனிலவு', 'காதலிக்க நேரமில்லை', 'நெஞ்சிருக்கும்வரை', 'உத்தரவின்றி உள்ளே வா', 'நெஞ்சில் ஓர் ஆலயம்'," என்று தங்களுக்குப் பிடித்த சித்ராலயா படங்களின் காட்சிகளை நினைவுபடுத்திக்கொள் வார்கள். குடும்பக்கதைகளை மட்டுமே மக்கள் விரும்புவார்கள் என்ற நிலைமையை மாற்றி, இளமை ததும்பும் காதல் கதைகளின் பக்கம் தமிழ் சினிமாவைத் திசைதிருப்பியவர், இயக்குநர் ஸ்ரீதர்.



### தேன் நிலவு

அவரது முக்கோணக்காதல் கதைகள், 'சித்ராலயா' கோபுவின் விலா நோகச் செய்யும் நகைச்சுவை, வின்செண்ட்டின் குளிர்ச்சியான கமரா, ஆனாரூனா என்ற திருச்சி அருணாசலத்தின் கருப்புவெள்ளை ஒளிப்படங்கள் துடிப்பான காட்சிகளுக்குப் பெயர் போன, சி.வி.ராஜேந்திரன் ஆகியோர் தங்களது திறமைகளை ஒருங்கிணைத்து உருவாக்கிய பட நிறுவனம்தான் சித்ராலயா

கலையுலகில் புதிய அலைகளைத் தோற்றுவித்த சித்ராலயா நிறுவனத்தின் சின்னம், பார்வையாளர்களைச் சிந்திக்க வைத்த ஒன்று. படகைத் துடுப்பால் செலுத்தும் ஒரு வலுவான வாலிபன், அவன் முன்பாக ஒரு பெண் அந்தப் பயணத்தை ரசித்தபடி அமர்ந்திருப்பது போன்ற அந்த சின்னம் திரையில் தோன்றும் தொடக்கக் காட்சியில் பார்வையாளர்கள் சிலிர்ப்புடன் நிமிர்ந்து அமர்வார்கள்.

வாழ்க்கை ரசிக்கத்தக்க ஒரு ரம்மியமான பயணம் என்பதைக் கூறிய சின்னம் மட்டுமல்ல; அதைக் கண்டமாத்திரத்தில் ஏமாற்றாத படைப்பைக் காண வந்திருக்கிறோம் என்னும் கர்வத்தையும் அந்தச் சின்னம் தோன்றும் பின்னணியில் ஒலிக்கும் 'லோகோ மியூசிக்' தந்துவிடும்.

கோலிவுட், பாலிவுட், டோலிவுட் என்று எல்லாப் பகுதிகளிலும் கொடி கட்டிப் பறந்தது சித்ராலயா. ராஜ்கபூர் குடும்பம், லதா மங்கேஷ்கர், ராஜேந்திர குமார், மெஹ்மூத், சசி கபூர், தேவ் ஆனந்த், வஹீதா ரஹ்மான் உள்பட அனைத்து வடஇந்திய நட்சத்திரங்களையும் ஆட்டி வைத்தது சித்ராலயா.

இன்றும் சித்ராலயாவின் சாதனைகளை, பெருமைகளைப் பற்றிய பசுமையான நினைவுகளோடு தனது எண்பத்தி ஆறாவது வயதிலும், துடிப்புடன் செயலாற்றிக் கொண்டிருக்கிறார் 'சித்ராலயா' கோபு. சித்ராலயா நிறுவனத்தைத் தனது பெயரிலேயே தாங்கிக்கொண்டு, 'கல்யாணப் பரிசு' காலத்தின் அதே நகைச்சுவை உணர்வு இம்மியளவும் குறையாமல், குரலிலும் எவ்வித நடுக்கமுமின்றி சென்னை திருவான்மியூரில் கலகலப்புடன் வசிக்கிறார்.

காலை வாக்கிங் செல்பவர்கள் பய்ட் பைப்பரின் (pied piper) இசையில் மயங்கி அவரைப் பின்தொடரும் குழந்தைகளைப் போன்று, இன்றும் கோபு பின்பாகவே செல்ல, அவர் தனது திரைப்பட அனுபவங்களைக் கூறிக்கொண்டே செல்வது வழக்கம். ஆங்காங்கே அவர்கள் சிரித்துக்கொண்டு நிற்க நடைப்பயிற்சி, சிரிப்புப் பயிற்சியாக மாறிவிடும்.

அவரின் 'வாக் தி லாஃப்' அந்தப் பகுதியில் மிகவும் பிரபலம். 'சித்ராலயா' கோபுவுடன் அன்றாடம் நடைப்பயிற்சி செய்து, சித்ராலயா நாட்களின் அனுபவங்களை உங்களுக்குப் புதிய தொடராக வழங்குகிறோம்.

கமராவுக்கு, முன்பாகவும், பின்பாகவும், நடைபெற்ற சுவாரசியமான சம்பவங்களை, குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும் நிகழ்வுகளை, என் எஸ் கிருஷ்ணன் மனைவி டி.ஏ. மதுரம் தொடங்கி, பாலையா, தங்கவேலு, சாரங்கபாணி, டி.ஆர். ராமசந்திரன், சந்திரபாபு, நாகேஷ், சோ, தேங்காய் ஸ்ரீனிவாசன், சுருளிராஜன், கவுண்டமணி, செந்தில், எம். சரோஜா, மனோரமா, சச்சு, ரமாப்ரபா, கோவை சரளா உட்பட அனைவருக்கும் நகைச்சுவை வசனங்களை எழுதிய அனுபவங்களை அவர் கூறக் கேட்டால் நேரம் போவதே தெரியாது.

சிவாஜி கணேசன், ஜெமினி, ஜெய்சங்கர், முத்துராமன், ரஜினி, கமல் தொடங்கி, இன்றைய விக்ரம், பாண்டியராஜன் வரை பல நடிகர்களுடனும் பத்மினி, ஜெயலலிதா, தேவிகா தொடங்கி ரம்யா கிருஷ்ணன் வரை பலருடன் பணிபுரிந்து விட்டார். "அவரது திரைப்பட நகைச்சுவை ஒரு கால் பங்குதான். அவருடன் நேராகப் பேசினால்தான் அவரது முழு நகைச்சுவையையும் அனுபவிக்கலாம்" என்று கமல் ஹாசன் கூறியிருக்கிறார். கிரேசி மோகன் இவரைத் தனது ஆசானாகக் கருதி வருகிறார்.

இனி ஒவ்வொரு, வாரமும் இந்த வேடிக்கை மனிதரின் அனுபவங்களை தீபம் உங்களுக்கும் கடத்தி உங்கள் நினைவுகளைக் கிளறவிருக்கிறது. மனம் விட்டுச் சிரிக்கத் தயாராக இருங்கள்.

---

17-ம் பக்க தொடர்ச்சி...

அதிக வாய்ப்புகள் உண்டு. அதனால், தினமும் சாப்பிடாமல் வாரத்துக்கு இரண்டுமுறை உட்கொள்ளலாம்.

முட்டை சாப்பிடுவதால் உடலில் கொழுப்புச்சத்து அதிகமாகி, அதன் காரணமாக இதய பாதிப்புகள் ஏற்படலாம் என்று சொல்லப்படுவதுண்டு. ஏற்கெனவே இதயத்தில் பாதிப்புள்ளவர்களுக்கு மட்டுமே இது பொருந்தும். 'ஹெச்.டி.எல்' எனப்படும் நல்ல கொழுப்பின் அளவைத்தான் முட்டை மேம்படுத்தும் என்பதால், பயப்படத் தேவையில்லை.

சாப்பிடும் நேரம் மிகவும் முக்கியமானது. காலை நேரத்தில் முட்டை உட்கொள்வது சிறந்தது. மதியம் உட்கொள்பவர்கள், அது சமைக்கப்பட்ட நேரத்தை அறிந்துகொண்டு சாப்பிட வேண்டும். சமைத்துவெகுநேரமான முட்டையைச் சாப்பிடாமல் இருப்பதே நல்லது. இரவில் சாப்பிட்ட பிறகு நம் உடல் உழைப்பு மிகவும் குறைவாக இருக்கும். எனவே, இரவில் முட்டை சாப்பிடுவதை முடிந்தளவு தவிர்த்துவிடலாம்.

முட்டையை 10 முதல் 15 நிமிடங்கள் வேக வைப்பது தவறு. அளவுக்கு அதிகமாக வேகவைத்தால் முட்டையில் பிரவுன் மற்றும் சாம்பல் நிறத்தில் ஒரு படிவம் படிந்துவிடும். அந்த முட்டைகளை உட்கொள்ளக் கூடாது. முட்டையை 7 நிமிடங்கள் வரை வேகவைத்தாலே போதுமானது.

### தினம் ஒரு முட்டை ஓகேவா?

தினமும் ஒரு முட்டை சாப்பிட்டால் உடலில் அதிகளவில் கொழுப்புச்சத்து சேர்ந்துவிடும் என்கிற பயம் பலருக்கும் இருக்கிறது. அப்படிச் சாப்பிட விரும்புகிறவர்கள், முதலில் உடலில் இருக்கும் கொழுப்புச்சத்து அளவைப் பரிசோதித்துக்கொள்ள வேண்டும். சாதாரணமாக ஒருவருக்குக் கொழுப்புச்சத்து, 200 மி.கி/டி.எல் (mg/dl - milligrams per deciliter) வரைதான் இருக்க வேண்டும். 200230 மி.கி/டி.எல் இருப்பது ஆபத்து. 250 மி.கி/டி.எல்க்குமேல் இருக்கிறது என்றால், நீங்கள் எடுத்துக்கொள்ளும் மிகக் குறைந்த அளவு கொழுப்புச்சத்துள்ள ஆகாரம்கூட ஆபத்தை விளைவித்துவிடும். உடலின் கொழுப்புச்சத்தில், 85 சதவிகிதத்தைக் கல்லீரல்தான் உற்பத்திசெய்கிறது. உணவுகளிலிருந்து கிடைக்கும் கொழுப்புச்சத்து அளவு, 15 சதவிகிதம் மட்டுமே. இது அதிகமாகும்போது, உடலின் மொத்தக் கொழுப்புச்சத்தும் அதிகமாகிவிடும்.

(தொடரும்)

# உங்களுக்கும் தார்மீகப் பொறுப்பு இருக்கிறது ஆர்யா



தமிழ்த் திரையுலகம் ஸ்டிரைக்கில் இருந்த காரணமோ என்னவோ தெரியவில்லை கடந்த மாதம் முழுவதும் ஆர்யாவின் அந்த ரியாலிட்டி ஷோ பொழுதுபோக்கு வெற்றிடத்தை வீடுதோறும் நிரப்பிக்கொண்டிருந்தது.

ஒருநிமிடம்.. இது ஆர்யாவுக்கான பாராட்டு அல்ல. ரியாலிட்டி ஷோ என்ற பெயரில் அவர் இளைய சமூகத்தின் மனங்களில் எதை நிரப்பிக்கொண்டிருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கான வசைமொழியின் 'ஒன்லைன்'.

**வக்கிரமயமாகும் மனித மனங்கள்..**

எத்தகைய ஆபாசமானாலும் இணையவழியில் ஒரு சொடுக்கில் கிடைக்கும் இந்த காலகட்டத்தில் மனித மனங்களில் வக்கிரம் நிரம்பிவழிந்து கொண்டிருக்கிறது. மனநலம் பாதிக்கப்பட்ட 13 வயது சிறுமியை அண்டைவீட்டு இளைஞரே ஏமாற்றி அழைத்துச் சென்று பாலியல் பலாத்காரம் செய்து அதை வீடியோவாக பதிவு செய்து அந்த வீடியோவை சிறுமியின் குடும்பத்துக்கே அனுப்புகிறார். இது, மனித மனத்தின் வக்கிரத்துக்கு கட்டியம் கூறும் கொடூரங்களுக்கான சாட்சிகளில் ஒன்று.

கத்துவா சிறுமியின் பலாத்காரம் தொடங்கி வரதட்சணைக்காக திருமணமான மூன்று நாட்களிலேயே மனைவியை கணவனும் அவனது நண்பர்களும் கூட்டு பலாத்காரம் செய்த சம்பவம் வரை இன்னும் நிறைய வக்கிரங்கள் இருக்கின்றன. இவற்றை பாலியல் தீவிரவாதம் என்றுதான் குறிப்பிட வேண்டும்.

குழந்தைகள் மீதான பாலியல் அத்துமீறல் குறித்த செய்திகள் இல்லாதேநாளே இல்லைஎனுமளவுக்கு குற்றங்கள் மலிந்து கிடக்கின்றன. இதுவே தொடருமானால் ஒருநாள் பெரும்பான்மையான மனித சமூகம் குற்றவாளிகளாக நிற்கும் சூழல் உருவாகிவிடும்.

இப்படியான தருணத்தில்தான் ஒவ்வொரு தனி மனிதனும் சற்று கூடுதலாகவே சமூக அக்கறையைக் காட்ட வேண்டும். தனி மனித ஒழுக்கம் சமூக ஒழுக்கத்துக்கு வித்திடும் என்பதால் கூடுதல் அக்கறை தேவையாகிறது.

இங்கே பேம்பர்ஸ் அணிந்த பெண் குழந்தைக்கும் பாதுகாப்பில்லை. குட்டைப் பாவாடை அணிந்த யுவதிக்கும் பாதுகாப்பில்லை. முழுமையான உடையாக சுடிதார் அணிந்த பெண்ணுக்கும் பாதுகாப்பில்லை.

ஒவ்வொரு தனிமனிதரும் ஒழுக்க சீலராக இருப்பது அடிப்படை பண்பு என்பதை உணரும் தருணத்தில் இந்த சமூகம் இருக்கிறது. அப்படியான காலகட்டத்தில் காட்சி ஊடகத்தின் வழியாக கடத்தப்படும் கருத்துகள் எத்தகைய மெனக்கிடலுடன் கையாளப்பட்டிருக்க வேண்டும்? ஆனால், உண்மையில் அந்த ரியாலிட்டி ஷோ என்ன செய்திருக்கிறது தெரியுமா?

**13 பெண்களும் ஆர்யாவும்..**

மகளிர் மட்டும் படத்தில், நடிகர் நாசர் பணியிடத்தில் பெண்களுக்கு பாரபட்சம் பார்க்காமல் பாலியல் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருப்பார். அவரை ஸ்டாக்கருக்கு (Stalker) துல்லிய உதாரணம் என்று சொல்லலாம். "காளை மாடு ஒண்ணு கறவைமாடு மூணு.. அடிச்சான் லக்கி ப்ரைசு அதிர்ஷ்டக்காரன் ஆளு" என்று அந்தப்படத்தில் ஒரு பாடல் உண்டு. விரசமான பாடல்தான்.. ஆனால் ஒரு ஸ்டாக்கரின் மனோபாவத்தை பிரதிபலிக்கும் வரிகள் அவை.





ஆர்யா.. நீங்களும் ஒரு ஸ்டாக்கர் தான். 13 பெண்களைப் பார்க்கும் போதே உங்கள் கண்களில் ஆசை வழிந்தோடியது. அத்தனை வாஞ்சையுடன் ஒவ்வொருவரையும் பார்த்தீர்கள். எல்லோரிடமும், "ஐ லைக் யூ" என்று சொன்னீர்கள். எல்லோருமே அழகாக இருப்பதாக வர்ணித்தீர்கள். உங்களை தழுவிக்கொள்ள ஆசைப் பட்டதால் தாராளமாக உங்கள் மார்பில் இடம் கொடுத்தீர்கள். எல்லோரையும் சமையல் செய்யச் சொல்லி புசித்தீர்கள். லவ் டோக்கன் கொடுத்தீர்கள். சர்ப்ரைஸ் கிஃப்ட் என வாரி வழங்கினீர்கள். அவர்கள் அளித்த பரிசுகளையும் இன்முகத்தோடு பெற்றுக் கொண்டீர்கள். சிலரை பைக்கில் அழைத்துச் சென்றீர்கள். தாஜ்மஹாலுக்குக் கூட கூட்டிச் சென்றீர்கள். எல்லோரது வீட்டுக்கும் சென்றீர்கள். நிஜமான மாப்பிள்ளை போலவே அத்தனை பவ்யமாக வீட்டுப் பெரியோரிடம் பேசினீர்கள். சாக்லேட் கொடுத்தீர்கள். பூங்கொத்து கொடுத்தீர்கள். ஆடிப் பாடினீர்கள். உங்கள் வீட்டுக்கு கூட்டிச் சென்றீர்கள்.

இவற்றையெல்லாம் ஒரே ஒரு பெண்ணிடம் செய்தாலே ஸ்டாக்கர் என்று உங்களை அழைப்பதற்கான அத்தனை நியாயமும் இருக்கிறது. ஆனால், நீங்கள் 13 பெண்களிடமும் இதைத்தான் செய்திருக்கிறீர்கள். அப்படி என்றால் உங்களை ஸ்டாக்கர்களின் தலைவர் என்றுதான் அழைக்க வேண்டும்.

ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு மாறாக இதையெல்லாம் செய்தால்தான் ஸ்டாக்கர் என்பது அர்த்தமல்ல. இங்கே 13 பெண்களின் விருப்பத்தோடே நீங்கள் பழகியிருந்தாலும் நீங்கள் ஸ்டாக்கர்தான்.

ஏனென்றால், ஆர்யாவும் அகாதாவும் நல்ல ஜோடி, ஆர்யாவும் சீதாலக்ஷ்மியும்தான் சிறந்த ஜோடி, இல்லை இல்லை ஆர்யாவும் சூசானாவும் தான் ஆகச் சிறந்த ஜோடி என்றெல்லாம் கல்லூரி மாணவ மாணவிகள் தங்களுக்குள் விவாதம் நடத்திக் கொள்ளும் அளவுக்கு கெமிஸ்ட்ரியை கச்சிதமாக ஒர்க் அவுட் செய்து கொண்டிருந்தீர்கள்.

ஆனால், கடைசியில் மூன்று பெண்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்தால் மற்ற இரண்டு பெண்களும் அவர்களது குடும்பத்தாரும் வருத்தப்படுவார்கள் என்று நழுவிக்கொண்டீர்கள்.

இந்த மூன்று பெண்களை விடுங்கள், கோலம் போடு, பாட்டு பாடு, நடனம் ஆடு என்று நீங்கள் டாஸ்க் கொடுத்து கொடுத்து எலிமினேட் செய்தீர்களே அந்த 10 பெண்கள் பற்றி உங்களுக்கு எந்தக் கவலையுமே இல்லையா ஆர்யா? உங்களை ஸ்டாக்கர் என்று அழைக்காமல் வேறு எப்படி அழைப்பது?

சமூகத்தினால் நன்கு அறியப்பட்ட நீங்கள்; இளைஞர்கள் பலரின் விருப்ப ஹீரோவாக இருக்கும் நீங்கள் சமூக அக்கறையுடன் நடந்து கொள்ள வேண்டாமா? சாமான்யர்களுக்கு மட்டுமல்ல உங்களுக்கும் ஒரு தார்மீக பொறுப்பு இருக்கிறது ஆர்யா. அதை உணர்ந்து செயல்படுங்கள்.

**ரியாலிட்டி ஷோ தகிடு தத்தங்கள்..**

இந்த நிகழ்ச்சியைப் பற்றி விமர்சிப்பவர்களுக்கு எல்லாம் சில அறிவு ஜீவிகள், "இது ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி. அதை வெறும் நிகழ்ச்சியாகப் பாருங்கள். அதில் வருவதெல்லாம் உண்மையல்ல. அங்கு சிந்தப்படும் கண்ணீர் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்ட காட்சி. அங்கே நடத்தப்படும் ரொமான்ஸ் ஸ்க்ரிப்டின்

தொடர்ச்சி 21-ம் பக்கம்...

# கால் விலங்குகள்போடும் கற்பனைக் குதிரைகள்

எங்கள் நாளாந்த வாழ்விலோ, வாழ்க்கைக் கோட்பாடுகளிலோ மாற்றங்கள் அவசியம் என்ற நிலையில், மாற்றங்களுக்கான விருப்பங்கள் இருப்பினும்கூட அதற்கான நடவடிக்கைகளில் இறங்குவது எங்களுக்கு எளிதல்ல என்பது எங்களுக்குத் தெரியும். காரணம் எங்கள் தினசரி வழக்கங்கள் நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக எங்கள் வாழ்நாள் முழுவதும் கட்டியெழுப்பிக் கொண்டவை. ஒரு சிறிய மாற்றம் கொண்டு வரும் போது அதனால் ஏற்படும் விளைவுகள் எங்களது மற்றைய நடவடிக்கைகளிலும் மாற்றங்களை உண்டாக்கும். அத்துடன் எங்கள் மாற்றங்கள் எங்களது நெருங்கிய உறவினர்களின் தினசரி நடவடிக்கைகளிலும் மாற்றங்களை உண்டாக்கும். அதனால் வெவ்வேறு மனிதர்களின் நடவடிக்கைகளும் விருப்பங்களும் முரணாகி மனக்கிலேசங்களை உண்டாக்கும்.

ஒரு தனி மனிதனின் நிலைமை இதுவானால் ஒரு நாடோ, நகரமோ நூற்றாண்டுக்கு மேலாக உருவாக்கிக் கொண்ட பல நடவடிக்கைகளில் மாற்றங்கள் கொண்டு வருவது எத்தனை துறைகளுக்குள் எத்தனை பிரச்சினைகளைக் கொண்டுவரும் என்று கற்பனை செய்து பாருங்கள்!

**நோர்டிக் நாடுகள் வாகனங்களால் உண்டாக்கப்படும் சுற்றுப்புற சூழல்களை மாற்றுவதற்காக வெவ்வேறு முனைகளில் செயற்படுகின்றன. அவைகளில் ஒன்று டீசலால் இயங்கும் தனியார் வாகனங்களை ஒழித்துக் கட்டுவது. அதற்காக சமீபத்தில் டீசல் வாகனங்களுக்கான வருடாந்தர வரிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன.**




ஆனால், வாகனப் பாவிப்பைப் பொறுத்தவரை நிலைமையின் கட்டாயம் பல நாடுகளை மாறுதலுக்கு வித்திடும் கட்டாயத்தை உண்டாக்கியிருக்கின்றன. அப்படியான மாற்றங்கள் பொதுவாக அரசியல் ரீதியாக எடுக்கப்படும் முடிவுகளில் தான் ஆரம்பிக்கின்றன. இந்தியா உட்பட உலகின் பல நாடுகளும் சுற்றுப்புற சூழல் மேம்படுத்துதல், மக்களின் ஆரோக்கியத்தைப் பேணுதல் போன்றவைகளுக்காக பெற்றோலிய வாகனங்களின் பாவனையில் கட்டுப்பாடுகளைக் கொண்டுவரப் போவதாக அறிவித்தாலும் அனேகமாக நகரங்கள் அளவில்தான் அப்படியான மாற்றங்கள் உண்டாக்கப்பட ஆரம்பித்திருக்கின்றன. இவ் விடயத்தில் ஒவ்வொரு நாடும் தமக்கு ஏற்ற பாதையில்தான் பயணிக்க ஆரம்பிக்கின்றன.

உதாரணமாக நான் நோர்டிக் நாடுகளின் வழியை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனெனில் தற்போதைய நகரங்களில் வாகனங்கள் இல்லாத நகரங்களை, சாலைகளை அமைப்பதில் இருக்கும் சிக்கல்களை விளங்கிக்கொள்ள ஒரு உதாரணம் உதவக்கூடும்.

பொதுவாகவே விஞ்ஞான மற்றும் அறிவியல் ஆராய்வுகளைக் காரணமாகக்காட்டி அரசியல்ரீதியில் மாற்றங்களை அறிவித்து பெரும்பாலானோரின் சம்மதத்துடன் கொண்டு வருவதில் நோர்டிக் நாடுகள் முன்னிற்கின்றன. சுவீடன், நோர்வே, டென்மார்க், ஐஸ்லாந்து பின்லாந்து ஆகிய நாடுகள் நோர்டிக் என்ற பிராந்தியத்துக்குள் அடங்கும். இவைகள் ஐரோப்பிய நாடுகளாக இருப்பினும் வித்தியாசமான அரசியல் பாரம்பரியத்தைக் கொண்டவை.

நோர்டிக் நாடுகளில் சமூகத்துக்கான முக்கிய மாறுதல்கள் செய்யப்பட வேண்டுமானால் அவைகளின் காரணம் ஆராய்ச்சிகள் மூலம் கவனிக்கப்பட்ட பின்பு அம்மாற்றங்கள் பற்றிய விபரங்கள் எந்தெந்த துறைகளில் சம்பந்தப்பட்டதாக இருக்குமோ அவைகள் அனைத்தின் அதிகாரங்களுக்கும், விற்பன்னர்கள் குழுக்களுக்கும் ஆலோசனைகள் கேட்டு அனுப்பப்படுகின்றன.

அடுத்த கட்டமாக எல்லோருடைய ஆலோசனைகளுக்கு உகந்ததாகவும் சட்ட திட்டங்களுக்கு ஏற்றபடியாகவும், நிறைவேற்றப்படுவதற்கு உரியதாகவும் சட்ட வடிவம் கொடுக்கப்படுகிறது.

இதன் அடுத்த கட்டமாக நாட்டின் சகல கட்சிகளும் ஒன்று சேர்ந்து குறிப்பிட்ட நடவடிக்கையில் எப்படிச் செயற்பட வேண்டும் என்ற ஒரு பொதுவாக கோட்பாட்டுக்கு ஒன்றுபடுகின்றனர். காரணம் குறிப்பிட்ட நடவடிக்கையை எடுக்கும் காலத்தில் ஆட்சியில் இருக்கும் கட்சிகள் பதவியை விட்டு விலகினால் புதியதாக வரும் கட்சிகள் அதை முழுவதுமாக மாற்றிவிடக் கூடாது என்பதற்காகவே. நாட்டின் முக்கிய வழிமாற்றங்களில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களில் இப்படியாகச் செயற்படுவது நோர்டிக் நாடுகளின் அரசியல் பாரம்பரியமாக இருக்கிறது.

நோர்டிக் நாடுகள் வாகனங்களால் உண்டாக்கப்படும் சுற்றுப்புற சூழல்களை மாற்றுவதற்காக வெவ்வேறு முனைகளில் செயற்படுகின்றன. அவைகளில் ஒன்று டீசலால் இயங்கும் தனியார் வாகனங்களை ஒழித்துக் கட்டுவது. அதற்காக சமீபத்தில் டீசல் வாகனங்களுக்கான வருடாந்தர வரிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அத்துடன் நகரங்கள் தங்கள் பிராந்தியத்தில் டீசல் வாகனங்கள் குறிப்பிட்ட சாலைகளில் குறிப்பிட்ட நேரத்தில் எப்படிப் பாவிக்கப்படலாம் என்பதற்கான சட்டங்களை உருவாக்குவதற்கான வழிவகைகளை அரசாங்கங்கள் உண்டாக்கிக் கொடுத்திருக்கின்றன.

இவற்றின் மூலம் டீசல் வாகனங்களை வைத்திருப்பதற்கான செலவு கணிசமான அளவு உயர்ந்திருக்கிறது. அதன் விளைவை உடனடியாகவே டீசல் வாகனங்களின் கொள்வனவு வீழ்ச்சியில் காண முடிகிறது. இதே நடவடிக்கையை ஜேர்மனிஉட்பட வேறு பல ஐரோப்பிய நாடுகளும் சமீபத்தில் எடுத்திருப்பதால் டீசல் வாகனங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் சில வாரங்களின் முன்பு தமது உற்பத்தியைக் குறைப்பதாகவும், சில தயாரிப்பு மையங்களை மூடப் போவதாகவும் அறிவித்திருக்கின்றன.

அடுத்ததாக நோர்டிக் நாடுகள் எல்லாமே வரவிருக்கும் சுமார் 20 வருடங்களுக்குள் நாட்டில் எந்த பெற்றோலியப் பொருளால் இயங்கும் வாகனங்களும் விற்கப்படலாகாது என்று கோட்பாட்டையும் எடுத்திருக்கின்றன. அந்த முடிவை எடுத்திருப்பதால் மாற்றாக என்னென்ன சக்திகள் பாவிக்கப்படலாம் என்பதைக் கவனித்து அந்தச் சக்தியால் இயங்கும் வாகனங்களை வாங்குவதை ஊக்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய நிலையில் இந்த நாடுகளில் மின்சாரத்தால் இயங்கும் வாகனங்களைக் கொள்வனவு செய்பவர்களுக்கு வாகன வரிக்குறைப்பு, மின்சாரக் கலங்களை இலவசமாக சக்தியேற்றிக் கொள்வதற்கான வசதிகள், அந்த வாகனங்களை நிறுத்த நகரங்களில் இலவச இடங்கள் போன்றவை வழங்கப்படுகின்றன.

மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களுக்கான கலங்களின் விலை இன்று சர்வதேசச் சந்தையில் மிகவும் அதிகமாக இருக்கிறது. முக்கிய காரணங்களில் ஒன்று அவைகளைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகள் அதிகம் இல்லாமையாகும். எனவே அத்தொழிற்சாலைகளை அமைப்பதற்கான மான்யங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்த நடவடிக்கை மக்களைக் கூடியவரை வாகனங்களை பாவிக்காமல் செய்வதாகும். பதிலாக துவிச்சக்கர வண்டிகளையும், பொதுப் போக்குவரத்தையும் பாவிப்பது பல வழிகளாலும் ஊக்குவிக்கப்படுகிறது.

துவிச்சக்கரவண்டிகளை பாவிப்பது தனியார் வாகனங்கள் பெரும்பான்மையாக வழக்கத்தில் இருந்ததை நாம் அறிவோம். நகரங்கள் வாகனங்களுக்காக அமைக்கப்பட ஆரம்பித்த போது துவிச்சக்கர வண்டிப் பாவிப்பாளர்களுக்கு நகரங்கள் கடினமாக ஆகிவிட்டன. அந்த நிலைமை மாற்றியமைக்கப்படுகிறது.

நோர்டிக் நாடுகளில் பொதுவாக சகல பிராந்தியங்களிலும் துவிச்சக்கர வண்டிக்கான சாலை வசதி ஏற்கனவே இருக்கிறது. தற்போது அவைகள் மேலும் பாதுகாப்பானவையாக ஆக்கப்படுகின்றன. அதே சமயம் நாடுகளின் முக்கிய நகரங்கள் எல்லாமே மேலும் சில வருடங்களில் நகர மையங்களில் தனியார் புக முடியாத சாலைகளை உருவாக்கப் போவதாக அறிவித்திருக்கின்றன. அதே

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

19-ம் பக்க தொடர்ச்சி...

அடிப்படையிலானது. அதனால் வெறும் பொழுதுபோக்காக பார்த்துவிட்டு கடந்து சொல்லுங்கள்" என்று வக்காளத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

கனவான்களே... உங்களுக்கெல்லாம் ஒரு கேள்வி. உங்கள் வாதத்தின்படியே இந்த விஷயத்தை அணுகுவோம். சினிமாவில் காட்டக்கூடிய பலாத்காரங்கள் நிஜ பலாத்காரம் அல்ல, கொலைகளும் உண்மைக் கொலை அல்ல, கொள்ளையும் அப்படியே. ஆனால், ஒத்த சம்பவங்கள் சமூகத்தில் நிகழும் போது சினிமா பாணியில் கொள்ளை, அலைபாயுதே பாணியில் காதல் ஜோடி திருமணம், சிவப்பு ரோஜா பாணியில் கொலை என்று ஏன் செய்திகள் எழுதப்படுகின்றன தெரியுமா? சினிமா சமூகத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதாலேயே.



தூங்காதே தம்பி தூங்காதே என்ற பட்டுக்கோட்டையாரின் பாடல் ஒரு தம்பிக்கு உத்வேகத்தை அளிக்குமானால் கட்டிப்பிடி கட்டிப்பிடிடா என்ற காம இச்சை முனகல்கள் நிரம்பிய பாடல் இளைஞர்களுக்குள் நிச்சயம் ஒரு கிளுகிளுப்பை கடத்தத்தான் செய்யும் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

இது உங்களுக்கும்தான் ஆர்யா. உங்களைப் போல் நாளை ஒரு கல்லூரி மாணவன் தன் கல்லூரியில் படிக்கும் சக மாணவிகள் பலரிடமும் ஜொள்ளராகஇருந்துவிட்டுகடைசியில் சூஸ் தி பெஸ்ட் ஆப்ஷனுக்குப் போகும் அபாயம் இருக்கிறது. உங்களுக்கும் ஒரு தார்மீகப் பொறுப்பு இருக்கிறது ஆர்யா. அதை உணர்ந்து செயல்படுங்கள்.

**இந்த யோசனையே முதல் தவறு....**

ராஜா காலத்தில் சுயம்வரம் பெரும் வரமாக இருந்திருக்கலாம். ஆனால், இது பெண்கள் சாதிக்கும் காலம். பெண்கள் போராடி முன்னே வந்துகொண்டிருக்கும் இக்காலத்தில் இருந்து கொண்டு ஒருபொழுதுபோக்கு நிகழ்ச்சிக்காக எனினும் இப்படியொரு நிகழ்ச்சிக்கான கருத்து வடிவம் ஏற்றுக்கொள்ளமுடியாதது. ஆர்யா மட்டுமல்ல இதில் பங்கேற்க வைக்கப்பட்டுள்ள பெண்களும் சில கருவிகள்தான். ஆனால் இந்த கருத்து வடிவத்தை தொலைக்காட்சி நிகழ்ச்சியாக உருவாக்கி வெற்றிபெற முடியும் என்ற சிந்தனையே நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் பழைய ஆண்வழி நிலப்பிரபுத்துவ கனவு உலகத்திலேயே மிதக்கும் மோசமான மன உலகத்தைக் காட்டுகிறது.

**சற்று தரையில் இறங்கி வாருங்கள்...**

சமூகத்தில் தங்களுக்கு என்று ஒரு இடத்தை அடையப் போராடும் பெண்களின் நூறு விதமான கருத்து வடிவங்கள் உங்களுக்குக் கிடைக்கும்.

முதல் தலைமுறை பட்டதாரியான பெண்கள் பல உயரிய சாதனைகளைச் செய்திருக்கின்றனர். ஆனால், அவர்கள் எல்லாம் அடையாளம் இல்லாமல் இருக்கின்றனர்.



அப்படிப்பட்டவர்களை அடையாளம் காட்ட முற்படுங்கள். பல்வேறு நிகழ்ச்சிகளை தொலைக்காட்சிகளில் வழங்க உதவுவதோடு புதிய பார்வையாளர்களின் ஏகோபித்த ஆதரவும் உங்களுக்குக் கிடைக்கும்.

அதைவிடுத்து டிஆர்பிக்காக செலிபிரிட்டியை வைத்து இப்படி ஒரு நிகழ்ச்சியைச் செய்வது என்பதும் அதற்கு சில பெண்களைக் கருவிகளாக பயன்படுத்திக் கொள்வதும் நியாயமானதல்ல.

ஒரு பெண்ணைப் பின் தொடர்தலும் அதன் நீட்சியாக அவளை காதலுக்கு கட்டாயப்படுத்துதலும் மறுத்தால் பலாத்காரம் செய்வதும் ஆசிட் வீசுவதும் வக்கிரம். அந்த வக்கிரத்தை யார் செய்தாலும் தவறு. அதை ஆதரிக்கும் படைப்பு எதுவாக இருந்தாலும் விமர்சனத்துக்குரியது. ஆர்யா நீங்கள் விமர்சனப் பொருளாகியிருக்கிறீர்கள். உங்களுக்கும் ஒரு தார்மீகப் பொறுப்பு இருக்கிறது ஆர்யா. அதை உணர்ந்து செயல்படுங்கள்.

**காதலை உரக்கச் சொல்லுங்கள்..**
**கடைச் சரக்காகாதீர்கள்**

பெண்கள் காதலை உடைத்துச் சொல்வதே தவறு என நினைக்கும் பிற்போக்குத்தனமான சமுதாயத்தில் ஆர்யாவிடம் 13 பெண்களும் தங்கள் ரொமான்ஸை வெளிப்படையாக சொன்னது துணிச்சலானது வரவேற்கத்தக்கது என்கின்றனர் சிலர்.

பெண்களே காதல் பழகுங்கள்.. தவறல்ல. சாதிகளற்ற சமுதாயம் உருவாகும். காதலனுடன் கைகோத்து நடந்து செல்லுங்கள்.. குற்றமல்ல. காதலரை உங்கள் அப்பா அம்மாவுக்கு அறிமுகம் செய்து வையுங்கள்.. கண்ணியமானது அது.

பெண்களே உங்களை யாராவது அழகாக இருக்கிறீர்கள் என்று புகழ்ந்தால் அதை பெருமித அடையாளமாக எடுத்துக்கொள்ளாதீர்கள். இத்தகைய வார்த்தைகளுக்கு மயங்கிவிடாதீர்கள். நீங்கள் சாதிக்க வேண்டியவை ஏராளம். பெண் என்பவளை அழகியலோடு தொடர்புபடுத்தி அடிமைப்படுத்தும் தூண்டிலில் சிக்கிக் கொள்ளாதீர்கள். கூட்டுப்புழுவாய் இருந்ததுபோதும், நீங்கள் சாதித்தால் வண்ணத்துப்பூச்சி என்ற அழகு சார் அடைமொழியுடன் உங்களை இணைத்துப் பேசினால் அதில் திருப்தி அடைந்துவிடாதீர்கள். இன்னும் இன்னும் உயரே செல்லுங்கள். பருந்தைப் போல சிறகை விரித்து உயரப் பறக்கப் பிறந்தவர்கள் நீங்கள்.

அதைவிடுத்து, உங்கள் துணிச்சலை எல்லாம் இப்படி கடை விரிக்காதீர்கள். நீங்கள் உங்களையே ஒரு போகப் பொருளாக ஆக்கிக் கொண்டு கடைச்சரக்கு ஆகாதீர்கள். உங்களைப் பார்த்து சில விவரமறியா யுவதிகள் இம்ப்ரெஸ் செய்கிறேன் என்ற பெயரில் சுயமரியாதையை இழக்கக்கூடும். நீங்கள் வெறுமனே நடித்துவிட்டுச் சென்றிருக்கலாம். ஆனால், அது சிலரின் மனதில் பதியமாகியிருக்கும்.

ஆர்யாவுக்கு மட்டுமல்ல உங்களுக்கும் இந்த சமுதாய ஒழுக்கத்தைப் பேணுவதில் தார்மீகப் பொறுப்பிருக்கிறது பெண்களே.

---

சமயம் நகர அமைப்புக்கள் மாற்றப்பட்டு துவிச்சக்கர வண்டிப் பாவனையாளர்கள், நடப்பவர்களுக்கு வசதியாக இருக்கக்கூடியதாக மட்டும் சாலைகள் படிப்படியாக அமைக்கப்படுகின்றன.


துவிச்சக்கர வண்டிகளை பொறுத்தவரை தற்போது மின்கலங்களால் இயங்கும் துவிச்சக்கர வண்டிகள் சந்தையில் கிடைக்கின்றன. அவைகள் மூலம் உடல் பலவீனமுள்ளவர்களும் துவிச்சக்கர வண்டியை பாவிக்கக்கூடிய வசதியை உண்டாக்கியிருக்கின்றன. அப்படிப்பட்ட துவிச்சக்கர வண்டிகளை வாங்குபவர்களை ஊக்குவிக்கவும், அவற்றின் தயாரிப்பை அதிகரிக்கவும் உதவுவதற்காக அரசாங்கங்கள் அவைகளைக் கொள்வனவு செய்பவர்களுக்கு மான்யம் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறது.

அதேசமயம் இந்தநாடுகளின் பலநகரங்களும் நகருக்கும் ஆங்காங்கே துவிச்சக்கர வண்டி மையங்களை உண்டாக்கி அம்மையங்களில் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தியிருக்கின்றன. உதாரணமாக நகரத்திற்குள் நுழைகிறவர் ஒருவர் எந்த ஒரு மையத்திலும் ஒரு துவிச்சக்கர வண்டியை வாடகைக்கு எடுத்து, தான் போக வேண்டிய இடத்துக்குப் போய்விட்டு அவ்விடத்தின் அருகிலுள்ள இன்னொரு மையத்தில் அவ்வண்டியை நிறுத்திவிட்டுப் போகும் வசதி இருக்கிறது. அதன் மூலம் வாகனங்களை நகருக்குள் கொண்டு செல்வது அநாவசியம் என்ற நிலைமை உண்டாக்கப்பட்டிருக்கிறது.

பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்து நகருக்குள் எங்கும் இறங்கி அங்கிருந்து ஒரு துவிச்சக்கர வண்டியை எடுத்துச் சென்று இன்னொரு இடத்தில் விட்டுவிட்டு மேலுமொரு பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்து தன்னிருப்பிடத்துக்குத் திரும்பிப் போக முடியுமானால் சொந்த வாகனத்தில் நகருக்குள் நுழைந்து மெதுவாக நகர்ந்து நிறுத்துமிடம் தேடி கட்டணம் கட்டி நிறுத்துவதற்கு யாருக்கு அவசியம் வரும்?

இவ் விடயத்தில் உலகுக்கே உதாரணமாக இருக்கும் நகரம் டென்மார்க்கின் தலைநகரான கொப்பன்ஹேகன் ஆகும். பல வருடங்களுக்கு முன்னரே "எங்கள் நகரை உலகின் முதலாவது தனியார் வாகனமற்ற நகராக மாற்றுவோம்," என்று அறிவித்துவிட்டு அதை எவரும் நம்பாத நிலையில் அதற்காகக் கங்கணம் கட்டிக்கொண்டு இறங்கியது கொப்பன்ஹேகன். சமீபத்தைய கணிப்பீடுகளின்படி அந்த நகரின் 41 விகித மானவர்கள் துவிச்சக்கர வண்டிகளையே நகருக்குள் வேலைக்கும், கல்விச்சாலைகளுக்கு போகவும் பாவிக்கிறார்கள். வேலைக்குப் போகிறவர்களை மட்டும் எடுத்துக்கொண்டால் 62 விகிதமானவர்கள் துவிச்சக்கர வண்டியையே பாவிக்கிறார்கள். 97 விகிதமானவர்கள் நகருக்குள் துவிச்சக்கர வண்டிகளைப் பாவிப்பதை முன்னிலைப்படுத்துகிறார்கள். துவிச்சக்கர வண்டியில் பயணிப்பது பாதுகாப்பானதாக இருப்பவர்களின் தொகை 43 விகிதத்தால் அதிகரித்திருக்க கொப்பன்ஹேகனில் வாகனங்களை வைத்திருப்பவர்கள்தொகை 120000 ஆக இருக்க துவிச்சக்கர வண்டிச் சொந்தக்காரர்கள் 675000 ஆக இருக்கிறார்கள் எனும்போது அந்த நகரத்தை ஒருள திர்கால மாதிரி நகரமாகக் குறிப்பிடாமல் இருக்க முடியுமா?

தொடரும்...



# ஜெருசலேம் யாருடைய தலைநகரம்?

தேசமித்ரன்

14.05 அன்று அமெரிக்கா இஸ்ராயேலிலிருக்கும் தனது தூதுவராலயத்தை ஜெருசலேமுக்கு மாற்றப் போவதாக கடந்த வருடக் கடைசியில் அறிவித்தது. பல அரபுநாடுகள் மட்டுமன்றி ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பலவும் ஜெருசலேமில் தூதுவராலயத்தை நிறுவுதல் என்பது அந்த நகரை இஸ்ராயேலின் விருப்பப்படி முழுக்க இஸ்ராயேலின் உடமையாக்குவதற்கு ஈடானது என்று எதிர்ப்பைக் காட்டின.

ஆபிரகாமிய மார்க்கங்களான யூத, கிறீஸ்தவ, இஸ்லாம் எல்லாவற்றுக்கும் புனித ஸ்தலமாகக் கருதப்படும் ஜெருசலேம் இஸ்ராயேலுக்கு உடமையானதல்ல என்று உரிமைகோருபவர்கள் பலஸ்தீனர்கள். அவர்கள் இருவருக்கும் இடையே இருக்கும் நிலப்பிரச்சினைகள் இஸ்ராயேல் என்ற நாடு நிறுவப்பட்ட காலம் முதல் உண்டாகியது.

அமெரிக்கா தனது முடிவை அறிவித்ததுமன்றி தன்னைப் பின் தொடர்ந்து ஜெருசலேமுக்குத் தூதுவராலயங்களை மாற்றும் நாடுகளுக்கு வெவ்வேறு பொருளாதார உதவிகளைக் கொடுப்பதாக மறைமுகமான உறுதிகளையும் அறிவித்து வருகிறது. இஸ்ராயேலிய அரசும் ஜெருசலேமில் தூதுவராலயங்களை ஸ்தாபிக்கும் முதல் 10 நாடுகளுக்கு முன்னுரிமைகள் கொடுப்பதாகப் பிரகடனப் படுத்தியிருக்கிறது.

பலஸ்தீனர்களின் நண்பர்களான அராபிய நாடுகளோ இவ்விடயத்தில் பிளவுபட்டிருக்கின்றன. சவூதி அரேபியா மறைமுகமாக தனது நண்பர்களுடன் அமெரிக்காவுக்கு ஆதரவாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. துருக்கி, கத்தார் போன்ற நாடுகள் அமெரிக்காவை இவ்விடயத்தில் கண்டித்திருந்தாலும் வேறெந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

பலஸ்தீனர்களைப் பொறுத்தவரை அரசாங்கத்தை இயக்கும் அல் பத்தா அமைப்பு ஒரு பக்கமும் தீவிரவாதிகளாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் ஹமாஸ் அமைப்பும் பிளவுபட்டிருப்பதால், சர்வதேசரீதியில் தங்கள் வாதங்களை முன்னெடுக்க இயலாமல் பலவீனப்பட்டிருக்கிறார்கள்.

இந்தநிலையில் அமெரிக்காவின் வெளிநாட்டமைச்சராக புதியதாக நியமிக்கப்பட்டிருக்கும் மைக் பொம்பியோவை ஜெருசலேமின் தூதுவராயத்தை திறந்து வைக்கும் குழுவுக்கு தலைவராக அறிவித்திருக்கிறார் ஜனாதிபதி டிரம்ப். சுமார் 40 அமெரிக்க செனட்டர்கள் உட்பட பல அமெரிக்க யூத அமைப்புக்களும் பங்கெடுக்கவிருக்கும் அவ் வைபவத்தில் மொத்தமாக சுமார் 250 பேர் அமெரிக்க அரசின் சார்பாக கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.

ஏற்கனவே அமெரிக்காவின் ஐ.நா தூதுவர் நிக்கி ஹீலியும் உப ஜனாதிபதி மைக் பென்ஸூம், டிரம்பின் மகன் மருமகள் ஆகியோரும் தாங்களும் பங்குகொள்ளவிருப்பதாக அறிவித்திருந்தார்கள்.

## உலக யன்னல்

அமெரிக்காவை அடுத்து குவாத்தமாலா, ஹொண்டுராஸ் மற்றும் ருமேனியா ஆகிய நாடுகள் தமது தூதுவராலயங்களை ஜெருசலேமுக்கு மாற்றப்போவதாக அறிவித்திருக்கின்றன. ருமேனியாவை பொறுத்தவரை அவ்விடயம் ஒரு உள்நாட்டு மற்றும் ஐரோப்பிய வெளியுறவு பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறது. ருமேனியாவின் அமைச்சர் அவ்விடயத்தை அறிவித்தபின் ஜனாதிபதி ஐரோப்பிய ஒன்றியத்திலிருக்கும் நாடுகளுக்கான வெளிநாட்டுறவு ஒப்பந்தத்தை அவ்வறிவிப்பு சர்ச்சைக்கு உள்ளாக்கியிருப்பதாக அறிவித்திருக்கிறார். எனவே ருமேனியத் தூதுவராலயம் ஜெருசலேமுக்கு மாறுமா என்பது ஒரு கேள்விக்குறியாகவே இப்போதைக்கு இருக்கிறது.

# ஈரான் - அமெரிக்க ஒப்பந்தத்தின் எதிர்காலம்



ஈரானின் பக்கத்திலிருந்து சில நாட்களாகவே "எங்களுக்குத் தேவையான ஆயுதங்களை எங்களிஷ்டப்படி நாம் தயாரித்துக் கொள்வோம் அல்லது கொள்வனவு செய்வோம். அதை யாராலும் தடுக்க முடியாது. அவற்றுக்காக நாம் எவரது அனுமதியை நாடவும் போவதில்லை," என்ற சவால் வந்து கொண்டிருக்கிறது.

அதன் காரணம் அமெரிக்காவின் அதிபர், ஈரானுடன் பதவியிறங்கிய ஜனாதிபதி ஒபாமா செய்துகொண்ட அணு ஆயுதங்கள் சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தைத்தான் ரத்துசெய்து விடுவேன் என்று பதவியேறிய காலத்திலிருந்தே சொல்லிக் கொண்டிருப்பதாகும். அந்த ஒப்பந்தத்தைப் பொறுத்தவரை ஐரோப்பிய ஒன்றியமும் டிரம்ப்பும் வெவ்வேறு கிளையில் நிற்கிறார்கள். அவ்வொப்பந்தத்தைபேணி ஈரானுடன் மீண்டும் சகஜமான அரசியல், பொருளாதாரத் தொடர்புகளை உண்டாக்கிக்கொள்ள ஐ.ஒன்றியம் விரும்பும் அதேசமயம் டிரம்ப்போ ஈரானை நம்ப முடியாது என்ற நிலைப்பாட்டில் இருக்கிறார்.

இச்சமயத்தில் ஐ.ஒன்றியத்தின் சார்பாக பிரெஞ்ச் ஜனாதிபதி மக்ரோன் டிரம்ப்பை சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்தினார். தனது மூன்று நாள் அமெரிக்க விஜயத்தில் மக்ரோன் அமெரிக்க ஈரானிய ஒப்பந்தத்தைத் தொடரக் கேட்டுக்கொண்டதுடன் சிரியாவில் அமைதிப் பேச்சுவார்த்தை பற்றியும் பேசினார்.

ஒரு வாரத்துக்கு முதல் "நாங்கள் சிரியாவிலிருந்து வெளியேற விரும்புகிறோம், அதற்கு முன்பு ஐ.எஸ் தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றிய பிராந்தியங்களில் ஈரான் காலூண்ட விடாமலிருக்க கூடியதாகச் செய்வோம்," என்று டிரம்ப் தெரிவித்தார். அதேசமயம் அமெரிக்காவின் மத்திய கிழக்கு நண்பரான சவூதி அரேபியா "நாங்கள் எங்கள் இராணுவத்தை சிரியாவுக்கு அனுப்ப தயாராக இருக்கிறோம்," என்று அறிவித்தது.


இதன் மூலம் ஈரான் அமெரிக்க அணு ஆயுதம் சம்பந்தப்பட்ட 2015 ம் ஆண்டு ஒப்பந்தம் மத்திய கிழக்குப் பிராந்திய அரசியலுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று தெரிய வருகிறது. அதாவது, சிரியாவின் நட்பு நாடான ஈரான் ஐ.எஸ் இடமிருந்து அமெரிக்கா மீட்டெடுத்த இடங்களில் காலூன்ற அனுமதிக்கும் நிலைமையை தடுக்க அமெரிக்கா சவூதி அரேபியாவின் இராணுவத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளக்கூடும்.

மக்ரோன் டிரம்ப் பேச்சுவார்த்தைகளின் பின்பு "ஈரானுடன் ஒபாமா செய்து கொண்ட ஒப்பந்தத்தில் பேச்சுவார்த்தைகள் மூலம் மேலும் சில விடயங்களை சேர்த்துக்கொள்ளும் பட்சத்தில் நாம் தற்போதைய ஒப்பந்தத்தை கிடப்பில் போடாமல் இருக்கத் தயார்," என்று இரண்டு தலைவர்களும் தெரிவித்திருக்கின்றனர்.

# இஸ்ரேலும் ஆபிரிக்க அகதிகளும்

“ஆபிரிக்காவிலிருந்து வந்த அகதிகள் திரும்பித் தங்கள் நாடுகளுக்குப் போக வேண்டும்,” “திரும்பிப் போகிறவர்களுக்கு இஸ்ரேலிய அரசு தலைக்கு 3,500 டொலர்கள் கொடுக்கும்,” “திரும்பிப் போக மறுப்பவர்கள் கட்டாயமாக தமது நாடுகளுக்கோ அல்லது மூன்றாவது நாடொன்றுக்கோ திருப்பிய்னுப்பப்படுவார்கள்,” என்ற இஸ்ராயேல் அரசின் கருத்துதிடீரென்று “ஆபிரிக்க அகதிகளை கட்டாயமாகத் திரும்பிப் போகச் செய்யும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாது,” என்று 24.04 அன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட அகதிகளில் பெரும்பான்மையானோர் எரித்திரியா, சூடான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்களில் பலர் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்ராயேலில் சட்டபூர்வமாகவோ அல்லது அதிகாரிகளின் கண்களில் படாமலோ வாழ்ந்து வருபவர்கள்.

சுமார் ஒரு மாதங்களுக்கு முன்பு நாட்டிலிருந்த 20,000 ஆபிரிக்க அகதிகள் திரும்பிப் போய்விட்டதாகவும் மேலும் சுமார் 38,000 பேர் எவ்வித பத்திரங்களுமின்றி வாழ்வதாகவும் மேலும் 1,420 பேர் சுதந்திரமாக வெளியே நடமாட அனுமதிக்கப்படாத அகதி முகாம்களில் வாழ்வதாகவும் இஸ்ராயேல் அறிவித்திருந்தது. கட்டாயமாக திருப்பினுப்ப முயல்வதை எதிர்த்து மனித உரிமைக்குழுக்கள் இஸ்ராயேலின் உச்ச நீதிமன்றம் வரை போய் அங்கே தோல்வியும் அடைந்தன.




பெரும்பாலும் வேறு நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்த யூத அகதிகளாலே கட்டியெழுப்பப்பட்டு கணிசமான சுபீட்சத்துடன் வாழும் மக்களைக் கொண்ட நாடான இஸ்ராயேலே தன்னிடம் வரும் அகதிகளை திருப்பியனுப்புவதா என்று பலரும் மூக்கின் மீது விரலை வைத்தார்கள். ஆனாலும், இஸ்ராயேல் தன்னை யூதர்களுக்கான ஒரு ராஜ்யம் என்று தெளிவாகச் சொல்லும் நாடு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இஸ்ராயேலின் தலைநகரான தெல்அவிவ் குடியேற்ற, குடியுரிமை அதிகாரத்தின் காரியாலயத்தின் முன்பு தினசரி காலை 04.30 முதல் கால் கடுக்க வரிசையில் காத்திருப்பது ஆயிரக்கணக்கான இந்த அகதிகளின் வழக்கமாக இருந்து வருகிறது. நாட்டில் அகதியாக இருக்க அனுமதி வேண்டிக் காத்திருக்கும் இவர்களில் பலர் பாதசாரிகள் சாலையில் படுத்துறங்கி எழும்புவதும் சாதாரணமாக காணக்கிடைக்கும் காட்சியே.

ஐ.நாவின் அகதிகள் அமைப்பாலும் “பண்பற்ற செயல்” என்று கண்டிக்கப்பட்ட ஆபிரிக்க அகதிகள் வெளியேற்றத்தை இஸ்ராயேல் நிறுத்தியிருப்பதை பல மனித உரிமை அமைப்புக்களும் அகதிகளும் ஆசுவாசமான பெருமூச்சுடன் பாராட்டியிருக்கிறார்கள்.

# காஸ்ட்ரோ இல்லாத கியூபாவின் அரியணை

கியூபாவின் புதிய ஜனாதிபதியின் பெயர் மிகுவேல் மாரியோடியாஸ் கனெல் பெர்முடெஸ் என்று 19.04 வியாழனன்று அறிவிக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியின் அடிமட்டத்திலிருந்து வளர்ந்த் 57 வயதான மிகுவேல் நாட்டின் கல்வியமைச்சராக இருந்தவர். இவரது வழி “பாரம்பரியத்தின் தொடர்பாகவே” இருக்கும் என்று குறிப்பிடப்படுகிறது. அதாவது சர்வதேசரீதியில் எழுப்பப்படும் கேள்வியான “கியூபா தனது கம்யூனிசக் கோட்பாட்டை கைவிடுமா?” என்ற கேள்விக்குப் பதில் “இல்லை” என்பதாகவே இருக்கும் என்று பலரும் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

பிடலின் அடிச்சுவடுகளில் நாட்டை நடாத்திய, இப்போது 86 வயதாகிய ராவுல்,தான் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்திருக்கிறார், ஆனால் கட்சியின் தலைவராக அவர் மேலும் 3 வருடங்கள் இருப்பார்.

1959 இல்கியூபாவின் சர்வாதிகாரியை கெரில்லாப் போரின் மூலம் ஒழித்துக் கட்டிய பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் உருவகமாக சர்வதேசத்துக்கு மாறினார். கம்யூனிசவாதியான காஸ்ட்ரோ பல சமூகப் பிரச்சினைகளாலும் சிதறிப் போயிருந்த நட்டை ஒன்றுபடுத்தி மெதுவாக ஒரு நவீன குடியரசாக்கினார். சர்வதேச அளவில் சமூகத்தின் சகல தரப்பினருக்கும் கல்வி, ஆரோக்கியம் போன்றவைக்கு முன்னுரிமை கொடுக்கும் நாடாக மிளிர்ந்தது கியூபா.

அதேசமயம் கியூபா ஒரு மூடப்பட்ட நாடாகவும் ஆகியது. காஸ்ட்ரோவும் அவரது கட்டுப்பாட்டில் இருந்த கம்யூனிசக் கட்சியும் மட்டும்தான்



நாட்டின் அனுமதிக்கப்பட்ட அரசியல் இயக்கங்களாக ஆக்கப்பட்டன. ஒரு கட்சிச் சர்வாதிகார நாடாக இருக்கும் கியூபாவில் பிடலும் அவரது சகோதரர்களும், அவர்களது குடும்பங்களும் முக்கிய அதிகாரங்களை கைப்பற்றிக் கொண்டார்கள். ஏறக்குறைய உயிர்போகும் வரை நாட்டின் ஜனாதிபதியாக இருந்த பிடல் பதவியிலிருந்து விலகியதும் அவரது சகோதரர் ராவுல் காஸ்ட்ரோ நாட்டின் ஜனாதிபதியானார். பிடல் 2016 இல் மரணமானார்.


நாட்டின் இரகசியப் பொலீஸ்துறை ராவுலின் ஒரு மகனின் கீழே இயங்குகிறது.நாட்டின் இராணுவத்தின் கீழே இயங்கும் வெளிநாட்டுச் செலாவணியை கையாளும் துறையை ராவுலின் மருமகன் இயக்குகிறார். ராவுலின் இன்னொரு மகன் நாட்டின் அரசியல்வாதிகளுக்கான பாதுகாப்பு அதிகாரிகளைத் தெரிந்தெடுப்பவராக இருக்கிறார். எனவே மிகுவேல் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டாலும் காஸ்ட்ரோ குடும்பத்தினர்தான் நாட்டின் முக்கியமான அதிகார மையங்கள் என்ற சிலந்திவலையில் அவர் கட்டுப்பட்டே இருப்பார்.

அறுபது வருடங்களுக்குப் பின்பு முதல்முறையாக காஸ்ட்ரோ குடும்பத்திற்கு வெளியே ஒருவர் ஜனாதிபதியாக்கப்படும் அதேசமயம் உபஜனாதிபதி பதவிக்காக மூன்றுபேர் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் இருவர் பெண்கள். பியாத்ரிஸ் ஜோன்ஸன், ஈனெஸ் மரியா சாப்மன் என்ற அவ்விருவரும் கியூபாவின் ஆபிரிக்க கறுப்பினத்தைச் சேர்ந்தவர்கள் என்பது கியூபாவுக்கு ஒரு புதிய விடயமே.

கியூபாவில் காஸ்ட்ரோ மூலம் நடாத்தப்பட்ட புரட்சி ஒரு வெள்ளை இனப் புரட்சியே, அதன் பின்பு கொண்டுவரப்பட்ட மாற்றங்களில் நாட்டின் கறுப்பின மக்களுக்குப் போதியளவு இடங்கள் கொடுக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டு பிடலின் காலத்திலேயே இருக்கிறது.

ஒருவேளை புதிய தலைமுறையில் ஒருவராகப் பதவியேற்கப் போகும் மிகுவேல் சில வருடங்களுக்கு நாட்டைக் கையாளப்போகும் இடைக் காலத் தீர்வாகவும் இருக்கலாம். காஸ்ட்ரோ குடும்பத்திலிருந்து இன்னொருவர் நாட்டின் தலைமையைத் தாங்கும் அரசியல் முதிர்ச்சியை அடையும்போது மிகுவேல் பதவியிலிருந்து விலகக்கூடும்.

# புதிய புராணம்! பிள்ளையார் வழி



"விநாயகர் மாதிரி வேலை செய்யணும்..." என்றார் ஒரு பேராசிரியர். திகைத்துப் போனேன்.

பொதுவாக நமது கடவுள் விநாயகர் புராணங்களில் உடல் பருமன் அதிகம் கொண்டவராக சித்திரிக்கப்பட்டிருக்கிறார்.யானை முகக் கடவுள். யானைகள் வெகு நிதானமானவை. தவிர, விநாயகர் சுறுசுறுப்புக்கு உதாரணமாகச் சொல்லப்பட்ட கதைகளைப் படித்ததில்லை; கேள்வியும் பட்டதில்லை.

முதலில், விநாயகர் சப்ஜெக்ட் எதற்காக வந்தது என்பதைச் சொல்லி விடுகிறேன். அதாவது, என்னுடைய பேராசிரியர் ஒருவிவரம் கேட்டிருந்தார். நான் அதற்காக புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தேன்.

யதேச்சையாக அருகில் வந்தவர், என்னைக் கவனித்துவிட்டு மேலே சொன்ன வாக்கியத்தைச் சொன்னார். "விநாயகர் மாதிரி வேலை செய்யணும்" என்று.

புத்தகத்தில் ஒரு விஷயத்தைத் தேடுவதில் 'ஃபாலோ த விநாயகர் வே' என்பதற்கு என்ன இருக்கிறது என்று குழம்பினேன்.

அதை அவரும் புரிந்துகொண்டிருக்க வேண்டும். தொடர்ந்து, "உங்க வொர்க்ல எஃபிஷியன்ட் இருக்குது. ஆனா, எஃபெக்டிவா இருந்தாத்தான் ரிசல்ட் கிடைக்கும்..." என்றார்.

அப்போதும் நான் புரியாமல் விழிக்கவே, "இண்டெக்ஸைப் பார்த்தாலே நான் கேட்ட விவரம் இதில்இருக்கிறதா,இல்லையா என்பதை அறிந்துகொள்ள முடியுமே. முழுப் புத்தகத்தையும் ஏன் புரட்டணும்?" என்று கேட்டார்.

இப்போது, அவர் சொல்ல வருவதை ஓரளவு புரிந்துகொள்ள முடிந்தது என்றாலும், 'இதில் ஆனைமுகனை ஏன் உள்ளே நுழைத்தார்?' என்ற கேள்வி அப்படியே இருந்தது எனக்குள்.

என் முகபாவனையைக் கொண்டே எனக்குள் இருந்த கேள்வியை பேராசிரியர் உள்வாங்கிக்கொண்டார் போலும். வேறு வழியின்றி என் மட்டத்துக்கு இறங்கிவந்து புரியவைக்க முனைந்தார்.

"விநாயகர் உலகத்தைச் சுத்தறதுக்கு ஸ்மார்ட்டா ஒரு ஐடியாவை பிடிச்சாரே, அதுதான்... அந்த ஜாப்தான் எஃபெக்டிவ்.

முருகப்பெருமான் மஸ்ட் பீ எஃபிஷியன்ட். ஓர் அசுரனை அழிக்கறதுக்கு அந்த எஃபிஷியன்ட் தான் தேவை. ஆனா, இந்தப் போட்டிக்கு அது பொருந்தாது. இதில், விநாயகர் எடுத்த முடிவுதான் புத்திசாலித்தனமானது.

ஆக, எப்ப எஃபெக்டிவா இருக்கணும், எப்ப எஃபிஷியன்ட்டா இருக்கணும்ங்கறதை ஒருத்தர் தெளிவா தெரிஞ்சு வெச்சிருக்கணும். அப்பதான் ஜெயிக்க முடியும். புரிந்ததா?"

இப்போது நன்றாகவே புரிந்தது எனக்கு. சில நேரங்களில் வேகமும், சில நேரங்களில் விவேகமும் தேவை. எதை எப்போது பிரயோகிப்பது என்ற அறிதல் எப்போதும் அவசியம்.

அன்றாட வாழ்வில் நடமாடும் பல்கலைக்கழகங்களாகத் திகழும் பலபேரைப் பார்க்கிறோம். அவர்களில், வாழ்வில் வெற்றி பெற்று சந்தோஷமாக வாழ்பவர்களைக்காட்டிலும், 'இவ்வளவு அறிவாளியா இருந்தும் நம்மளால ஏன் சாதிக்க முடியவில்லை' என்ற ஆதங்கத்தோடு வாழ்பவர்களே அதிகம்.

அறிவு இருந்தால் மட்டும் போதாது; அதை எப்போது, எப்படி பயன்படுத்த வேண்டும் என்ற மேலாண்மைக் கருத்தையே 'விநாயகர் உலகைச் சுற்றிய' கதை நமக்குச் சொல்கிறது.

சரி! வேறென்ன விஷயங்களை அந்தக் கதை கற்றுத் தருகிறது?

'அம்மையப்பனே உலகம்; உலகமே அம்மையப்பன்' இதுதான் இந்தக் கதையின் மையக்கரு.

உண்மையில் உலகம் என்பது என்ன?

உலகம் என்பது நாற்புறமும் கடலாலும், விண்ணாலும் சூழப்பட்ட இடம் மாத்திரமா அல்லது நான் என் மனதிலிருந்து உலகைப் பார்ப்பதற்குத் தக்கபடி உலகம் காட்சியளிக்குமா, அல்லது நாம் காணும் உலகம் நம் மனதை உருவாக்குகிறதா?

உலகம்தான் மனதை உருவாக்குகிறது என்றால், அது ஏன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக உருவாக்குகிறது? ஒரே உலகம் என்றால், அது எல்லோருக்கும் ஏன் ஒரேவிதமான அனுபவத்தைத் தருவதில்லை!

ஆக, என் மனம்தான் எனக்கான உலகை உருவாக்க முடியும்.

ஒவ்வொருவரும் அவரவருக்கான உலகத்தை, சிறு குழந்தையாக இருக்கும் போதிருந்தே உருவாக்கத் தொடங்குகிறார்கள்.

ஒரு குழந்தையின் உலகம் எப்படி இருக்கிறது? ஒருகுழந்தையின் உலகத்தை யார் உருவாக்குகிறார்கள்? ஏன் ஒரு குழந்தையின் உலகம், இன்னொரு குழந்தையின் உலகத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது?


ஒவ்வொரு குழந்தைக்கும் உலகைப் பார்க்கிற கண்களை யார் தருகிறார்கள்?

நிச்சயமாக, அவர்களின் பெற்றோர்களைத் தவிர வேறு யார் இந்தப் பாத்திரத்தை வகிக்க முடியும்? ஒரு குழந்தை தனது பெற்றோரின் வழியாகத்தான் உலகைப் பார்க்கிறது. குழந்தைகளுக்கு அதன் பெற்றோர்தான் உலகை அறிமுகம் செய்கிறார்கள்.

பெற்றோர் காட்டும் உலகம் பாலை வனமாக இருந்தால், குழந்தை ஒட்டகத்தையும், வியர்வையையும் அறிந்து கொள்ளும். பெற்றோரின் உலகில் கவிதைகள் இருந்தால், குழந்தையின் உலகில் கவிதை எழுத காகிதக் கடைகளின் முகவரி இருந்தே தீரும்.

விநாயகரின் உலகம் அவரது பெற்றோர் காட்டிய உலகம். விநாயகர், பெற்றோரிடத்தில் உலகைப் பார்க்கிறார் என்றால், 'பெற்றோர் வழியாக உலகைப் பார்க்கிறார்' என்றுதான் அர்த்தம். பெற்றோர் அல்லது அந்தப் பாத்திரங்களுக்கு ஈடான பொறுப்பை வகிக்கிறவர்கள், நல்லதைச் சொல்லிக் கொடுத்தால் குழந்தைகளும் நல்லதைக் கடைப்பிடிப்பார்கள். எனவே, இந்தக் கதை விநாயகரின் உலகைச்சுற்றும் கதை மட்டுமல்ல; குழந்தை களுக்கு உலகைக் காட்ட வேண்டிய பெற்றோரின் உன்னதப் பொறுப்பை உணர்த்தும் கதையும்கூட!

*புராணம் தொடரும்...*







▶ சர்வதேச புவி தினத்தினை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சிவனொளிபாதமலையினை சுத்தப்படுத்தி அதன் கழிவுகளை உத்தியோக பூர்வமாக மஸ்கெலியா பிரதேசசபையிடம் ஒப்படைக்கும் நிழ்கவு 23.04.2018 அன்று முதலமைச்சர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு மஸ்கெலியா பிரதேசசபையின் தவிசாளர் ஜி.செண்பகவள்ளி, ஶ்ரீலங்கா சுதந்திரகட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளரும், மஸ்கெலியா பிரதேசசபையின உபதலைவருமான பெரிசாமி பிரதீபன், அட்டன் வலயக்கல்விப்பணிப்பாளர் பி.ஶ்ரீதரன், அட்டன் கோட்ட பொலிஸ் அதிதியட்சகர் அம்பேபிட்டிய உட்பட பொலிஸ் அதிகாரிகள், இராணுவ வீர்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.



# WWE
## கிங்ஸ் ஆ:ப் தி ரிங்ஸ்
### அதிரடி அடிதடி-6



ரெஸ்ட்ல்மேனியா, சர்வைவர் சீரிஸ், ரோயல் ரம்பிள் மற்றும் சம்மர் ஸ்லாம். இவை WWE-யின் 'பிக் ஃபோர் பேபெர்வ்யூ ( Big Four Pay Per View )' எனக் கொண்டாடப்படுகிறது. அந்தக் காலத்தில் சிறப்பு நிகழ்ச்சிகளுக்குச் சிறப்புக் கட்டணம் வாங்கிக் கொண்டு கேபிளில் ஒளிபரப்பினார்கள், அந்த நிகழ்ச்சிகளைத்தான் பேபெர்வ்யூ என்கிறோம். அந்த நான்கிலும் ரோயல் ரம்பிள்தான் WWE ரசிகர்களுக்கு மிகமிகப் பிடித்தமான பேபெர்வ்யூ.



# அண்டர்டேக்கரிடம் மாவென் வாங்கிய அடி தெரியுமா?
## ரோயல் ரம்பிள் ரீவைண்ட்

'ரோயல் ரம்பிள்' நிகழ்ச்சியின் சிறப்பே, 30 பேர் சண்டையிடும் 'பேட்டில் ரோயல்' போட்டிதான். ஒவ்வொருவராய் குறிப்பிட்ட இடைவெளியில் ரிங்கிற்குள் வந்து சண்டையிடுவார்கள். மூன்று கயிறுகளைத் தாண்டி களத்திலிருந்து வெளியேற்றப்படுபவர்கள், போட்டியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள். கடைசியில், ஆப்பனன்ட்டாக ஆளே இல்லாமல் சோலோவாக நிற்கும் வீரர் வெற்றிப்பெற்றவராக அறிவிக்கப் படுவார். போட்டியைப் பாக்கவே செம சுவாரஸ்யமாக இருக்கும். ப்ளே ஸ்டேஷனில் 'பெய்ன்' விளையாடும் போது கூட பேட்டில் ரோயல்தான் முதல் சொய்ஸ், அப்புறம்தான் லேடர் மட்சே. சரி, ஏன் ரோயல் ரம்பிள் அவ்வளவு சுவாரஸ்யமாக இருக்கிறது? இதனால்தான்....

### திடீர் திடீர்னு கிளம்பி வருவாய்ங்க :

WWEயில் திடீரென அப்ஸ்காண்டான சிலர், ரோயல் ரம்பிள் போட்டிகளின்போது 'வந்துட்டேன்னு சொல்லு, திரும்பு வந்துட்டேன்னு சொல்லு' என ரீஎன்ட்ரி கொடுப்பார்கள். 'வந்துட்டான்டா என் தலைவன், வந்துட்டான்டா' என ரசிகர்களின் பெருமூளை பேரின்பத்தில் துள்ளிக் குதிக்கும். எல்லா ஆண்டும் இப்படியொரு மறக்கமுடியாத புத்தாண்டு பரிசைக் கொடுத்து, ரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்தும் ரோயல் ரம்பிள்.

2002ல் இள ரத்தமாக WWE-ல் தலையைக் காட்டிவிட்டு சென்ற ஏஜே ஸ்டைல்ஸ், அதன்பின் உலகமே சுற்றிவந்து, உலகின் சிறந்த ரெஸ்ட்லர் எனப் பெயர்வாங்கி, கிட்டத்தட்ட 14 ஆண்டுகளுக்குப் பின் 2016 'ரோயல் ரம்பிளில்' காலடி எடுத்துவைத்தார். ஏஜே ஸ்டைல்ஸை WWE-யில் மீண்டும் பார்க்க எத்தனையோ ரசிகர்கள் தவம் கிடந்தார்கள். கடும் தவத்திற்கு கிடைத்த வரமாய் அமைந்தது அந்த மொமன்ட்.

ஒருகாலத்தில் ஓவர் சீன் போட்டுக் கொண்டு உடம்பை புண்ணாக்கிக் கொள்வார் டொல்ஃப் ஸிக்லர். அவருக்கு முழுநேர வேலையே அதுதான். 2013ஆம் ஆண்டு ரோயல் ரம்பிள் போட்டியில் முதல் ஆளாக என்ட்ரியானவர், மைக்கை வாங்கிப் பேச ஆரம்பித்துவிட்டார். எல்லாம் 'நான் யார் தெரியுமா' வகை தற்பெருமைகள். பேசிமுடித்துவிட்டு 'சீக்கிரமா வாங்கடா சட்டுபுட்டுனு மட்சை முடிச்சுட்டு கிளம்பணும்' எனத் தெனாவட்டும் காட்ட, உக்கிர மானார்கள் ரசிகர்கள். அடுத்த நொடியே அரங்கிலுள்ள விளக்குகள் அணைந்து, படபடவென பட்டாசு பொறிப்பறக்க, ரசிகர்களின் ஆரவாரத்தில் ஆட்டம்கண்டது அரங்கத்தின் கூரை. ஐந்து மாத இடைவெளிக்குப் பிறகு புதுஆளாக வந்து நின்றார் க்றிஸ் ஜெரிக்கோ. டொல்ஃப் ஸிக்லர் சீன்பார்ட்டி என்றால், ஜெரிக்கோ சீனுக்கெல்லாம் சீன் பார்ட்டி. 'சீன் சீன் ஓவர் சீன், போட்டதெல்லாம் வீண்' என டொல்ஃபை பார்த்து பரிதாபப்பட்டனர் ரசிகர்கள். ரிசல்ட்டும் அதேதான்!

2008 ஆம் நடந்த 'ரோயல் ரம்பளி'ல் நீண்டநாள்களுக்குப் பிறகு 30வது ஆளாக என்ட்ரியாகி ஜெயித்ததெல்லாம் ஆவ்ஸம் தருணங்கள். நினைக்கும்போதே புல்லரிக்குதே...

### காமெடியும் களை கட்டும் :

'ராயல்ரம்பளி'ல்எந்தளவு ஆக்ஷனும் ட்விஸ்ட்களும்நிறைந்திருக்குமோ, அதே அளவு காமெடியும் நிறைந்திருக்கும். நம் ஊர் மசாலா ஆக்ஷன்பட ஃபார்முலா!


சமீபகாலமாக, கத்துக்கிட்ட வித்தையெல்லாம் இறக்கி ரசிகர்களைக் குதூகலப்படுத்திவருவது கோஃபி கிங்ஸ்டன்தான். வீரரின் இரண்டு காலும் தரையில் பட்டால்தான் அவர் வெளியேற்றப்பட்டதாகக் கருதப்படும். 2012ல் நடந்த ரோயல் ரம்பிளில், கோஃபி கிங்ஸ்டனை வெளியே தள்ளிவிட்டார் மிஸ். ஆனால், தரையில் கால்களை ஊன்றாமல் கைகளை ஊன்றி, தலைகீழாக நடந்துசென்று மீண்டும் ரிங்கிற்குள் ஏறிவிட்டார். 2013ல் நடந்த ரோயல் ரம்பிளில் கோஃபி கிங்ஸ்டனை ரிங்கிலிருந்து வெளியே தள்ளிவிட, தடாரென்று வர்ணனையாளர்கள் டேபிளுக்குத் தாவிக் குதித்துவிட்டார். பின்னர் வர்ணனையாளர் ஒருவரின் நாற்காலியைக் கடன்வாங்கி, கால்கள் தரைப்படாதவாறு அதில் ஏறி நின்று, குதித்தே குதித்தே ரிங்கிற்குள் மீண்டும் புகுந்தார். 2014 ஆம் ஆண்டு, ரிங்கிற்கும் ரசிகர்களுக்கும் இடையே உள்ள தடுப்புச் சுவரின் மேல் தாவி, அங்கிருந்து மீண்டும் ரிங்கிற்குள் தாவினார். 2015, 2016 ரோயல் ரம்பிள்களிலும் இதே வேலைதான். ஆனால், பயபுள்ள ஒருமுறை கூட ஜெயித்ததேயில்லை. பாவத்த!

> "ரோயல் ரம்பிளில் வெற்றியடைவதெல்லாம்,
> அவ்வீரன் அவன் வாழ்க்கையில் செய்த மிகப்பெரும் சாதனை"
> ஜோன் செனா

2002 ஆம் ஆண்டு நடந்த ரோயல் ரம்பளில், ரிங்கிற்குள் வந்த ஒவ்வொருவரையும் தனி ஆளாய் நின்று பொளந்து கட்டினார் அண்டர்டேக்கர். ஜெஃப் ஹார்டி, மாட் ஹார்டி இருவரையும் அடித்துத் துவைத்து, வெளியே தூக்கி ஏறிந்து பன்ச் டயலாக் பேசிக் கொண்டிருந்தவரை, பின்னாலிருந்து முதுகிலேயே உதைத்து வெளியே தள்ளிவிட்டார் மாவென். அண்டர் டேக்கர் போட்டியிலிருந்து அவுட். சும்மாவே ஆடும் அண்டர்டேக்கரின் காலில் சலங்கையை வேறு கட்டிவிட்ட கதையாக, ரிங்கிற்குள் புகுந்து மாவெனை இழுத்துப் போட்டு அடித்தார். ரிங்கின் அருகே ஆரம்பித்த அடி, நாலைந்து மாடி ஏறி இறங்கி பொப் கோர்ன் மெஷினில் தூக்கி எறிந்ததோடு முடிந்தது. என்னா அடி!



இன்னும் நிறைய இருக்கு, அடுத்த வாரம் சொல்றேன். வெயிட் பண்ணுங்க மக்களே, ஸ்டாடிஸ்டிக்ஸோட வாரேன்..!




# 12 சென்றதும் வென்றதும்!

✎ சார்லஸ் டார்வின்

பீகிள் கப்பல் எங்கே கரை ஒதுங்கினாலும், முதல் ஆளாகப் பாய்ந்து இறங்கி, அந்த இடத்தைச் சுற்ற ஆரம்பித்துவிடுவார் சார்லஸ் டார்வின். மீன் எப்படி நீந்துகிறது, கொக்கு எப்படிப் பறக்கிறது, பூச்சிகளின் கண்கள் எப்படி இருக்கும் என ஆராய ஆரம்பித்தால், அவருக்கு நேரம் போவதே தெரியாது. சாப்பாடே தேவையில்லை. ஒரு வெட்டுக்கிளியின் உணவு எப்படிச் செரிமானம் ஆகிறது? காய்ந்த குச்சி போல இருக்கும் இந்தப் பூச்சியின் உடலுக்குள் என்னென்ன இருக்கும்? என்ற சந்தேகங்கள் தோன்றும்போது, கையோடு வெட்டுக் கிளியையும் பூச்சியையும் பிடித்து, கத்தியால் கீறி நுணுக்கமாக ஆய்வு செய்து, குறிப்புகளை எழுதத் தொடங்கி விடுவார்.

தாவரங்கள், சிப்பிகள், மரப்பட்டைகள், கொட்டைகள், செடி கொடிகள் எனப் பார்க்கும் எல்லாவற்றில் இருந்தும் ஒவ்வொன்றைக் கப்பலில் போட்டுக்கொண்டு போய் விட விரும்பினார். பீகிள் கப்பலைச் சேர்ந்த பலர், கரை ஒதுங்கியவுடன் மனிதர்களிடம்தான் சென்று பேசுவார்கள். ஆனால் டார்வினோ, மனிதர்களைத் தவிர மற்ற எல்லா உயிர்களிடமும் பேசுவார். அபூர்வமாகத்தான் மனிதர்களை அவர் பார்ப்பார்.



- பீகிள் பயணம் முடிந்து 20 ஆண்டுகள் கழித்தே, பரிணாம வளர்ச்சி பற்றிய தன் ஆய்வை டார்வின் வெளியிட்டார். அதைப் படித்தால் என்ன சொல்வார்களோ என்ற பயமே காரணம்.
- டார்வின் நினைத்ததுபோலவே அது எப்படி குரங்கிலிருந்து மனிதன் தோன்றுவான் எனப் பலர் சீறினார்கள். குரங்கிலிருந்து மனிதன் தோன்றவில்லை, இருவருடைய மூதாதையரும் ஒன்று என்றுதான் சொல்கிறேன் என விளக்கினார் டார்வின்.
- டார்வினின் கண்டுபிடிப்புகள் பலத்த எதிர்ப்புக்கு உள்ளாயின. நீண்ட காலத்துக்குப் பிறகு, மேலும் பல ஆய்வாளர்கள் டார்வின் சொன்னதை நிரூபித்த பிறகே, உலகம் அவரை ஏற்றுக்கொண்டது.
- 2000ம் ஆண்டு தொடங்கி, பிரிட்டன் 10 பவுண்ட் தாளில் டார்வினின் படமும் பீகிள் கப்பலின் படமும் இடம்பெற்றுவருகிறது.
- நூற்றுக்கும் அதிகமான உயிரினங்களுக்கும் தாவரங்களுக்கும் டார்வினின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பிரேசிலிலுக்குச் சென்றபோதும் அதுவே நடந்தது. காட்டில் ஒரு கம்பளிப்பூச்சியைக்கூட விடாமல் பார்த்து, பிடித்து, ஆராய்ந்து, சிலவற்றைப் பையில் போட்டுக்கொண்டு மகிழ்ச்சியாகச் சுற்றிக்கொண்டிருந்தார். தற்செயலாக அவர் பார்வை கறுப்பு நிறத்தில் இருந்த மனிதர்கள் மீது விழுந்தது. மரம் வெட்டிக்கொண்டும், மூட்டை சுமந்துகொண்டும், சில நேரம், மனிதர்களைச் சுமந்துகொண்டும் சென்றுகொண்டிருந்தனர். டார்வின், சற்று நேரம் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு கப்பலுக்குத் திரும்பிவிட்டார். அவரைப் பார்த்து ஆச்சர்யப்பட்டார், கப்டன் ஃபிட்ஸ்ராய்.

"என்ன டார்வின், அதற்குள் பிரேசிலைப் பார்த்துவிட்டாயா? பெரிய காடாக இருக்கிறதே, நீ சுற்றிவருவதற்கு நேரமாகும் என நினைத்தேன்" என்றார்.

"நானும் அப்படித்தான் நினைத்தேன். வழியில் நான் கண்ட சில கறுப்பின மனிதர்கள் என்னைச் சங்கடப்படுத்திவிட்டார்கள்'' என்றார் டார்வின். "அவர்கள் எப்போதும் இப்படித்தான் டார்வின். நாகரிகம் என்றால் என்னவென்றே தெரியாத கூட்டம்."

டார்வினின் முகம் மாறியது. "நான் சொல்ல வந்ததை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. விலங்குகளைப் போல இவர்களை சில வெள்ளையர்கள் வேலை வாங்குகிறார்கள். சக மனிதர்களை இப்படி கஷ்டப்படுத்துபவர்கள்தான் நாகரிகம் தெரியாதவர்கள்."

கப்டன் ஃபிட்ஸ்ராயால் இதை ஏற்கமுடியவில்லை. "பல மனிதர்களால் அடிமைகளாக மட்டுமே இருக்க முடியும் டார்வின். அவர்களுடைய திறமை அவ்வளவுதான். வெகு சிலரால் மட்டுமே எஜமானர்களாக மாறமுடியும். நீ பார்த்த கறுப்பின மக்கள் அடிமைகளாக இருப்பதற்காகவே பிறந்தவர்கள்." கப்டன், வயதில் மூத்தவர், அவர் மனம் வைத்ததால்தான் இந்தப் பயணமே சாத்தியமானது. இருந்தாலும் அவர் கூறியதில் டார்வின் உடன்படவில்லை.

"எல்லா உயிர்களும் ஒன்று போலத்தான் பிறக்கின்றன கப்டன். மனிதர்களில் மேலானவர்கள், கீழானவர்கள் என்றெல்லாம் எந்த வித்தியாசமும் இல்லை. வெள்ளையாக இருப்பவர்கள் எஜமானர்களாக இருக்க வேண்டும், கறுப்பு நிறம் என்றால் அடிமை வேலைதான் செய்ய வேண்டும் என்றெல்லாம் சொல்வது, அறிவியல் உண்மைக்கு எதிரானது."

இதைக் கேட்டதும் கப்டனுக்கு கோபம் தலைக்கு ஏறியது. "நீ மனிதர்களை ஆராய்ச்சி செய்வதை விட்டுவிடு. விலங்குகளும் பூச்சிகளும்தான் உனக்கு லாயக்கு. இனி என்னிடம் வராதே." என்றதும், டார்வினும் எழுந்து சென்றுவிட்டார். பிறகு, எல்லோரும் வந்து சமாதானம் செய்ததும்தான் கோபப்பட்டது தவறு என, டார்வினிடம் மன்னிப்பு கேட்டார் கப்டன்.

பயணம் தொடர்ந்தது. அர்ஜென்டினாவில் புன்ட்டா அல்ட்டா என்னும் இடத்தில், நீண்ட காலத்துக்கு முன் அழிந்துபோன ஒரு பாலூட்டியின் மிகப்பெரிய எலும்புக்கூட்டைப் பார்த்தார். வேறு சில அழிந்த விலங்குகளின் எலும்புத் துண்டுகளும் பற்களும்கூட கிடைத்தன. இந்த மிருகங்கள் ஏன் அழிந்துபோயின? அதிக குளிர் அல்லது அதிக வெப்பம் காரணமாக அவை அழிந்திருக்குமா? இந்த எலும்புகளை வைத்துக்கொண்டு அந்தப் பாலூட்டிகள் எப்படி இருந்திருக்கும் எனத் தெரிந்தகொள்ள முடியுமா? இப்படி எத்தனை விதமான விலங்குகள் இதுவரை உலகில் இருந்து அழிந்துபோயிருக்கும்? மற்ற விலங்குகள் எப்படி அழிவில் இருந்து தப்பித்தன? இப்படிப் பல கேள்விகள் டார்வினுக்கு எழுந்தன.

டார்வினைப் பொறுத்தவரை, ஒரு மீனும் ஒரு பூச்சியும் ஒரு செடியும் ஒரு மனிதனும் ஒன்றுதான். ஒரு சின்னப் பறவையிடம் இருந்து பல ஆச்சர்யமூட்டும் உண்மைகளைக் கற்க முடியும். பறவைகளிடமே இவ்வளவு கற்க முடியும் என்றால், சிந்திக்கத் தெரிந்த மனிதரிடம் இருந்து எவ்வளவோ அற்புதங்களைக் கற்க முடியும்! அதைச் செய்யாமல், அவர்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பது பெரிய தவறு என்பார்.

காட்டு விலங்குகளுக்கும் வீட்டு விலங்குகளுக்கும் வேறுபாடு இல்லை. அவை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை. படித்தவருக்கும் படிக்காதவருக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. ஒரு பழங்குடி மனிதரைப் பள்ளியில் படிக்கவைத்தால், அவரால் நன்றாகக் கல்வி கற்க முடியும் என்று டார்வின் நம்பினார்.

சிலி, கலபாகஸ் தீவுகள், கேப்டவுன், நியூசிலாந்து, சிட்னி பகுதிகளில் டார்வின் கண்ட உயிரினங்கள், அவருடைய நம்பிக்கையை உறுதி செய்தன. மனிதருக்கும் விலங்குக்கும் இடையில் எந்த அடிப்படை வேறுபாடுகளும் இல்லை என்பது அவருக்குக் கண்கூடாகத் தெரிந்தது. உயிர்கள், வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு வடிவங்களில் காட்சி அளிக்கின்றன. பறவைகள், மீன்கள், கொறிக்கும் விலங்குகள், பாலூட்டிகள், தாவரம் எனப் பல பிரிவுகளில் பிரிந்து கிடக்கின்றன. ஆனாலும் அனைத்தும் ஒரே குடும்பம்.

நிறம், மொழி, மதம், நாடு என்று பல பிரிவுகளாக இருந்தாலும் அடிப்படையில் மனிதர்கள் எல்லோரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய மூதாதையர் ஒருவர்தான். அவர்களில் சிலரை அடிமைகள் என்றும் எஜமானர்கள் என்றும் பிரித்துப் பார்ப்பது தவறு. ஆரம்பத்தில் எல்லா உயிர்களும் எளிமையாகவே இருந்தன. பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக அவை மாற்றம் அடைந்தன என்னும் முடிவுக்கு வந்து சேர்ந்தார் டார்வின். இந்த மாற்றங்கள் ஏற்பட, பல லட்சக்கணக்கான ஆண்டுகள் ஆகின. பக்டீரியா தொடங்கி மனிதன் வரை அனைத்து உயிர்களும் இப்படிப் படிப்படியாகத்தான் வளர்ச்சி அடைந்தன. இதைப் பரிணாம வளர்ச்சி என அழைத்தார் டார்வின்.

அதென்ன பரிணாம வளர்ச்சி? சூழ்நிலைக்குத் தகுந்தபடி தம்மை மாற்றிக்கொள்ளும் உயிரினங்கள் தொடர்ச்சியாக வாழ்கின்றன. இந்த மாற்றங்கள் அடுத்தடுத்த சந்ததிகளாக நடக்கும்போது, அவை படிப்படியாக வளர்ச்சி அடைகின்றன. இதெல்லாம் நடப்பதற்கு கோடிக் கணக்கான ஆண்டுகள்கூட ஆகும். தங்களை மாற்றிக்கொள்ள முடியாதவை டைனோசர் போல அழிந்துவிடுகின்றன. 'உயிரினங்களின் தோற்றம்' என்ற நூலில் இன்னொரு முக்கிய விஷயத்தை டார்வின் கண்டறிந்தார். மனிதனும் குரங்கும் ஒரே மூதாதையரிடம் இருந்தே தோன்றினர் என்றார் அவர்.

இயற்கையின் ரகசியத்தைக் கண்டு பிடித்த தலைசிறந்த மனிதராக சார்லஸ் டார்வின் கொண்டாடப்படுகிறார். அதற்கு, பீகிள் கப்பலுக்குத்தான் நாம் நன்றி சொல்ல வேண்டும்.

**(பயணம் தொடரும்)**



சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
சித்திரை புதுவருடத்தினை முன்னிட்டு
14/04/2018 தொடக்கம் 30/04/2018 வரை பதிவினை
மேற்கொள்பவர்களுக்கு விசேட கழிவுக்கட்டணம் வழங்கப்படும்...
DS NO - 882
சாரத்திய அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு தேவையான ஆவணங்கள்
✓ தேசிய அடையாள அட்டை
✓ மருத்துவச்சான்றிதழ் (தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம்)
✓ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (மூலப்பிரதி)
✓ திருமண அத்தாட்சிப் பத்திரம் (மூலப் பிரதிபெண்களுக்கு மட்டும்)
✓ சாரதி அனுமதிப்பத்திரம் (வைத்திருந்தால்)
வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும்.
(கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)
✓ விண்ணப்பதாரி, கட்டணங்களை தவணை முறை அடிப்படையில் செலுத்த முடியும்.
✓ எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புக்களும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.
✓ எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
✓ எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.
✓ விரைவில் எழுத்துப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.
முறைமையான சாரத்தியத்தை கற்றுக்கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்
தலைமைக் காரியாலயம்
0212217578 / 0212217678 / 0776140361
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE 0777226247
0212228004
sasikadrivingschool@gmail.com
sasikalearners.com
கிளை நிறுவனங்கள்
யாழ்ப்பாணம் (TOWN)
இல 281C, மணிக்கூட்டு கோபுரவீதி யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை பின் புறமாக)
0703015004 / 0212228004
மல்லாகம்
கே.கே.எஸ் வீதி
0212243393 / 0703013014
சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
0212251664 / 0703013016
வேலணை
வங்களாவடி சந்தி
0212215472 / 0703013012




புதிய
ஓவியா ஜுவல்லர்ஸ்
1990களில் இலங்கையில் "நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்" என்ற பெயரில் இயங்கி வந்து அதன் பின்னர் இந்தியாவில் உஸ்மான் வீதி, தி.நகர்,சென்னை என்ற முகவரியில் இலங்கை மக்களின் ஆதரவுடன் இயங்கி வந்த நகை மாளிகை தற்போது நியூ ஓவியா ஜுவல்லர்ஸ் என்ற பெயரில் மீண்டும் யாழ் நகரில் கால் பதித்துள்ளது என்பதை அனைவருக்கும் மனமகிழ்ச்சியுடன் அறிய தருகின்றோம்
0094212224221
0094769726525
இல 01, மாநகரசபை கட்டிடம் கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
(லிங்கம் கூல்பார எதிரில்)
கிளை
நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்
இல56 தெற்கு உஸ்மான் வீதி
தி.நகர். சென்னை600017





திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
11Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 Kgக்கான கட்டணம்
UK - 550/-, FRANCE - 700/-, GERMANY - 650/-, SWISS - 750/-, CANADA - 950/-
மற்ற நாடுகளுக்கும் விசேட கட்டணம் உண்டு.
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும்
216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
18, பிரதான வீதி, நெல்லியடி.
3-5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்
Tel : 0777554528
aramex
delivery unlimited
SKYNET
WORLDWIDE EXPRESS
The Partnership that delivers
DHL
EXPRESS

# அனுஷா ஜுவல்லர்ஸ்

(இல.497/3 கண்டி வீதி, கிளிநொச்சி)

உரிமையாளர்
0212284144

இந்த புதுக்கடையினை
இறைவன் திருவருள்
துணை கொண்டு திறந்து
வைக்கப்பட்டுள்ளது
என்பதை மகிழ்ச்சியுடன்
அறிய தருவதுடன்
அன்புடன் அனைத்து
வாடிக்கையாளர்களையும்
அன்புடன்
அழைக்கின்றோம்







இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 29.04.2018 அன்று வெளியிடப்பட்டது.